ஜெயம்
எமது பால் என்றும் பாதுகாப்பானது
நியாயமான விலை
தரமான சுவை...
வீட்டுக்கு வீடு விநியோகம்
தொடர்புகளுக்கு:
0652240014
0652240047
0263207229,
0773891946



அறைவு 02 இயம் 05 August 31- 06.09, 2013

# மலைமுரசு
MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை – 25.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 16 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை


# எமது நிலம் எமக்கு வேண்டும் எமது உறவுகள் எம்மிடம் வர வேண்டும்

## கிழக்கு மக்கள் வேண்டுகோள்



கிழக்கில் திருகோணமலைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை விவகாரங்களுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களிடம் மக்கள் தமது நிலத்தில் தம்மை மீளக் குடியமர்த்த வேண்டும் என்பதையும், காணாமற் போன தமது உறவுகளின் நிலை தொடர்பாகச் சரியான தகவல்களைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் உருக்கமான வேண்டுகோளைப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த 28ம் திகதி புதன் கிழமை கிழக்கிற்கான தனது பயணத்தின் போது திருகோணமலைக்கு வருகை தந்த அவர் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் கிழக்கு மாகாணத்தின் கீழ்வரும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டச் செயலாளர்களை சந்தித்து உரையாடியிருந்தார்.

அதன்போது திருகோணமலை மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் திரண்ட மக்கள் மேற்கொண்டிருந்த ஆர்ப்பாட்டங்கள் கணத்திற்குக் கணம் மாறிக் கொண்டிருந்ததைக் கேட்க முடிந்தது.

காணாமற் போன உறவுகளை மீட்டுத்தருமாறு ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் தொனி திடீரென நவநீதம்பிள்ளை அவர்களின் வருகைக்கு எதிரானதாக ஒலித்தது. பின்னர் அத் தொனியும் 15

திருமலை வளாக விவகாரம்

## ஆராய்வதற்குக் குழு நியமனம்

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் திருகோணமலை வளாகத்தைத் தனிப்பட்ட நலன்களுக்காகச் சிலர் வேறு பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் முயற்சிகள் முன்னெடுக்கப்படும் விடயம் வெளியாகியதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண சபை அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக எதிர்கட்சித் தலைவர் திரு.தண்டாயுதபாணி அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

கடந்த வாரம் இவ் விடயம் ஊடகங்கள் ஊடாக வெளித் தெரியத் தொடங்கியவுடன் உடனடியாகத் தனிநபர் பிரேரணையொன்றை கிழக்கு மாகாணசபையில் முன்மொழிவதற்கான ஏற்பாடுகளில் எதிர்கட்சித் தலைவர் ஈடுபட்டிருந்தார். எனினும் கிழக்கு மாகாணசபை அமர்வுகள் 27ம் திகதி நடைபெறவிருந்ததால் இத் தனிநபர் பிரேரணையை விவாதத்திற்கு எடுப்பதில் சிக்கல் நிலை காணப்பட்டது. 15

## இந்தியத் தமிழர்கள் கிண்ணியாவில் இல்லை

இம்ரான் மஹ்ருவ்

இந்தியத் தமிழர்கள் என்று எவருமே கிண்ணியாவில் இல்லை. ஆனால் அவ்வாறு இருப்பதாக அரச புள்ளிவிபரங்களில் காட்டப்படுவதற்கு சூட்சுமமாக வேறு காரணங்கள் இருக்கின்றனவா? இதனூடாக இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகையை குறைத்துக்காட்ட அரசாங்கம் சதி செய்துள்ளது என கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

சனத்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையின் 15

## தங்கையின் பெயரில் மரணச் சான்றிதழ்

(மதன்)



சவூதியில் மரணமான பணிப் பெண்ணின் மரணச் சான்றிதழ் அவரின் தங்கையின் பெயரில் கிடைக்கப் பெற்றுள்ளதைக் கண்ணுற்ற அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

மூதூர், தெஹிவத்தைக் கிராமத்தைச் சேர்ந்த திருமதி நடேஸ் யமுனாராணி மாரடைப்புக் காரணமாக சவூதி, தமாமில் ஜீலை மாதம் மரணமாகியுள்ளார்.

கடந்த 24ம் திகதி அவரது சடலத்தைப் பெற்றுக் கொண்ட உறவினருக்கு அவரது 15

## நவியும் ஹக்கீமும் அந்தரங்க ஆலோசனை

(மீனோடைக்கட்டு பைஷல் இஸ்மைல்)

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் பேச்சுவார்த்தை நடத்திய அறையில் மாத்திரமின்றி, அறைக்கு வெளியிலும் இருக்க வேண்டாம் என அமைச்சர் மற்றும் அமைச்சின் பாதுகாப்பு அதிகாரிகள் ஊடகவியலாளர்களுக்கு உத்தரவிட்டனர்.

நீதியமைச்சின் அழைப்புக்கு அமைய இந்த நிகழ்வு குறித்து செய்திகளை சேகரிக்க ஊடகவியலாளர்களும், 15

## மீனவருக்கு நுண்கடன்

மட்டக்களப்பில் மீனவருக்கான நுண்கடன் திட்டமொன்றை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் அறிமுகஞ் செய்துள்ளது.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இத்திட்டமானது வடக்கு கிழக்கெங்கும் வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய கிழக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த மீனவர் சங்கங்களின் 50 அங்கத்தவர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

மாவட்ட மற்றும் கிராமிய மீனவர் சங்கங்களின் ஊடாகவே இக்கடன் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிகின்றது. மீன் பிடியுடன் தொடர்புடைய ஏனைய முயற்சிகளையும் உருவாக்குவதே இக்கடன் திட்டத்தின் நோக்கமாகும் எனத் தெரிகிறது.

## அந்தப்புரத்து ஆசைகள்.....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042


## வணக்கம்

### இந்திய சினிமாவும் இலங்கைத் தமிழரும் !

அண்மையில் சிங்கம் 2 என்ற படத்தைப் பார்க்கக் கிடைத்தது. அசகாயசூரக் கதாநாயகத்துவத்தின் மொத்த வெளிப்பாடாக வரும் எத்தனையோ தமிழ்நாட்டுச் சினிமாப் படங்களின் மற்றொரு வடிவமொன்றை மசாலா கலந்து சிறப்பாகத் தந்திருந்தார் இயக்குனர். "வீணி" வழிய நானும் இரசித்து விட்டு வெளியே வரும்போது தான் ஏதோ ஒரு விடயம் என்னைச் சுட்டது.

அப்படத்தில் தொலைதூரச் சுடு வீரனாகச் சிங்களவன் ஒருவனை காண்பித்து அருமையாக எம் மக்களிடம் பண வசூலைச் செய்த சிறப்புத்தான் அது. இந்த வகையில் அவ்வகைப்படங்களில் சூரியாவின் இரண்டாவது முயற்சி இது எனக் கொள்ளலாம். முதலாவது முயற்சி 7ம் அறிவில் ஈழத் தமிழர்களை ஏழு நாடுகள் சேர்ந்து அழித்தது கோழைத்தனம் என்ற வார்த்தையைச் சேர்த்துவிட்டு அனைத்து ஈழத் தமிழருக்கும் இப் படம் சமர்ப்பணம் என்று கூறியதை நினைவு கூறலாம்.

பொருளாதார வசூலை அள்ளிக் கொள்ள வேண்டுமாயின் இரண்டு எதிரெதிரான விடயங்களில் ஒன்றைத் தொட்டால் போதும் என்பது எழுதாத வரைவிலக்கணமாக தமிழ் நாட்டுச் சினிமாவில் இருக்கின்றது போலும்.

அவ்வெதிரெதிர் எண்ணக் கருக்கள் முறையே ஈழத்தமிழர் போராட்ட ஆதரவு அல்லது ஈழத் தமிழர் போராட்ட எதிர்ப்பு என்பனவே.

மாங்குளத்தைப் பார்க்காத மணிரத்னம் எடுத்த படம் தேசிய விருதுகளைத் தட்டிச் சென்றது. இவ் வழியில் 7ம் அறிவும், சிங்கம் 2ம் தமது நடையைக் கட்டுகின்றன.

போராட்ட எதிர்ப்பினை வெளிப்படுத்திய "மெட்ராஸ்கபே" சென்னையில் திரையிடப்பட்டால் வசூலை அள்ளிக் கொட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழர் போராட்டம் என்பது ஈழத்தமிழரின் சுதந்திரக் கனவின் வெளிப்பாடு என்பதை ஏனோ நாம் எல்லோரும் மறந்துவிட்டோம். சுதந்திரத்தை அனுபவிப்பதற்காக தேர்தெடுக்கக்கூடிய எத்தனையோ போராட்ட வடிவங்களில் ஆயுதப் போரும் ஒன்று. அதை மையப்படுத்தி நாம் நகர்வோமாயின் அவ்வாயுதத்தை ஏன் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கையேந்தினார்கள் என்பதை மறந்து விடுவது தவர்க்க முடியாது போய்விடும்.

ஆயுதப் போரின் வேணவா இன்னும் எம்முள் எஞ்சிக் கிடப்பதால்தான் அதைத் தொட்டுத் தொட்டுப் பணம் பண்ண இந்தியச் சினிமாவாலும் இலங்கையின் பத்திரிகைகளாலும் முடிகின்றது. தலைவரின் படத்தைப் போட்டுப் பணம் பண்ணும் பத்திரிகைகள் இன்னும் எம்முள் கடுமையாக விற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

வெளிப்பாடு ஆயுதப் போர் என்றால் அதன் உள்ளீடு என்னவாக இருக்கும் எனச் சிந்தித்தால் யாரும் உயிருடன் இருக்கின்றார்களா? என்ற தேவை எமக்கு இல்லாது போய்விடும்

## பிச்சைக்காரர்களைக் குறிவைக்கும் "பொதுநலவாயம்"

பொதுநலவாய மகாநாட்டை முன்னிட்டு கொழும்பிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் உள்ள சுமார் இருநூறு பிச்சை எடுப்பவர்களுக்கு இராச மரியாதை வழங்கப் பட்டுள்ளது. அம்மரியாதையின் நிமித்தம் அவர்கள் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையில் சிறைபடுத்தப்பட்டிருந்தனர். தற்போது இவர்கள் இருநூறு பேரும் ரிதிகமவிலுள்ள சமூக சேவைத் திணைக்களத்தின் பராமரிப்பு நிலையத்திற்கு மாற்றப்படவுள்ளனர். நீதிமன்றக் கட்டளையின் பேரிலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது




## "நாமலை நோக்கி அலறியவர் கைது"

ஹம்பாந்தோட்டையில் வைத்து நாமல் இராசபக்சவின் கூட்டத்திற்கு ஒருவர் இடையூறு விளைவித்துள்ளார்.

யட்டிநுவர, கொட்டாபிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் நாமல் ராஜபக்ஸ பேச முனைந்த போது அக் கூட்டத்திலிருந்த ஒருவர் தமது பிரதேசத்தில் அபிவிருத்தி எவையும் செய்யப்படவில்லை என கூச்சலிட்டதால் கூட்டத்தை இடைநிறுத்திய நாமல் அவ்விடத்தை விட்டகன்றார்.

இதனைத் தொடர்ந்து கூட்டம் முடிவுக்கு வந்ததுடன் கத்தியவரும் கைது செய்யப்பட்டார்.

## "இடைநிலைக் கடற்படை வீரர்களுக்கான பயிற்சி நிறைவு"

இடைநிலைக் கடற்படை வீரர்களுக்கான பயிற்சி நெறியைப் பூரணப்படுத்திய கடற்படையினரின் நிறைவுநாள் கடந்த 24ம் திகதி திருமலைக் கடற்படைத் தளத்தின் "அட்மிறல் வசந்த கரண்னகொட" மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி கொமடோற் ஆர்.பி. திசானாயக்க இவ் விழாவில் கலந்து சிறப்பித்திருந்தார்.

## "நிலாவெளியில் வெண்பெண் நீரில் மூழ்கினார்"

ஐரோப்பிய நாடொன்றில் இருந்து இலங்கைக்கு உல்லாசப் பயணம் வந்த பெண் நிலாவெளிக் கடலில் நீரில் மூழ்கியுள்ளார். 24ம் திகதி இலங்கைக்கு வந்த இப்பெண்ணும் அவரது ஆண் துணையும் 27ம் திகதி நிலாவெளி கடலில் நீராடிய போது மோதிய பெரும் அலையொன்றினால் மூழ்கடிக்கப்பட்டுள்ளார். காவல் துறையினர் அவ்விடத்தில் கடமையில் இருந்ததால் அவர்களது துரித நடவடிக்கையால் இவர் மீட்கப்பட்டு, சிகிச்சைகளுக்காக நிலாவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, வைத்திய உதவியின் பின் வெளியேறியுள்ளார்.



## "புல்மோட்டை பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது"

**ஆர். அன்வர்** - கிழக்கு மாகாண சபை உறுப்பினர்

## சரியும் ரூபா....அதிகரிக்குமா விலைகள் ?

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையிலுள்ள தமது குறுங்காலப் பண முதலீடுகளை டொலரை நோக்கித் திருப்பி வருவதால் டொலருக்கு எதிரான இலங்கையின் ரூபா கடும் சரிவை எதிர்கொள்கின்றது.

ஆசிய நாடுகளில் பெரும்பாலான நாடுகளைப் பாதித்துள்ள இச்சரிவினால் டொலரின் விலைக்கு எதிராக அந்நாட்டு நாணயங்களின் பெறுமதி கடுமையான சரிவைப் பதிவு செய்கின்றன.

இலங்கையின் குறுங்காலப் பணமுதலீட்டு முறிகளுள் ஒன்றான திறைசேரி உண்டியல்களில் முதலீடு



செய்திருந்த பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அமெரிக்க நிதிச் சந்தையை நோக்கித் தமது முதலீடுகளைத் திருப்பியிருப்பதால் டொலரின் அவ்விட விலை (Spot Rate) 132.80 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதனால் இலங்கையில் நுகர்வுப் பொருட்களுக்கு விலை அதிகரிக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிகின்றது.

## சூடைக்குடா மீள் குடியேற்றம்

சம்பூர் கூனித்தீவு கிராம சேவையாளர் பிரிவுட்குட்பட்ட சூடைக்குடா பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அக்கிராமத்திலேயே மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2006 யுத்தகாலப்பகுதியில் இடம்பெயர்ந்த இம்மக்கள் தற்போது வரை கிளிவெட்டி நலன்புரி நியைத்திலேயே தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக் குடும்பங்களில் சுமார் 56 குடும்பங்கள் தமது காணிகளில் மீளக்குடியேறும் பொருட்டு அவற்றைச் சுத்தப்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளனர். இந் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நிகழ்ந்தது. காணிகளைச் சுத்தப்படுத்தும் அனுமதியை முப்படையினரும் புடைசூழ திருமலை மாவட்ட அரச அதிபர், மூதூர் பிரதேச செயலாளர் முன்னிலையில் மக்களுக்கு வழங்கினார்.


காடாகிக் கிடக்கும் பிரதேசங்கள்


பிள்ளையார் கோவில் பூசை

## "வங்கி அதிகாரி விபத்தில் பலி"

ஏறாவூர் நகரில் இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற முச்சக்கரவண்டி மற்றும் துவிச்சக்கர வண்டி விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வங்கி முகாமையாளர் நண்பகல் வேளையில் மரணமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏறாவூரைச் சேர்ந்த முஹம்மது காஸிம் முஹம்மது பாறூக் எனும் வாழைச்சேனை மக்கள் வங்கி முகாமையாளர் உயிரிழந்துள்ளார். இவ்விடயத்தைக் கேள்வியுற்ற முச்சக்கரவண்டிச் சாரதி காவல்துறைத் தடுப்பிலிருந்த போதே அதிர்ச்சிக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி நெறிகள்

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் சான்றிதழ் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் கணிணி (மென்பொருள்), தையல், ஆயுர்வேத சிகிச்சை முறை, நீர்க்குழாய் பொருத்துதல், அழகுக்கலை, மொழிப்பயிற்சி,கைப்பணிப் பொருட்கள், சமையல்,சிற்பக்கலை, நாட்டியம், நடனக்கலை, மக்கள் தொடர்பாடல், மேசன், பூங்கா அலங்கரித்தல், மின்சார தொழில் நுட்பம், கணிணி(வன்பொருள்) ஆகிய பாடநெறிகள் நடாத்தப் படவுள்ளது. இவற்றுள் கணிணி (மென்பொருள்), தையல், ஆயுர்வேத சிகிச்சை முறை, நீர்க்குழாய் பொருத்துதல், அழகுக்கலை ஆகிய பயிற்சி நெறிகள் இலவசமாகக் கற்பிக்கப்படும்.

இப்பயிற்சி நெறிகளைத் தொடர விரும்புவோர் எதிர்வரும் 2013 செப்டெம்பர் மாதம் 01ம் திகதி தொடக்கம் 08ம் திகதிவரை லவ்லேனில் அமைந்துள்ள எமது பயிற்சி நிலையத்திற்குச் சமுகமளிக்கவும். (இலங்கை மின்சார சபைக்கு அருகாமையில்)

தொடர்புகளுக்கு-
நிலையப் பொறுப்பதிகாரி,
லவ்லேன் பயிற்சி நிலையம்,
லவ்லேன்,
திருகோணமலை.

தொலைபேசி-071-7104581, 026-2053606

(இப்பயிற்சி நெறிகளின் சான்றிதழானது NVQ ஆரம்ப நிலைச் சான்றிதழாகும்.)

## வாரம் ஒரு சலனப்படம்

படப்பிடிப்பு
தீபா



இந்த வாகனத்திற்கு புகை அனுமதிப் பத்திரம் கொடுத்தது யார்?

# வில்லூன்றி கந்த சுவாமி கோயில் வருடாந்த தேர்த்திருவிழா

21.08.2013 புதன் கிழமை அன்று காலை 9.00 மணியளவில் 250 வருடம் பழைமை வாய்ந்த திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் வருடந்த மகோற்ஸவ விஞ்ஞாபனம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தஷிண கைலாசமெனப் புகழ்பெற்றதும் ஞானப்பாலுண்ட திருஞான சம்மந்தரின் தேவாரப்பதிகத்தினாலும் அருணகிரிநாத சுவாமிகளின் திருப்புகழினாலும் ஏத்திப் போற்றப்பட்டதுமான திருகோணமலை நகரிலே இராமபிரான் தனது வில்லை ஊன்றியமையால் வில்லூன்றி என போற்றப்படும் வில்லூன்றி கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 04.09.2013 புதன் கிழமையன்று தேர்த்திருவிழாவும் 05.09.2013 வியாழனன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற உள்ளது.

இவ்வாலய பூஜைகளை ஆலய பிரதம சிவாச்சாரியாமணி சிவஸ்ரீ சு.சுதாகரக்குருக்கள் அவர்கள் நடாத்தி வருகிறார்.



# பொத்துவில் ஏர்டெல் நிறுவனக் கோபுரத்தால் சர்ச்சை

(மீனோடைக்கட்டு பைஷல் இஸ்மைல்)



ஏர்டெல் நிறுவனம் பொத்துவில் பிரதேசத்தில் தனது சேவையினை விஸ்தரிப்பு செய்வதற்கு மக்கள் செறிந்து வாழும் பழைய காதியார் வீதியில் ஒரு காணியினை குத்தகைக்கு பெற்று தொலைத்தொடர்பு கோபுர நிர்மான ஆரம்பக் கட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது குறித்த கோபுரத்தால் சுற்றுச்சூழலுக்கும், குறித்த பகுதியில் வாழும் மக்களுக்கும் ஏற்படும் பாதிப்புக்களை உணர்ந்த அனைவரும் மக்கள் வாழாத திறந்த வெளியில் குறித்த கோபுரத்தை நிறுவுமாறும் தற்போது மேற்கொள்ளும் வேலையினை நிறுத்துமாறும் ஜனநாயக முறைப்படி தங்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து இந்த கோபுர நிர்மாணிப்புப் பணி இடைநிறுத்தப் பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக 22.08.2013 ஆம் திகதி பொத்துவில் மக்களுக்கும், ஏர்டெல் நிறுவன அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

குறிப்பிடப்பட்ட நிறுவனம் சார்பாக சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி வைத்தியர் அனல்ட் பூரணமற்ற முறையில் தெளிவற்ற விளக்கத்தை கொடுத்ததன் காரணத்தால் இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. குறித்த வைத்திய அதிகாரி மக்களை வேறு பக்கமாக தனது கருத்தினால் திசை திருப்ப முற்பட்டபோதே இந்த குழப்பநிலை ஏற்பட்டு, குறித்த கலந்துரையாடலில் எவ்வித முடிவுகளும் இல்லாமல் முடிவுக்கு வந்தது.

பொத்துவில் பிரதேசத்தில் எந்த வேலைகளை யார் மேற்கொள்வதாக இருந்தாலும் அந்த வேலைகள் தொடர்பாக குறித்த நிறுவனம் அல்லது வேறு எந்த அமைப்பாக இருந்தாலும் பொத்துவில் பிரதேச சபையின் அனுமதியை முதலில் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு பெற்றுக்கொண்டதன் பின்னர்தான் குறித்த ஏர்டெல் நிறுவனம் தங்களின் வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்விடயம் தொடர்பில் குறித்த நிறுவனத்துடன் இடம்பெற்ற கூட்டம் மக்களை ஏமாற்றுவற்கு மேற்கொள்ளப்பட்டதா என்ற சந்தேகமும் குழப்பநிலையும் பொதுமக்களிடத்தில் தோன்றியுள்ளது.

# தூய அன்னை வேளாங்கன்னி ஆலய 25 வது ஆண்டு நிறைவு விழா

திருமலை பள்ளத்தோட்டம் தூய அன்னை வேளாங்கண்ணி ஆலய 25வது ஆண்டு நிறைவு விழா கடந்த 16.08.2013 அன்று வருடாந்த கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகியது.

திருமலையில் இருந்து நிலாவெளிக்குச் செல்லும் வழியில் 3ம் கட்டை சந்திக்கு முன்பாக பள்ளத்தோட்டம் என்னும் மீனவ கிராமத்தில் இவ்வாலயமானது அமைந்துள்ளது. 1988ம் ஆண்டு கட்டப்பட்ட இக்கிறிஸ்தவ தேவாலயமானது பல இன்னல் களுக்கு மத்தியில் கட்டப்பட்டு வருடா வருடம் பூசை நிகழ்வுகள் நடைபெற்று வருவது வழக்கம்.

தற்போது தேவாலயம் கட்டப்பட்டு 25 வருடங்கள் நிறைவு பெற்றுள்ளது. ஆகவே இவ்வருடம் முன்புபோலல்லாமல் மிகவும் சிறப்பாக விழாவினை நடாத்த வேண்டும் என தீர்மானித்து, 24ம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் அன்னை வீதி உலா வலம் வந்து திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

இத்தேவாலய பூசை மற்றும் போதனைகள் அருள்மணி ச.சகாய ஜான் பிள்ளை அவர்களால் மேற்கொள்ளப பட்டது குறிப்பிடத்தக்கது.



# பாலம்போட்டாறு கிராமத்திற்கு குடிநீர் விநியோகம்

தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலம் போட்டாறு (பத்தினிபுரம்) எனும் கிராமத்திற்கு, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் அவர்கள் குடிநீர் விநியோகம் செய்வதற்கான பிரதான இணைப்பு வசதியினை ஏற்படுத்தி தந்துள்ளதாக அக்கிராம மக்கள் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில் தாம் பல வருட காலமாக குடிநீர் இணைப்பு இன்றி சிரமப் பட்டதாகவும் தற்போது ஏற்படுத்தித் தரப்பட்டுள்ள வசதி பெரும் உதவியாக இருக்கிறது எனவும் தெரிவித்தனர்.

சுமார் 300 மீற்றர்க்கு அதிகமான இக்குடிநீர் இணைப்பினால் பல குடும்பங்கள் நன்மையடைய இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த பகுதிக்கு சென்ற ஜெனார்த்தனன் அவர்கள் அக் குடிநீர் இணைப்பினை பார்வையிடுவதையும். மக்களுடன் உரையாடுவதையும் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணசபைத் தேர்தலும் முஸ்லிம் கட்சிகளும்

இந்த நாட்டில் இன்றுவரை 24 பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அறியமுடின்கிறன. இதில் கடைசியாக தாக்குதலுக்குள்ளான பள்ளிவாசல் கிராண்ட்பாஸ் பள்ளிவாசலாகும். இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் அரச உயர் மட்டத்திலுள்ளவர்கள் எவரும் இன்றுவரை எந்தவித கேள்விகளும் கேட்கவில்லை. இதுபற்றி சொல்லப்போனால் எமது நாட்டின் ஜனாதிபதி மூவின மக்களின் வாக்குகளைப் பெற்றவர் கூட இந்த பள்ளிவாசல் தொடர்பில் முஸ்லிம் மக்களை சமாதானப்படுத்தும் நோக்கிலாவது ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. ஜனாதிபதியின் இந்தச் செயலினால் முஸ்லிம் மக்கள் அதிருப்தியடைந்து காணப்படுகின்றனர்.



இன்றைய காலகட்டத்தை சற்றுப் பார்போமாயின், எதிர்வரும் மாதம் மூன்று மாகாணங்களுக்கான தேர்தல் நடைபெறும் காலமாகும். இந்த நேரத்தில் சகல கட்சிகளும் தேர்தல் பிரச்சாரங்களை செய்து தங்களது கட்சிக்கு வாக்குகளை சேகரிக்க முனைந்துவரும் இந்த சூழ்நிலையில் முஸ்லிம் மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் நோக்கிலாவது ஜனாதிபதி இந்தப் பள்ளி விவகாரம் குறித்து பேசியிருந்திருக்கலாம். ஆனால் அவருக்குத் தெரியும் முஸ்லிம் மக்களின் வாக்குகளை எப்படிப்பெறுவதென்று, அதற்காகத்தான் அவர் முஸ்லிம் அமைச்சர்மார்களை வைத்திருக்கின்றார்.

அவர் பேசாவிட்டாலும் முஸ்லிம் அமைச்சர்கள் தங்களின் அமைச்சுப் பதவிகளை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் எப்படியாவது முஸ்லிம் மக்களை சமாதானப்படுத்தி வாக்குகளை பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையிலேயே தான் இன்று ஜனாதிபதி காணப்படுகின்றார்.

எமது நாட்டிலிருந்த ஜனாதிபதிகளில் மஹிந்த ராஜபக்ஷ ஒரு விஷேடமான திறைமைசாலியும், புத்திசாலியுமாகும். அது மாத்திரமல்லாமல் அரசியலில் நன்கு அனுபவம் வாய்ந்த ஒரு திறமைசாலியும் கூட, அந்தவகையில் முஸ்லிம் கட்சித் தலைவர்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்களைக் கொடுக்கும்போது யாருக்கு எந்த அமைச்சுப் பதவியைக் கொடுத்தால் நல்லம், எங்கெங்கே முஸ்லிம் அமைச்சர்களை நியமிக்கவேண்டும் என்று மிக புத்திசாதிரியத்துடன் நடந்துகொண்டு அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கியுள்ளார்.

அந்தவகையில், கிழக்கு மாகாண பகுதிக்கு அதாஉல்லாவை அமைச்சராகவும், வடக்கு மாகாண பகுதிக்கு றிசாத்தை அமைச்சராகவும், மத்திய மாகாண பகுதிக்கு றவூப் ஹக்கீமை அமைச்சராகவும் மற்றும் ஏனைய பகுதிகளுக்கு யாராருக்கு அமைச்சுப் பொறுப்புக்களை கொடுத்தால் முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியுமோ அதற்கேற்றாப்போல் நாட்டின் எல்லா பாகங்களுக்கும் மிகப் பொருத்தமான முஸ்லிம் எம்.பிக்களை தெரிவு செய்து வழங்கப்பட்டவைகள் தான் இந்த அமைச்சுப் பதவிகள்.

இன்று நாட்டின் பல பாகங்களிலும் தொடராக பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல் இடம்பெற்றுவரும் இந்நிலையிலேயே வடபகுதியில் அமைச்சுப் பதவியைப் பெற்ற அமைச்சர் றிசாத் தன் அமைச்சுப் பதவியை தக்க வைத்துக்கொள்வதற்காக கூறியிருக்கின்றார். நாட்டிலுள்ள முஸ்லிம் மக்களாகிய நாம் ஜனாதிபதிக்கு ஒரு கடன்பட்ட கடனாளிகளாக வாழ்ந்து வருகின்றோம். இந்த கடனை தீர்ப்பது என்றால் இந்த வடமாகாண சபை தேர்தலில் நாம் அணைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும். இவ்வாறு வாக்களிப்பதன் மூலம் ஜனாதிபதிக்கு நாம் பட்ட கடனை தீர்த்துக்கொள்ளலாம் என்று இந்தக் 'கடன்' கதையைக் கூறியிருக்கின்றார்.



கிழக்கு மாகாணத்திலுள்ள அமைச்சர் அதாஉல்லா அக்கரைப்பற்று மாநகரத்தில் அண்மையில் பல்லாயிரக்கணக்கான நிதியின் மூலம் ஒரு அபிவிருத்திப்பணியை ஆரம்பித்து வைத்து அந்த நிகழ்வின் போது அக்கரைப்பற்று புதுப்பள்ளிவாசல் பக்கத்தில் ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து வான வேடிக்கைகளும், இசைக் கச்சேரியும் நடாத்தி மக்களின் மனதிலுள்ள பள்ளிவாசல் உடைத்த சம்பவங்களின் 'கவனத்தை திசை திருப்பவதற்காக இவ்வாறு செய்து ஒரு சந்தோஷ குதூகலத்தில் இன்று தேசிய காங்கரஸின் தலைவர் அமைச்சர் அதாஉல்லாவும், அவருடன் இணைந்த மாகாண அமைச்சர் உதுமாலெப்பையும் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு சந்தோஷத்தில் காணப்படும் அமைச்சர் அதாஉல்லா தான் ஏதோ சாதனை புரிந்து விட்டேன் என்ற வீராப்போடும், மக்கள் தேசிய காங்கிரஸின் பக்கம் இருந்து கொண்டு தலைசாய்க்கின்றார்கள், நான் சொல்வதை மட்டும்தான் மக்கள் கேட்பார்கள் என்ற எண்ணத்தோடும் உள்ளார்.

இவ்வாறு காணப்படும் அமைச்சருக்கு அட்டாளைச்சேனையைச் சேர்ந்த மாகாண அமைச்சர் உதுமாலெப்பையும் கூட இணைந்து கொண்டு செயற்படுகின்றார். தேசிய காங்கிரஸ் சிறுபான்மை இனத்தவர்களுக்கு அதுவும் தமிழ் பேசும் இனத்தவர்களுக்கு குரல் கொடுக்கும் ஒரு கட்சியும், அதன் தலைமைத்துவமும் என்று அடிக்கடி மக்கள் மத்தியில் கூறிவரும் மாகாண அமைச்சர் உதுமாலெப்பையின் செயல் யாவும் எவ்வாறு என்றால் வேலிக்கு ஓணான் சாட்சி என்பதுபோலாகும்.

அது அவ்வாறிருக்க, கிழக்கு மாகாணத்தில் இணைந்து கொண்ட இரு அமைச்சர்களும் மக்களின் தேவைகளை அறிந்து செயற்படவேண்டும். இது அவ்வாறில்லாமல் தாங்கள் போகும் பாதையில்தான் மக்கள் வரவேண்டும். இல்லை என்றால் அந்த மக்கள் எங்களுக்குத் தேவையில்லை என்ற கடமைப்பாட்டுக்கு மத்தியில் நடந்து கொள்கின்றனர்.

தேர்தல் வந்தால் மட்டும்தான் மக்களும் அவர்களின் வாக்குகளும், உதவிகளும் தேவைப்படுகின்றது. அது இல்லை என்றால் யாருமே தேவையில்லை என்றெண்ணத்தில் வாழும் இரு அமைச்சர்களும் எதிர்காலங்களில் தேர்தல் ஒன்று இல்லை என்ற எண்ணத்திலும், தாங்கள்தான் தொடராக அமைச்சுப் பதவிகளில் இருப்போம் என்ற ஆணவத்திலும் தங்களையே மறந்தவர்களாக இன்று இசை வெள்ளத்தில் உலா வருகின்றார்கள். நல்லா இணைந்து கொண்டார்கள் இரு அமைச்சர்களும்.



இன்று நாட்டில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக சில தீய சக்தியினர் செயல்பட்டு சிறுபான்மை இனத்தவர்களின் பொருளாதாரங்களை முடக்கி அவர்களை தங்களின் காலடியில் தக்கவைத்துக்கொள்ள எத்தனிக்கும் பெரும்பான்மை இனத்தவர்கள் மேற்கொண்டு வரும் இந்த தருவாயில் அதற்கு எதிராக குரல் கொடுக்காமல் ஆயிரக்கணக்கில் பணத்தினை செலவு செய்து கொழும்பிலிருந்து வான வேடிக்கைகளை கொண்டுவந்து வெடிக்கவைத்து இசைக் கச்சேரியையும் நடாத்தி வருகின்றார் அமைச்சர் அதாஉல்லா.

இந் நிகழ்வில் குறிப்பிட்ட அமைச்சர் பேசுவதற்கு முன்னால் ஆங்கில இசை வாத்தியங்களை இசைக்க வைத்து டிரம்ஸ், கிட்டார், ஆர்கன் போன்றவைகளின் ஒலியினை இசைக்கவும் அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது இது இன்றைய காலங்களாகும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது மக்கள் மத்தியில் பேசுவதற்கு முன்னர் பல சோகப்பாடல்களையும் சோகக் கதைகளையும் சொல்லிச் சொல்லி பாமர மக்களை ஏமாற்றி அவர்களிடம் பொய்யான பல வாக்குறுதிகளையும் கொடுத்து வாக்கு வங்கியின் எண்ணிக்கைகளை கூட்டிக்கொண்டு இரு அமைச்சுக்களையும் பெற்ற தேசிய காங்கிரஸ் இன்று தாங்கள் மேடையில் பேசுவதாக இருந்தால் அதற்கு முன்னர் ஆங்கில இசை வாத்தியங்கள் இசைக்க வைத்து டிரம்ஸ், கிட்டார், ஆர்கன் போன்றவைகளின் ஒலியும் எழுப்பப்பட்டால் தான் இரு அமைச்சர்களும் பேசுவார்கள். அந்தளவுக்கு இரு அமைச்சர்களும் இன்று மாறிக் காணப்படுகின்றார்கள்.

அது மாத்திரமல்லாமல் அன்று அமைச்சர் அதாஉல்லா கிழக்கு மாகாண தேர்தல் பிரச்சாங்களின் போது முஸ்லிம்களின் உரிமைகளையும், உடமைகளையும், இருப்பிடங்களையும் பாதுகாக்கவும் அதனை தக்கவைத்துக் கொள்ளவும் செயற்பட்டுவரும் ஓரேயொரு கட்சி என்றால் அது தேசிய காங்கிரஸ் கட்சியே! ஆகும். நான் மத்தியில் அமைச்சராக இருக்கின்றேன். அதற்கு துணையாக மாகாணத்தில் உதுமாலெப்பை மீண்டும் அமைச்சராக வரப்போகின்றார், இனி எமது சமூகத்துக்கு தொடர்ந்தும் நல்லபலன் கிடைக்க இருக்கின்றது. எங்கள் மக்களுக்கு என்ன நடந்தாலும் அதற்கெதிராக குரல் கொடுக்க இரு அமைச்சர்கள் உள்ளோம். அதில் ஒன்று மத்தியில் உள்ளது, மற்றொன்று மாகாணத்தில் உள்ளது என்று இவ்வாறான பல பிரச்சாரங்களை செய்தவர்களா? இவ்வாறு நடந்துகொள்வது.



இன்று முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந் நிலைமையில் இப்படிப்பட்ட நிகழ்வுகளை நடாத்தி அதுவும் பள்ளிவாசலுக்கு பக்கத்தில் ஆங்கில இசை வாத்தியங்களை இசைக்க வைத்து அக்கரைப்பற்று மக்களின் மனதை காயப்படுத்தியும் இன்று முஸ்லிம் மக்கள் நிம்மதியாக பள்ளிக்கு போக முடியாதவர்களாகவும், வியாபாரங்களை சரிவர செய்ய முடியாதவர்களாகவும் ஒரு கேள்விக் குறிக்கு மத்தியில் முஸ்லிம் மக்கள் இருக்கின்ற இந்த நிலைமையில் அமைச்சர் அதாஉல்லாவும், அமைச்சர் உதுமாலெப்பையும் தங்களின் கடந்தகால நிலைமையை மறந்தவர்களாக நிம்மதியாக இசை வெள்ளத்தில் மிதப்பது சரியா? இச்செயல் ஒரு நியாயமானதாகத் தெரிகின்றதா? இதற்குத்தானா மக்கள் தங்களின் வாக்குகளை அள்ளிப்போட்டது? என்று இவ்வாறு பல கேள்விகளுக்கு மத்தியில் இன்று முஸ்லிம் மக்கள் காணப்படுகின்றனர்.

அடுத்து மத்திய மாகாணத்திலுள்ள அமைச்சர் றவூப் ஹக்கீம் அவரின் செயல் இன்று எவ்வாறு காணப்படுகின்றது என்றால் புத்தளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்ற வடமேல் மாகாண சபை தேர்தல் பிரச்சார கூட்டமொன்றில் கூறியுள்ளார்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் பெரிய பாவம் செய்துள்ளது. அப்பாவத்தை திருத்தும் வழி முறைகள் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அரசியலமைப்பின் 18வது சட்ட திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததன் மூலமே முஸ்லிம் காங்கிரஸ் வரலாற்றுத் துரோகம் ஒன்றைச்செய்து ஒரு பாவப் பட்டவர்களாக இன்று இருக்கின்றோம்.

18வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தினாலேயே மஹிந்த ராஜபக்ஷ ஆயுள் காலம் வரை நம் நாட்டின் ஜனாதிபதியாக போட்டியிடக் கூடிய வாய்ப்பு உருவானது, இல்லையென்றால் இன்னும் இரண்டு வருடங்களில் அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து போயிருக்க வேண்டும். இப்போதே அரசாங்கத்துக்குள் குழப்பம் ஏற்பட்டிருக்கும். அதுமட்டுமல்ல சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பலருக்குள் பதவிப்போட்டி ஏற்பட்டு கட்சி உடைந்திருக்கும்.

இவை எல்லாவற்றையும் இல்லாமல் செய்யத முஸ்லிம் காங்கிரஸ் 18வது சட்ட திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தது. அதுவே இன்று பெரிய பாவமாக மாறியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டே எதிர்க்கட்சி போல செயற்படுகின்ற ஒரேயொரு கட்சி சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் தான். இந்த துணிச்சல் வேறு எந்தக் கட்சிக்குமோ அல்லது தலைமைத்துவத்துக்கோ இது வராது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எப்படியாவது முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகிவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ஆனால் நாங்களாக விலகப்போவதில்லை. விரும்பினால் அவர்களே எங்களை வெளியில் அனுப்பட்டும் என்று கூறியுள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் செய்வதையெல்லாம் செய்துவிட்டு நாங்கள் இது போன்ற தவறினைச் செய்யப்போவதில்லை. என்று இப்போது தனது சோகமான கதையைச் சொல்ல வெளிக்கிட்டுள்ளது.

இது மாத்திரமல்ல ஒரு கிழக்கு மாகாண அமைச்சர் உதுமாலெப்பை தொலைபேசி மூலம் செய்யும் ஒரு சாதாரண வேலையைக் கூட இந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கோ அல்லது அமைச்சரவை அந்தஸ்துள்ள மிக முக்கிய அமைச்சுப் பொறுப்பிலிருக்கும் நீதி அமைச்சர் என்று சொல்லப்படக் கூடிய ஒரு அமைச்சராக இருக்கும் றவூப் ஹக்கீமுக்கு செய்ய முடியாதுள்ளது.

இந்த நிலைமையில் நாட்டில் இடம்பெறும் கூட்டங்களில் ஒரு வீராப்போடும், தான் மக்களுக்காக எதுவேண்டுமாலும் செய்துகொடுப்பது போலும் அமைச்சர் றவூப் ஹக்கீம் கூறுவார், நமது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கவும், மாற்றவும் திகழ்கின்ற ஒரேயொரு கட்சி அது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே இதை மக்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்லிவரும் ஒரு தேசிய கட்சியின் தலைவராகவும், அமைச்சராகவும் இருக்கின்ற றவூப் ஹக்கீமின் செயலானது வாய்ப் பேச்சில் மட்டுமே தவிர செயலில் அவரால் செய்து காட்ட முடியாது.

இந்நிலைமையில் ஒரு வீராப்பு வாசகத்தை மக்கள் மத்தியில் பேசுகின்ற அமைச்சர் எப்படியப்பா மக்களின் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பது என்று மக்களின் கேள்வியாகும். மக்களின் குறை நிறைகளை அறிந்து மிக தைரியத்தோடு செய்து கொடுக்க செயற்படுகின்றவர் தான் ஒரு கட்சியின் தலைமைத்துவ பொறுப்பில் இருக்கும் ஒரு தலைவருக்கு உள்ள கடமை. இது அவ்வாறில்லாமல் வாய்ப்பேச்சில் மட்டும் இருந்தால் போதாது அதை செய்து காட்டவேண்டியதும் ஒரு தலைவருக்குள்ள பொறுப்பாகும் என்பதையும் அமைச்சர் ஹக்கீம் புரிந்து கொள்ளவேண்டும். இதனை விட்டு விட்டு மக்களை ஏமாற்றிப் பிளைக்கும் ஒரு அரசியல் செய்ய முனைவது ஒரு சாதாரண மனிதனாலும் செய்ய முடியும் என்பதையும் அவர் அறிந்து கொள்ளவேண்டும். இவ்வாறேதான் இன்றைய முஸ்லிம் அரசியல் தலைவர்களும், அமைச்சர்களும் இன்று காணப்படுகின்றனர்.

இனி நமது விடயத்திற்கு வருவோம், இறுதியாக கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீதான தாக்குதல் ஒரு மர்மக் கதையல்ல. அந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள், அதன் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பது பற்றி எல்லா முஸ்லிம் அரசியல் தலைவர்களும் நன்கு அறிவார்கள். அதனால் தான் அவர்கள் இந்த விவகாரத்தில் ஈடுபட்டவர்கள் போன்று மக்களுக்கு எடுத்துக்காட்டி அடக்கி வாசிக்கின்றார்கள்.

முஸ்லிம் மக்களின் கோபம் தங்கள் மீது திரும்பி விடக் கூடாது என்பதற்காகவே ஆட்சியில் அமைச்சர்களாக இருக்கும் முஸ்லிம் அமைச்சர்களான அதாஉல்லா, றவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், பௌசி, பைசர் முஸ்தபா போன்றவர்கள் இந்த அரசுடன் ஒட்டிக் கொண்டு மக்களுக்காக நாடகம் நடிக்கின்றார்கள். இன்று முஸ்லிம் தலைவர்களாகவும், அமைச்சர்களாகவும் இருந்துகொண்டு வங்குரோத்து அரசியலைச் செய்யும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்களாகவும், சுமார் 24 பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டும் கூட அவர்களால் உரத்துக் குரல் கொடுக்க முடியாது உள்ளது.

இந்த அரசுக்குள் இருக்கும் எல்லா முஸ்லிம் அரசியல் கட்சிகளும் மக்களிடத்தில் தான் தனித்துவம் பற்றி பேசுவதும், உரிமை உரிமை என்று உரத்த குரல் கொடுப்பதும், முஸ்லிம்களின் பள்ளிவாசல் தாக்குதல்கள்களை பற்றி ஜனாதிபதியிடம் தட்டிக் கேட்பதாகவும் குத்துக்கரனமும், கும்மாளமும் அடித்துவிட்டுப் போய் மிக கோமாளித்தனமான முறையில் நடந்து கொள்வதும் அவர்களின் செயலேயன்றி மக்களிடம் பேசிவிட்டது போன்று நடந்து கொள்வதில்லை என்பதே மட்டும் உன்மையாகும்.

எனவே பொதுமக்களாகிய நாம் கடந்த காலங்களில் செய்த தவறினை நினைத்து நினைத்து மனம் வருந்துவதை ஓரம் கட்டிவிட்டு சரியான முறையில் பொதுமக்களின் தேவைகளை அறிந்து செயற்படும் அரசியல்வாதிகளை எதிர்காலங்களில் தேர்ந்தெடுக்கவேண்டும். மக்களுக்காக குரல்கொடுக்கக் கூடியவர் யார்? என்று சரியான முறையில் அடையாளம் காணவேண்டும். இனியாவது போலியான அரசியலைச் செய்ய முனையும் அல்லது எத்தனிக்கும் அரசியல்வாதிகளை ஓட ஓட விரட்டியடித்து நல்லவர்களை தெரிவுசெய்யச் சிந்திப்போமாக!

***மீனோடைக்கட்டு எம். பைஸல் இஸ்மாயில்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வெற்றி மீது சேறு பூச நடவடிக்கை

**அங்கஜன்**

சாவகச்சேரி சம்பவத்தினால் எனது பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இச் சம்பவத்தின் ஊடாக என் மீதும், எமது வெற்றியின் மீதும் சேறுபூசி மக்களிடமிருந்து என்னை பிரிக்க முற்படுகின்றனர் என்று வட மாகாண சபைத் தேர்தலின் ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணனியின் வேட்பாளரும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின், யாழ் மாவட்ட அமைப்பாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி சம்பவம் தொடர்பில் தெளிவுபடுத்தி தேர்தல் ஆணையாளருக்கு கமதமொன்றை அவர் அனுப்பிவைத்துள்ளதுடன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 27.08.2013 செவ்வாய்க்கிழமை இரவு 8.00 மணியளவில் சாவகச்சேரி பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் என் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதைத் தடுக்க வந்த எனது பொலிஸ் மெய்ப் பாதுகாவலர் திஸாநாயக்க துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து தற்பொழுது யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் தொடர்பில் எம்மால் யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் பொலிஸாரால் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. இச் சம்பவத்தில் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டது குமாரு சர்வானந்தன் என்பவரே என உறுதிப்படுத்தி பொலிஸில் பலர் சாட்சியமளித்துள்ளனர்.



இருந்த போதிலும் குறித்த நபர் குமாரு சர்வானந்தன் என்பவரை பொலிஸார் கைது செய்யமால் ஒரு பக்க சார்பாக எம் தரப்பு மீது மட்டும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். பொலிஸாரின் இவ்வாறான நடவடிக்கையானது கண்டனத்திற்குரிய விடயமாகும்.

மேலும், இது தொடர்பில் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளேன். எனவே, இச் சம்பவத்துடன் தொடர்புடைய குமாருசர்வானந்தன் கைது செய்யப்படாமையானது எனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

ஆகவே உடனடியாக இச் சம்பவத்துடன் தொடர்புடைய சர்வானந்தனை கைது செய்து நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரை வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றேன்.

இச் சம்பவத்தின் ஊடாக என் மீதும், எமது வெற்றியின் மீதும் சேறுபூசி மக்களிடமிருந்து என்னை பிரிக்க முற்படுகின்றனர். இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துவேன் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





"திருமலையில் நவநீதம் பிள்ளை அவர்கள்"

- இடது பக்கப் படங்கள் -

"திருகோணமலை மாவட்டச் செயலகத்திற்கு வருகை தந்த போது"

- வலது பக்கப் படம் -

"திருகோணமலை மாவட்டச் செயலகத்திற்கு முன் புறமாக காணமற்போன உறவுகளைத் தேடித்தருமாறு மக்களின் கவனயீர்ப்பின் போது"



## "மலைமுரசில் வெளியான இரண்டு செய்திகள் தொடர்பாக சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயப் பாடசாலை அபிவிருத்திக் குழுவால் அனுப்பப்பட்ட கடிதம் "

ஆசிரியர்,
மலைமுரசு,
திருக்கோணமலை.

அன்புடையீர்,

தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் முன்னேற்றம் கருதித் தங்கள் பத்திரிகையில் எமது பாடசாலைச் செய்திகளுக்குக் கரிசனையுடன் முன்னுரிமை கொடுப்பதையிட்டுப் பெருமகிழ்வெய்துகிறோம்.

எனினும், எங்கள் பாடசாலை தொடர்பாக இடம்பெற்றிருந்த இரண்டு செய்திகளிலும் சில குறைபாடுகள் காணப்படுவதால் அவற்றைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருவது எங்கள் கடமையென நாம் உணர்கிறோம்.

ஆகஸ்ட் 03 - 09 - 2013 இதழில் வெளியான தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய மாணவி சாதனை என்ற தலைப்பிடப்பட்ட செய்தியில், அச்செய்தியைத் தெரிவித்தவர் பாடசாலை அதிபர் எனக் குறிப்பிடப்பட்டு திரு.த.விஜயராஜேந்திரன் அவர்களை அதிபரெனக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் திரு.த.விஜயராஜேந்திரன் எக்காலத்தும் மேற்படி பாடசாலையில் அதிபராக இருந்தவரல்லர். ஒருசில நாட்கள் மட்டுமே பிரதி அதிபராகப் பணி புரிந்திருக்கிறார். அவர் தற்போது தி/சல்லி அம்பாள் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

அத்துடன் அச்செய்தியில் அம்மாணவியின் வெற்றிக்கு உறுதுணையாகப் பணியாற்றிய ஆசிரியர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருப்பின் தங்கள் செய்தி மேலும் சிறப்பானதாக அமைந்திருக்கும்.

அதேபோல் ஏப்ரல் 13.2013 இதழிலும் முன்பக்கப் பிரதான தலைப்புச் செய்தியாக எமது பாடசாலை மாணவியான செல்வி பிரபாகரன் சப்தவிக்கு இடமளித்ததையிட்டு நாங்கள் பெருமைப்படுகின்ற போதிலும் அச்செய்தியில்கூட அம்மாணவியின் வெற்றிக்காக உழைத்த பாடசாலை ஆசிரியர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

திருக்கோணமலையிலிருந்து வெளியாகும் ஒரே வார இதழ் என்ற வகையில் தங்கள் பத்திரிகை மென்மேலும் வளர வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துவதுடன் எதிர்காலத்தில் செய்தி சேகரிக்கும்போது சற்றுக் கூடுதலான கவனம் செலுத்தி இத்தகைய தவறுகள் நிகழாவண்ணம் செயற்படுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். நன்றி.

"முதலாவது செய்திக்குறிப்பைப் பெற்றுக் கொண்ட போது அக் குறிப்பில் கையொப்பமிட்டிருந்தவரை அதிபராகக் கருதியதாலேயே அவரது பெயரை அதிபர் என மலைமுரசு சேர்த்திருந்தது. அத் தவறுக்கு வருந்துகின்றேன். ஆனால் இரண்டாவது விடயத்தில் குறித்த மாணவியை நேரடியாக மலைமுரசு பேட்டி கண்ட போது அவர் குறிப்பிடத் தவறிய ஆசிரியர்களின் பெயருக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்" ஆ-ர்

## எத்தனை காலம் தான்......?

உலகில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற தலைவர்கள், சமயத்தலைவர்கள், சமூகத்தலைவர்கள், கல்விமான்கள், மற்றும் வழிபாட்டுக்கு உரியவர்கள் ஆகியோரின் பெயர்களை எமது பிரதேசங்களின் அனேக வீதிகள், ஒழுங்கைகள் மற்றும் நிறுவனங்களுக்கு சூட்டுவதை நாம் நன்கு அறிவோம்.

இவைகள் முறையான விதிகளுக்கேற்ப குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகாரத்துடனே சூட்டப்படல் வேண்டும் என்பதும் எமக்கு தெரிந்த விடயம். மேலும் பிரதேசமொன்றில் ஒவ்வொருவரும் தாம் விரும்பியவாறு பெயர்களை சூட்டமுடியாது.

ஆனால் சிலரின் விரும்பத்தகாத நடவடிக்கைகளின் காரணமாக மேற்படி விதிமுறைகளுக்கு புறம்பாக வீதிகளுக்கு விரும்பியோ விரும்பாமலோ பெயர் சூட்ட நிர்பந்திக்கப்படுகின்றது.

ஒரு வீதியை அல்லது ஒழுங்கையை அடையாளப்படுத்துவதற்கு அந்த இடத்தில் நடைபெறும் அல்லது ...பவங் களைக் காரணமாக ...ரதேசங்களில் பெயர்கள் ...ன. அவை நாளடைவில் மக்கள் மத்தியில் பழக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பெயராக மாறிவிடக் கூடிய, தவிர்க்க முடியாத நிலையும் உண்டு.

அப்படியொரு நிகழ்வு பாலையூற்று பிரதேசத்தில் இடம்பெற வாய்ப்புகள் இருப்பதாக தெரியவருகிறது. அங்குள்ள ஒழுங்கையொன்றை ஒரு சில




மதுப்பிரியர்கள் இரவு நேரங்களில் சனநடமாட்டம் இல்லாத வேளையில் உபயோகித்து வருவது வழமை.

அந்த மதுப்பிரியர்களின் பொழுது போக்கு நடவடிக்கைக்கு எவரும் எதிரானவர்கள் அல்ல. ஆனால் தங்கள் களியாட்டம் முடிவடைந்ததும் சுகாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் திண்மக்கழிவுப் பொருட்களையும் காலியான கண்ணாடி போத்தல்களையும் மற்றும் பியர்டப்பாக்களையும் சுக்குநூறாக உடைத்து குறித்த ஒழுங்கையில் வீசி வருவதால் சிறுவர்கள் உள்ளிட்ட பாதசாரிகளின் பாதங்கள் பாதிப்படைய

### ...நாட்டு நடப்பு...

வாய்ப்புண்டாகும் என்பதே சகலரினதும் கவலை.

இந்த இரகசிய, பாதுகாப்பான சூழலை மதுப்பிரியர்கள் தேர்ந்தெடுத்தமைக்கான காரணத்தை பிரதேசத்தின் நலன் விரும்பிகள் அறியாமல் அல்ல. அதாவது மதுப்பிரியர்களால் சுதந்திரமாக தத்தமது வீடுகளில் இக் களியாட்டத்தை நடாத்துவதற்குரிய தகுந்த சூழல் இல்லை என்பதையும் நலன்விரும்பிகள் அறிவர்.

மதுப்பிரியர்களின் குறித்த நடவடிக்கையினால் அந்த ஒழுங்கை "குடிகாரர் ஒழுங்கை" என இன்று அழைக்கப்பட்டு வருகின்றது. இது ஒரு தற்காலிக ஒழுங்கை என்பதாலும் அது வரைபடத்தில் குறிப்பிடாத காரணத்தினாலும் ஏற்கனவே இதற்கு உரிய விதத்தில் சட்டப்படி பெயர் சூட்டப்பட்டிருக்கவில்லை.

ஓர் அடையாளத்திற்காக மேற்படி பெயர் உபயோகிக்கப்பட்டாலும் அது மக்கள் மத்தியில் நன்கு பழக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட பெயராக நாளடைவில் மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் இவ்விதமான பெயர் குறித்த பிரதேசத்தில் கௌரவமாக வாழும் சகல சமூகங்களுக்கும் கலங்கத்தை ஏற்படுத்தாமலும் அப்பெயர் நிலைத்து நிற்காமலும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு மேற்கூறிய தவறை புரிபவர்களின் கையிலுள்ளதே தவிர சட்டத்தை கையில் எடுத்து தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கும் அரச அதிகாரிகளின் கையில் இல்லை என்பதை சகல தரப்பினரும் புரிந்து கொள்ளல் வேண்டும்.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வெள்ள நிர்வாணம்

பலரை பஞ்சைகளாகவும், பராரிகளாகவும், சிலரை சமூக சேவகர்களாகவும் ஆக்கும் சர்வ வல்லமை கொண்ட அந்தக் கனமழை விட்டபாடில்லை. கிராமியமாக சொல்வதென்றால் " கைம் பொஞ்சாதியின் கண்களைப் போல " வானம் அழுது கொண்டேயிருந்தது.

"மழை பெய்யத் தொடங்கி அத்துடன் ஐம்பத்தி இரண்டு மணித்தியாலங்கள் " கடந்து விட்டதாக மாவட்ட வான் சாஸ்திரிகள் நிலையம் அறிவிக்க வில்லை. ஐம்பது மணித்தியாலங்கள் தானாகின்றன என்று தேசிய பூமி சாஸ்திர வல்லுனர்கள் அறிவித்தார்கள். அவர்கள் மழை பெய்யும் என்றால் அது பெய்யாமல் விடுவதும் மழை பெய்யாதென்றால் அது பெய்வதும் இயற்கையோட சம்மந்தப்பட்ட விடயமென்று பூசி மெழுகுவதற்கு வாய்ப்பாக அவர்களது அரச உத்தியோகம் அமைந்து விடுவதும். அவர்கள் மானுடர்களுக்குள் பாக்கியசாலிகள் என்கின்ற அவேதங்களை நிறுவுவதற்கும் வாய்ப்பாகிப் போன விடயங்கள் பலவற்றுட் சில.

இவர்களது அறிக்கைகளை வாய், கைவைத்துக் காட்சி ஊடகங்கள் மிகைப்படுத்தி ஊளையிட்டவாறு நிவாரண ஏற்பாடுகளுள் தங்களை விளம்பரப்படுத்தத் தொடங்கியிருந்தன. மொத்தத்தில் மழையின் பெயரால் பலர் தங்கள் விலாசங்களைப் புதுப்பிக்கத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

மூன்று நாட்கள் தொடர்ச்சியாக வந்த விடுமுறையை நிம்மதியாகத் தண்ணீரிலேயே மிதந்து குளித்துக் களிக்கலாம் என்றிருந்த அந்த அதிகாரி ஜெகஜாலனை மாலையிலேயே மனைவி அபிதகுஜலாம்பாள் நச்சரிக்கத் தொடங்கியிருந்தாள். சாமுஸ்திரிகா லட்சணங்களுக்கு அப்பாற் பட்ட பர்வதங்களைப் போன்ற தனங்களையும் மாட்டினது போன்ற உதடுகளையும் கொண்ட அந்தத் தனவதியை ஜெகஜாலன் திருமணம் செய்ததில் ஒரு பெரிய தங்கமலை ரகசியம் ஒன்றும் ஒழிந்திருக்க வில்லை. ஆனாலும் அவனை அலைக்கழிக்கும் விரகதாபக் கனவுகளின் முடிவுகளாக உடலின் ஊறல்கள் உடைப்பெடுப்பதை நெறிப்படுத்த மசுவாதற்ற 'கைங்கரியங்களில் அவன் காலம் கழிப்பது யாமறிந்தது.

" மாலபட்டுப் போகுது எழும்புங்களன். ஊருக்க தண்ணி ஏறுதாமென்று சனங்கள் ஓடித்திரியுதுகள். நீங்க என்ன செய்யிறீங்க? போன தடவையும் இப்படித்தான் கொஞ்ச சாமான எடுக்கேலாம பொயிற்று. நீங்கதானே நிவாரணம் குடுக்கிறநீங்க. கொஞ்சம் நைசா துள்ளிக் கிள்ளி எடுத்தாத்தானென்ன குறஞ்சா போயிடும். அக்கையும் குறபட்டவ. தனக்கொன்றும் தரவில்லையாம் எண்டு"

மனைவியை நிமிர்ந்து பார்த்தான் ஜெகஜாலன். ஊதிப் பெருத்து உடைந்துவிடும் பலூனைப் போன்றிருந்த அவளைப் பார்க்க அவனுக்கு பூதமொன்றைப் பார்ப்பது போலிருந்தது. சகல நோயினையும் தன் உடலில் சுமக்கும் அவள் அதிகாரி ஜெகஜாலனுக்குக் கிடைத்த பெரிய தண்டனை தான்.

அபிதகுஜலாம்பாளை தன் நெஞ்சில் சுமந்தானோ...? இல்லையோ.? அடிக்கடி அந்த அரச வாகனத்தில் வைத்தியசாலைக்கு சுமந்து செல்லும் பாக்கியத்தை நிறையவே பெற்றிருந்தான். அவனது அரச வாகனம் அந்த பர்வதத்தை மட்டுமல்ல, பல கொடியிடைகளையும் சுமந்ததாகக் கதையுண்டு.

மனைவியின் நச்சரிப்புத் தாங்காது எழுந்தவன் எத்தனை தடவைகள் முகத்தை அலம்பினாலும் அதுவும் அந்த வானத்தைப் போல மப்பும் மந்தாரமுமாகவே இருந்தது. நிவாரணப் பணிகளுக்கென்று அவனுக்குப் பிரத்தியேகமாய் வளங்கப்பட்டிருந்த 'பஜரோ' வை வெளியே எடுத்தான். வாகனத்தின் ஏ.சி.யை இயக்கிவிட்டு உறங்கு நிலையிலிருந்த 'செல்போனை' யும் இயங்கு நிலைக்கு கொண்டு வந்த போதுதான் அவனுக்கு ஊரின் உண்மை நிலை புரிந்தது. சில நபர்களோடு தொடர்பு கொண்டு வெள்ள நிலையை விட நிறுவனங்களால் நிவாரணம் வழங்க உத்தேசித்துள்ள இடங்களை அறிந்து கொண்டான். மக்கள் பரபரப்பாக தாழ்நிலப் பகுதிகளை விட்டு மேட்டு நிலப் பகுதிகளை நோக்கி ஓடிக்கொண்டிருந்தனர். கடைகள் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தன. "வெள்ள நிர்வாணப் பணி" என்கின்ற பதாதையுடன் ஜெகஜாலனின் 'பஜரோ' நேராக 'தோரஹா ஏஜென்சி' முன்பாக வந்து சத்தமின்றி நின்றது.

மப்பும் மந்தாரத்தோடும் கணிணியில் அவன் வெள்ள நிவாரணப் பணி என்பதற்கு பதிலாக வெள்ள நிர்வாணப் பணி என்று கொட்டையெழுத்தில் எழுதினான். பதாதையை தமிழுணர்வோடு தரிசிக்கும் பாக்கியத்தை நகரில் எவருமே பெறாது போனது ஜெகஜாலன் செய்த அதிஷ்டமே. ஜெகஜாலனைக் கண்டதும் கடைமுதலாளி திகைப்பூண்டை மிதித்தவன் போலானான். பரபரப்பான வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த அவனது உற்சாகம் ஓடிஒழிந்து கொண்டது. இருந்தும் மரியாதைக்காக " ஐயாவுக்கு கதிரை எடுத்துப் போடுங்கோ " எனத் தன் ஊழியர்களைப்பணித்தான். அதிகாரி ஜெகஜாலனும் " அதொன்றுக்கும் அவசரமில்லை" என்பது போல சைகை செய்துவிட்டு கதிரையில் அமர்ந்தான்.

" எங்கட கடையின் நோக்கமே மக்களுக்கு சேவை செய்யுறது தானே ஐயா. நாங்களும் அம்பாற சுத்தித்தானே சாமான்களைக் கொண்டுவாறநாங்க. விலையும் முன்னப் பின்னதான் இருக்கும் எண்டாலும் ஒத்தருக்கும் இல்ல எண்டு சொல்லாத அளவுக்கு எங்கட்ட ஸ்ரொக் இருக்கு. ஓம் ". என்று தானடிக்கப் போகும் மண் கொள்ளையை மிக நாசூக்காக பிரசித்தம் பண்ணியது அங்கு நின்றவர்களுக்கும் புரிந்திருக்கும். " மன்னம்பிட்டியால போகேலாண்டா வேறென்னான் செய்யிற.." என்று அதிகாரி ஜெகஜாலனுக்கு ஒத்துதினான். ஏற்கனவே வெறுத்துப் போயிருந்த கடைமுதலாளிக்கு அதிகாரியின் ஒத்தூதல் பெரிய சாட்சியமாய் போனது அதிஷ்ரமென்றுதான் சொல்ல வேண்டும். " ஐயாவுக்கு இப்ப அவசரமில்லதான். நீங்க மக்கள கவனியுங்கோ" சிப்பந்திகளை விரட்டிக் கொண்டிருக்க வெள்ளமோ அதிகாரி குடியிருக்கும் தேனாட்டார் "யூக்கே" என பரிகாசமாய் அழைக்கும் உப்புக் கராச் பக்கம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது.

எட்டு மணி வாக்கில் முதலாளி அதிகாரி ஜெகஜாலனின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினான். "சொல்லுங்கய்யா... கதையோடு கதையா உங்கிட சாமான்களையும் கட்ட வேணும்தான் " என்ற முதலாளி, சாமான் என்கிற சொல்லுக்கு கொஞ்சம் அழுத்தம் கொடுத்து நமட்டுச் சிரிப்புடன் அங்கு நின்ற பெண்டுகள் பக்கம் தன் பார்வையால் துளாவிய வேளை " நீர் என்ன பிழையா நினைச்சிற்றீர். இது எனக்கில்ல. எழுவான் கரையில கொஞ்சம் கர்பிணித் தாய்மாரும் பாலூட்டும் தாய்மாரும் அகப்பட்டுப் போனாங்கெண்டு தகவல் வந்திருக்கு. அவங்களுக்கு அனுப்பத்தான் இதெல்லாம் " என்று நெளிந்தான் ஜெகஜாலன்.



" உங்களப் பத்தி தெரியாதா அய்யா. எங்களுக்கு எத்தன பிறைஸ் கொன்றோல் புடிச்ச நேரத்தில காலாவதியான சாமான்களையுமெல்லே மீட்டெடுத்துத் தந்து எங்களைக் காப்பாத்தினீங்கள். உங்களை யாரையா மறப்பான்."

" ஓமோம். ஆனால் உங்கட கடையப்பத்தி ஒரே கம்ளைன்ட்தான். பிட்டிசமும்தான். காலாவதியான உழுத்துப்போன சாமான்களை யெல்லாம் கலந்து வித்து இரெண்டு மூண்டு கடைகளையும் கட்டிப்போட்டீங்களாம் என்று ஒரே பிரச்சனைதான்."

" அதொண்டுமில்லை ஐயா, நாங்கள் பிறத்தியாக்கள்தானே. அதுதான் இவையளுக்கு எங்களோட பொறாமை. வேறொண்டுமல்ல."

"அதப்பத்தியெல்லாம் நீங்க கவலைப்படத் தேவையில்லை. நானிருக்கன். அதையெல்லாம் கவனிக்க. அதுசரி சாமான்களைக் கட்டுறீங்களா....?"

" என்ன....? பால்மா அதுகள்தானே? அதுகளும் தான் நான் சொல்றதையும் கட்டுங்க. பாவம். அங்கிருக்கும் அந்தச்சனம் சாப்பாட்டுக்கு என்ன செய்தோ? பால்மா பெரிய பெட்டியாப் போடுங்க. விஸ்கட், சோயா, பாமொயில், பருப்பு, கிழங்கு, சீனி, கருவாடு,மங்கோ சீஸ் ஏழேழு சாமானா கட்டுங்க. அப்பதான் குடுக்க வசதியா இருக்கும். அந்த தண்ணிக்க போய் பிரிச்சுக் கொண்டு நிக்கேலாதானே? " " பாமொயில், கருவாடெல்லாம் கர்பிணிகளுக்கு ஒத்துவருமே அய்யா......? "

"அந்தத் தாய்மாருக்கு அதெல்லாம் ஒத்துக்கொள்ளும். சும்மா கிம்மா கட்டைகளெண்டா அதுகள நினைச்சிங்க, அதெல்லாம் கருங்காலிக் கட்டைகள் அய்யா."

"அப்படியெண்டா காலாவதி யானதையும் கலந்து போடவே? " என்றான் முதலாளி கொஞ்சம் ரகசியமாக, " சீச்சி அந்த பாதகத்தை மட்டும் செய்திர வேணாம். நாளைக்கு ஒண்டிருக்க ரெண்டு நடந்தா நான்தான் பதில் சொல்லோணும்." " கையோட ஐயா வெள்ளத்தால பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்தவையெண்டு தோரகா ஏஜென்சியையும் ஒருக்கா விளம்பரப்படுத்திப் போடுங்கோ"

" அதுக்கென்ன, அது பெரிய விடயமல்ல. எங்கட அடுத்த புரோகிரஸ்ஸிவ் மீற்றிங்கில் உம்மட பெயரையும் சொல்ல வெச்சி மீடியாவுக்கும் குடுத்து விடுறேன் சரியே..." " அப்பத்தானே ஐயா, எங்கட ஊரில இருக்கிறவயளுக்கு எங்கட பவர் விளங்கும்... வில்லப் பத்தி கவலப்பட வேணாம் ஐயா, இப்படி கஸ்ரப்படுகிற மக்களுக்காக உழைக்கிற உங்கட பெருமையை மற்றவைக்கும் நாங்க பெருமையா சொல்லிவைப்பம்." "சச்ச... நான் பெருமைக்காக இதச்செய்யல்ல. வலது கை குடுக்கிறத இடது கை தெரியப்படாது என்ற பொலிஸிதான் எனக்கும். ஆனா இதப்பத்தி ஆருக்கும் சொல்ல வேணாம். உமக்கும் எனக்கும் மட்டும் தான் இந்த விசயம் தெரியும். நீர் இந்த கோயிலுக்கெல்லாம் எவ்வளவு செய்யுறநீர், அந்தரத்துல தாங்கி தாங்கி நிண்டு காவடி ஆடுகிறநீரென்ன கடவுளுக்கு தெரிந்தாற் போதும் தானே? " " உங்கிட நல்ல மனசு யாருக்கய்யா வரும்.

சரி அய்யா.... எட தம்பி... அய்யாவின் சாமான்கள் பஜரோவில ஏத்திவிடு. ஓம்...."

"முதலாளி.... நான் வாறனப்ப. மறந்துட வேணாம்." " சீச்சீ, உதல்லாம் வெளிய வராது. எங்களுக்கு தெரியாதே பேந்து ஜெகஜாலன் சேர் நிவாரணத்த மடக்கிற்றேரென்றே சொல்லுவினம். அது சரி உங்களுக்கு ஆர்ய்யா இந்த பேர் வெச்சது" என்று கேலியாக சிரித்தார். "ஏன் நல்லாயில்லயா?" என்ற ஜெகஜாலன் பஜரோவில ஏறப்போன அதிகாரி " ஏன் இப்ப பேரப்பத்தி கேட்டனீர்..."

"இல்ல நான் இந்த பேர கேள்விப்பட்டதே இல்ல. அதுதான் கேட்டனான். அப்ப பொயிற்று வாங்கய்யா" பஜரோ சென்றதும் " ஜெகஜாலன் என்று பொருத்தமாத்தான் உனக்கு பேர் வெச்சிருக்காங்க. பேர வெச்சவன் வாயில சீனி போடணும் டோய்." என்று கொஞ்சம் சத்தமாகவே முணுமுணுத்தவாறு அந்த ஜெகஜாலனின் பில்லைக் கிழித்தெறிந்து விட்டு ஒரு நீண்ட கெட்ட வார்த்தையையும் உதிர்த்தார். அவனது சிப்பந்திகள் கொக்களமிட்டுச் சிரித்தனர்.

அதிகாரி ஜெகஜாலன் பெஜரோ நிறைந்த பொருட்களுடன் பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்தது. மாயா லிக்கர் சொப் வாடிக்கையாளர் கலைந்து மூடப்படுவதற்கான எத்தனங்கள் நடக்கும் தருணம் பார்த்து அதன் முன் தன் பஜரோவை நிறுத்தினான் ஜெகஜாலன் குறிப்பிட்ட நேரத்துக்கு மேலதிகமாக மதுக்கடையை திறந்து வைத்திருந்த குற்ற உணர்வில் முதலாளி ஓடி வந்து பஜரோ முன்பவ்வியமாக வந்து " உதவி கேட்டு கடகடயா வரப்போறதா கேள்விப்பட்டன். நானென்ன செய்ய வேணும் சொல்லுங்கோ" என்ற ஜெகஜலன் முதலில் அதிர்ந்து போனான்.

தாரகாவும் மாயாவும் ஊர்க்காரர்கள் தானே . அப்படியுமிருக்குமோ என்று நினைத்துப் பின் இவரையே நம்பக்கூடாது என மனதிற்குள் எண்ணிக் கொண்டான். " நீ வேறொன்றும் செய்யத் தேவையில்ல. எழுவான் கரையில அகதிக்குள்ள ரெண்டு மூண்டு பேர் மிச்சம் வயசான ஆக்கள் இருக்கிறாங்களாம் அவங்க அடிக்கடி கொஞ்சம் தண்ணி போடறவங்களாம். அதனால அவங்களுக்கும் பொருத்தமானதாக பார்த்து தாரும்". " சொல்லுங்கையா வேண்டிய ஸ்ரொக் இருக்கு". " அப்ப.... பிளக் அண்ட வைற் பிஸ்கியில ரெண்டு மூண்டு போடும். வயசான ஆக்களுக்கு சூடாயுமிருக்கும். ஆரும்பாக்கிறதுக்குள்ள வாகனத்துக்குள்ள போடும். நானொரு வித்தியாசமான நிவாரணம் குடுக்கப்போற விஷயம் யாருக்கும் தெரிய வேணாம். கடவுளுக்கு மட்டும் தெரிஞ்ச என்ன."

" நிச்சயம் அய்யா. இந்த மாதிரி ஐடியா உங்களுக்குத்தானே வரும். சாராயத் தோட்டத்துல கிடக்கிறவனுக்கு இத விட வேறென்ன நிவாரணம் அய்யா வேணும். உங்களால் நானும் புண்ணியம் செய்ததாப் போச்சு."

" சரி முதலாளி. உமக்கிட்ட மட்டும்தான் இந்த நிவாரணம். வேறொருவரிட்டையும் இதப்பத்தி கதைச்சிர வேணாம். தெரியாதா சனத்தப் பத்தி. எனக்கெண்டா கடவுள் குடுத்த வேலையிருக்கு. நான் வாறன்." மாயா லிக்கர் சொப் முதலாளி வாகனத்தை அண்ணாந்து இரு கைகளையும் உயர்த்தி, " கடவுளே, இவர்கள் வெள்ளம் காண்றதில்லயா" என வாய்விட்டுச் சொன்னான். அவனுக்குத் தெரியவில்லை. வெள்ளத்தை வெள்ளம் அடித்துச் சென்றது. அதிகாரியின் வாகனம் நேராக கள்ளியங்காடு பண்டகசாலையில் நின்றது. நிறுவனமொன்றின் வாகனங்கள் அங்கு நிரையாய் நின்றன. அந்த இரவிலும் பண்டகசாலை வாசலில் மக்கள் நிவாரணத்திற்காய் நின்று கொண்டிருந்தனர். அதிகாரி ஜெகஜா லனைக் கண்ட தும் மகிழ்ச்சியில் மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். எல்லார் முகத் திலும் பசியின் தாக்கம் நிறைந் திருந்தது.

அதிகாரி தனது இலாகாவைச் சேர்ந்த ஒருவனைத் தன் பஜரோவிலிருந்தவாறு அழைத்தான். நிவாரணப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அவனோ பதைபதைத்துக் கொண்டு வந்தான். அவனோடு கூட அதிகாரி ஜெகஜாலனின் வழமையான சாரதியும் வந்து நின்றான். அவர்களிடம் அதிகாரி நேரடியாகவே பேசினான். " தம்பி, வீட்ட மனிசியால பெரிய ஓலாக் கிடக்கு. தெரியும்தானே அவள. அவள்ர ஆக்களுக்கு நானொன்றும் நிவாரணம் குடுக்கலியாம். அதனால என்னொரு பத்துப் பார்சல என்ர பஜரோவில போட்டுவிடும். ஆரும் கேட்டா கன்னிச்சோலை அகதிமுகாமிலிருக்கிற கர்பினித் தாய்மாருக்கு எண்டு சொல்லும் என்ன..." என்றான். அவ்வேளை பார்த்து அதிகாரியின் சாரதியும் " எனக்குமொரு பார்சலையா..." என்றிழுத்தான்.

அதிகாரிக்கு வந்ததே கோபம், " உம்மோட பெரிய ஓளைசே , ஐ. சே , நீரென்ன வெள்ளத்தால் பாதிக்கப்பட்டநீரா. இது பாதிக்கப்பட்ட ஆக்களுக்கு மட்டும்தான். பொறுப்பில்லாத ஆக்களோட நான் எப்படித்தான் வேலை செய்யப் போறனோ தெரியா. சரி சரி தங்கராசுக்கும் பார்ச லொண்ட பார்த்துப் போடும். இல்லாட்டி தண்ணியடிச்சுப் போட்டு உளறுவான்.

மக்கள் இருளில் நிவாரணத்துக்காக ஒதுங்கி நிற்க அதிகாரியின் பஜரோ பெரும் புகைக்குள் காணாமல் போனது. அதிகாரி ஜெகஜாலன் வீடு வந்து சேர்ந்த போது மணி இரவு ஒம்பதைத் தாண்டியிருந்தது. அப்போது அவனது வீதியில் ஒட்டோக்கள் ஓடிக்கொண்டிருந்தன. அதிகாரி கொண்டுவந்த பொருட்களில் அவன் மனைவி வாயெல்லாம் பல்லாகிப் போயிருந்தாள். அவளுக்கு ஏற்கனவே 'திருவிலைப் பல்லுக்காரி ' என்று ஊரில் ஒரு பட்டமுண்டு.

"எல்லோருக்கும் சேர்த்துத்தானே எடுத்தனிங்க.....? " "ஓமோம் , உம்முட அக்கா தங்கச்சி எல்லாருக்குந்தான். எல்லாத்தையும் லேசப் பிரிக்கக்கூடிய மாதிரித்தான் பக்கற் பண்ணியிருக்கான்." என்று செல்லி விட்டு தான் கொண்டு வந்த விஸ்கி போத்தலைத் திறந்தான். அதிலிருந்து எழுந்த பழரச வாசம் வீட்டை நிரப்பியது. கூடவே தோரஹா ஏஜென்சியிலிருந்து கொண்டு வந்த தடித்த பழச்சாற்றைக் கலந்து தொலைக்காட்சிக்கு முன்னாலமர்ந்து குடிக்கத் தொடங்கினான். அவனுக்கு எதிரே மக்கள் அகதிகளாக ஓடிக்கொண்டிருந்தனர்.

## முடிவு -2

திடீரென அவனுக்கு நடு நிசியில் விழிப்பு வந்தபோது அவனுடல் ஈரலிப்பை உணர்ந்தது. அவனது ஸ்தூல உடம்புக்காரியும் இரத்த அழுத்தக்காரியுமான மனையியைத் தீண்டி மாதக் கணக்காகின்றமையால் அடிக்கடி அவனையுமறியாமல் ஏற்படும் ஸ்கலிதமோ என எண்ணியவனுக்கு அதிர்ச்சியாயிருந்தது. வெள்ள நீர் அவனமைத்திருந்த மண் அணையையும் மீறி வீட்டுக்குள் கசியத் தொடங்கியது. அதன் பிறகு அவன் தூக்கம் கொள்ளவில்லை.

விழித்தபோது கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவன் வசித்த வீதியெங்கும் நீரால் நிரம்பியிருக்க அங்கு வசிக்கும் பெண்கள், குழந்தைகள் வீதிக்கு வருவதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த நீரையும் தாண்டிச்செல்லக் கூடிய உயரமான வாகனம் அதிகாரி ஜெகஜாலனுடையது என்பதால் அவனது உதவிக்காக அந்தப்பெண்கள் ஏங்கினார்கள். ஜெகஜாலன் அதிகாரியானதன் பின் எவருடனும் அதிகம் பழகுவதில்லை என்கிற புதுக்கொள்கை ஒன்றினையும் பின்பற்றுகிறானென்பதை இந்த அப்பாவிப் பெண்கள் அறிந்து கொள்ளவேயில்லை.

அவன் முதலில் தன் மனைவி, பிள்ளைகள் ஈற்றில் தனது நாயையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். தங்கள் வெட்கத்தையும் விட்டு உதவிகேட்ட பெண்களிடம் தான் அடுத்தமுறை வரும்போது அனைவரையும் ஏற்றிச் செல்வதாகச் சொன்னான். பெஜரோ மீண்டும் புகைக்குள் மறைந்தது. அவன் அடுத்த தடவை என்று சொன்னது புதிதாக இனிவரப் போகும் வெள்ளமொன்றைப் பற்றித்தான். என்பதை அறியாத அந்த அப்பாவிகள் அதிகரித்து வரும் வெள்ள நீரையும் பொருட்படுத்தாது நின்று கொண்டிருந்தனர்.

ஜெகஜாலனோ மேலதிகாரிகளுக்கு முதல்நாள் முழுவதும் தான் செய்த நிவாரண ஏற்பாடு சம்மந்தமான அறிக்கையை மனதால் வரைந்து கொண்டிருந்தான். வெள்ள நிர்வாணச் சேவை என்கிற அதே பதாதையுடன் புளியந்தீவில் உள்ள தனது இன்னொரு வீட்டை நோக்கிக் குடும்ப சகிதமாய் ஓடிக் கொண்டிருந்தது அந்த அரச வாகனம்.

*அ.ச.பாய்வா*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சூரியனுக்காய் ...

நீள் விசும்பின்
புகைமூட்டங்களுக்குள் ஒரு ஒலி
நான் ஒரு அநாவசியமான
வெளியீடு என்பதை
அது சுட்டியது.

சிலவேளைகளில்
என் பிறப்பின்
மூலமந்திரங்களை
தேடுகின்ற போதெல்லாம்
நான் தொலைகிறேன்
என் உதடுபட்ட
தேனீர் கோப்பையில்
ஈக்கள் மொய்க்கும் போதெல்லாம்
மனித பரிமானத்தின்
மாசுபட்ட பக்கங்களில்
நானும் ஒருவனாய்....
ரொட்டித் துண்டுகளாய்
துரத்தப்பட்டேன்

எச்சிக் கோப்பைகளுக்குள்
ஏமாந்து போனேன்
குப்பைத்தொட்டியை
குதறிக்கொண்டிருந்த நாய்
நிமிர்ந்து பார்த்தது
நாயை பரிதாபமாக பார்த்தேன்
அதுவும் என்னை...............

அது திரும்பி நடந்தது
குதறிய சோற்றுப்பொதி
காத்திருந்தது ............................?

மீண்டும் நீள்விசும்பின்
புகைமூட்டங்களுக்குள்
ஒரு ஒலி - என்
அநாவசியம் பற்றி கூறிற்று
ஒரு நாள் என் கைகள்
எனக்கு ஆடைகளாயின
விரல் இடுக்களுள்
தெரிந்த அந்தரங்கங்களை
ருசிக்க கழுகுகள்
காத்திருந்தன....
கருவறைக்குள் இருந்து
விடுபட்டதாய் எண்ணி
திறந்த வெளிச் சிறையில்
சுதந்திரமாய் திரிவதாய்
ஒரு எண்ணம்.

ஒரு இரவில்
மழை பெய்யும்
இலட்சோப லட்ச
மழைத்துளிகள்
மண்ணை உரசி
உடைந்து போகும்
வானுக்கும் மண்ணுக்கும்
இடையிலே அந்தரிக்கும்
மழைத்துளிபோலவே
நான் இருட்டுகளில்
அந்தரிக்கின்றேன்

என் தெருக்களில்
சூரியன் வலம் வரும்
நாட்களாய் நானும்
நான் போன்றவர்களும்

பிரதுப் — அரங்காலயா

## வாழ்வை வசந்தமாக்கு நண்பனே!

வாழ்கை வாழ்வதற்கு - எமக்கு
வழங்கப்பட்ட ஒரு சந்தர்பம்
தாழ்மை எண்ணம் - எதற்கு
தத்தம் வாழ்வை வாழ்வதற்கு!

பணம் பொருள் மட்டுமல்ல இன்பம்
பட்டம், படிப்பும் இல்லை
குணம் அது வேண்டும்
கொள்கை பிடிப்பு வேண்டும்

மற்றவரை நேசித்து
மானத்துடன் வாழு
உற்ற நண்பனாக அனைவரையும்
உன்மை அன்பு செய்
எனக்கு எனக்கு என்று
பாதுகாக்காதே நண்பனே! - அது
நீ பெற்றவனுக்கு சோம்பலை
கற்று கொடுக்கும் மறக்காதே!

இந்த நாள் இனிது - மற்றவருக்கு
இன்பம் தரும் வகையில் கொடு
வந்த காலம் முடிவதற்குள் - புறப்படு
வாழ்வை வசந்தமாக்கு நண்பனே!

*ஜெ. ஜெயகௌரி*
*பாலையூற்று*



## கவிமுரசு

உங்களின்
கவிதைகள்,
உங்களின்
சிறுகதைகள்,
கட்டுரைகள்,
ஆக்கங்கள் உங்களின்
படங்களுடன்
மலைமுரசில் இடம்பெற
வேண்டுமா?

எமக்கு அனுப்பி வையுங்கள்

உதவி ஆசிரியர்
மலைமுரசு
159A, 2வது மாடி,
கடல் முக வீதி,
திருகோணமலை

malaimurasu@hotmail.com

0754252042 - 0777555738

### நீ கவிதை

உன்னை
பார்க்கும் போது ஓர் அழகு
படிக்கும் போது ஓர் அழகு
சொன்னால் ஓர் அழகு
வரையும் போது ஓர் அழகு
சொல்பவரும் ஓர் அழகு
உன்னால்
சொல்லப்படும் பொருளும்
ஓர் அழகு
உன்னை
கேட்பவரும் ஓர் அழகு
ஆனால் உனக்கு
பொய் அழகு.

*சு. அஜிந்தா*
*கட்டைபறிச்சான்*






## வரலாற்றில் தம்பலகாமம் - பாகம் 5 -

திருகோணமலை வரலாற்றில் மன்னர்களின் நேரடி ஆட்சி முறை தளர்ந்தபிற்பாடு நிலமானியமுறை சார்ந்த வன்னியர் ஆட்சி தொடங்கியதெனலாம். இதனைப் பல வரலாற்றுச் சான்றுகள் உறுதி செய்கின்றன. குளக்கோட்டனின் அரச பிரதானியாகிய தனியுண்ணாப் பூபாலவன்னியர் என்பவர் மூலம் திருகோணமலையில் வன்னியர்களின் ஆட்சி தொடங்கியது என்றாலும் குளக்கோட்டன் காலத்திற்கு முன்னரும், பின்னரும் இங்கு அவை தொடர்ந்திருந்திருக்கிறது எனச்சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் செயதுங்க வீரவரராஜசிங்கன் (கைலாயமாலை கூறும் செயவீரசிங்கை ஆரியன் ) வன்னியர்களை அடங்காப் பற்றுக்குச்சென்று அதைக் கைப்பற்றி ஆளுமாறும், ஆண்டுதோறும் யாழ்ப்பாண அரசனுக்குத் திறை செலுத்த வேண்டுமென்றும் பணித்தான். இவர்களில் மாமுகன் என்னும் வன்னியன் வெருகல், தம்பலகாமம் என்பவற்றைக் கைப்பற்றியாளச் சென்றான் என வையாபாடல் மூலம் அறியக்கிடக்கிறது.(1)

இதனைத்தொடர்ந்து வரும் குளக்கோட்டன் காலத்தில் திருகோணமலை மாவட்டம் நாலு பற்றுக்களாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

1.திருகோணமலைப்பற்று.
2.கட்டுக்குளப்பற்று (நிலாவெளி சார்ந்த பிரதேசம்)
3.கொட்டியாரப் பற்று.(மூதூர் சார்ந்த பிரதேசம்)
4.தம்பலகாமப் பற்று என்பன.

இவை தனியான சுயாட்சி அலகுகள் என்பதற்கு அவை தீர்ப்பதற்கு இந்த அதிகாரங்கள் பயன்பட வேண்டும் திருக்கோணேஸ்வர ஆலயத்திருப்பணிகள் இடையறாது நியமப்படி நடைபெற வேண்டும் என்பதையும், அவ்வேளைகளில் ஆலயப் பணியாளர்கள் ,சாதாரண மக்கள் என்பவர்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளைத் கொண்டிருந்த நில, நீதி, தண்டனை தொடர்பான அதிகாரங்களே சான்று பகருகின்றன. இவையனைத்தும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தன.(2)

இவ்வன்னிப ஆட்சி 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் திருகோணமலையைக் கைப்பற்றும் வரை தொடந்தது. இதில் திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப்பற்று ஆகிய மூன்று வன்னிபங்களும் சுதந்திரச் சிற்றரசாகச் செயற்பட கொட்டியாரப்பற்று சிலகாலங்களுக்கு கண்டி அரசின் மேலாண்மையை ஏற்றிருந்தது.



17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போத்துக்கீச 'வரலாற்றாசிரியர் குவைறோஸ் அடிகளார் கீழைத் தேசத்தில் வாழ்கின்ற இந்துக்களின் ரோம் என்று குறிப்பிடும் திருக் கோணேச்சரம் கி.பி 1624 இல் போத்துக்கீச தளபதி கொன்ஸ்ரன்டைன் டிசா என்பவனால் கொள்ளையடித்து, இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.

இந்நிகழ்வு பற்றி முன்னமே அறிந்துகொண்ட அங்கு கடமையாற்றிய பாசுபதர் என்றழைக்கப்பட்ட பூசகர்களும், தொழும்பாளர்களும், பக்தர்களும் இணைந்து இடிபட இருந்த கோயிலுக்குள் இருந்த விக்கிரகங்களை எடுத்து மண்ணில் புதைத்து வைத்தும் ,காடுகளிலும், மலைகளிலும் மறைத்துவைத்தும் வழிபாடு இயற்றி வந்தனர்.

தமது உயிரைப் பணயம் வைத்து மூல விக்கிரகமான கோணேஸ்வரரை இரகசியமாக காடுகள் வழியே எடுத்து வந்து தம்பலகாமம் மேற்கு மலைத்தொடரில் உள்ள கழனி மலைச்சிகரத்தில் வைத்து பூசித்து வந்தனர்.இதனால் இம்மலை சுவாமி மலை என்று அழைக்கப்படுகிறது.

பின்னர் கண்டியில் அரசுசெய்த ஜெயதுங்க வரராசசிங்கன் என்னும் மன்னன் சுவாமி மலையில் வைத்து வழிபட்டுவந்த ஆதிகோணநாயகரையும், மாதுமை அம்மையையும் மற்றும் உள்ள பரிவார தெய்வங்களையும் மேளதாளத்துடன் சிறப்புற எடுத்துவந்து தம்பலகாமம் கோயிற் குடியிருப்பு என்னும் இடத்தில் உள்ள கோயிலில் பிரதிடை செய்தான் என திருக்கோணாசலப் புராணம் கூறுகிறது. அன்றுமுதல் தம்பலகாமத்தில் இருந்த சிவாலயம் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயமாக மாற்றம் பெற்றது.

அதேவேளை திருக் கோணேச்சரமும் சைவப்பெருமக்களால் மீண்டும் புதுப்பொலிவுடன் நிர்மாணிக்கப்பட்டு சிறப்பாக வழிபாடியற்றப்பட்டு வருகிறது. போத்துக்கீசர் முற்றாக அழிக்க நினைத்த ஆலயம் அழிவில் இருந்து மீண்டெழுந்து திருகோணமயில் திருக்கோணேச் சரமாகவும் , தம்பலகாமத்தில் ஆதி கோணநாயகர் ஆலயமாகவும் இரு ஆலயங்களாக பரிணமித்திருக்கும் வரலாறு ஆச்சரியம் தருவதாய் இருக்கிறது.

- வைத்திய கலாநிதி த. ஜீவராஜ் -

ஆதாரங்கள்

1. வன்னியர் - பேராசிரியர்.சி.பத்மநாதன்
2. வரலாற்றுத் திருகோணமலை - கனகசபாபதி சரவணபவன் 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிப்பிற்கு விடை கொடுத்தார் திவ்யா ஸ்பந்தனா



இனிமேல் நடிக்க மாட்டேன் என்று கூறி ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார் நடிகை திவ்யா ஸ்பந்தனா. சிம்புவின் குத்து படத்தின் மூலம் ரம்யா என்ற பெயரில் தமிழில் அறிமுகமானார். இவர் கர்நாடகாவின் முன்னாள் முதலமைச்சரும், இந்நாள் மத்திய அமைச்சருமான எஸ்.எம்.கிருஷ்ணாவின் பேத்தி ஆவார். தமிழில் பொல்லாதவன், வாரணமாயிரம் என சில படங்களில் தான் திவ்யா நடித்துள்ளார். நடித்துக் கொண்டே காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்து கர்நாடக மாநில காங்கிரஸில் பதவியும் பெற்றார். சமீபத்தில் நடந்த மாண்டியா இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு எம்பியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அரசியலில் பெரிய இடத்துக்கு வர வேண்டும் என்பதே திவ்யாவின் இலட்சியம் என்பதால் இனிமேல் நடிக்கப் போவதில்லை என்ற முடிவினை எடுத்திருக்கிறாராம். இவர் ஆர்யாவின் தம்பி சத்யாவுடன் காதல் டூ கல்யாணம் படத்தில் நடித்துள்ளார். தமிழைப் பொறுத்தவரை அந்த ஒரு படம் மட்டுமே திவ்யா கைவசம் உள்ளது. படம் முடிந்து பல மாதங்கள் ஆகியும் இன்னும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தாய்மொழிக்கு மாறினார் நயன்தாரா



நடிகை நயன்தாரா தனது தாய்மொழியான தமிழில் நடிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளாராம். மலையாளியாக இருந்தாலும் தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையான பிறகு எந்த நடிகையும் மீண்டும் மலையாளத்தில் நடிக்க ஆர்வம் காட்டுவதில்லையாம். மலையாளப் படவுலகு தரும் சம்பளம் தமிழ், தெலுங்குடன் ஒப்பிட்டால் பாக்கெட் மணி அளவுக்கே வராது. நயன்தாரா கடைசியாக மலையாளத்தில் நடித்தது சித்திக்கின் பாடிகார்ட் படத்தில் திலீப்புடன் இணைந்து நடித்தார். அந்தப் படம்தான் தமிழில் காவலனாக ரீமேக் செய்யப்பட்டது. தற்போது நயன் தமிழ், தெலுங்கில் பிஸி. என்றாலும் மலையாளத்தில் நடிக்க சம்மதித்துள்ளாராம். இயக்குனர் மதுபால் எம்.டி.வாசுதேவன் நாயரின் த்ரிஷ்னா நாவலை படமாக்குகிறார். அதில்தான் நயன்தாரா நடிக்கிறார். மதுபாலின் சென்ற படம் ஒழிமுறி. ஜெயமோகனின் வசனத்தில் உருவான இந்தப் படம் பல விருதுகளை பெற்றது குறிப்பிடத்தக்கது.



# சினிமுரசு

## சித்தார்த் - சமந்தா ரகசிய திருமணம்

உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் சித்தார்த்தும், சமந்தாவும் ரகசிய திருமணம் செய்து கொண்டதாக தெலுங்கு திரையுலகில் பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது. சித்தார்த்தும், சமந்தாவும் ஜபர்தங்க் என்ற தெலுங்கு படத்தில் ஜோடியாக நடித்தார்கள். அப்போது நெருக்கம் ஏற்பட்டு காதல் மலர்ந்ததாக கூறப்பட்டது. தமிழில் சித்தார்த் நடித்த தீயா வேலை செய்யனும் குமாரு படத்தில் சமந்தா சில காட்சிகளுக்கு கௌரவ தோற்றத்தில் நடித்துள்ளார். சித்தார்த்தும் சமந்தாவும் இருமாதங்களுக்கு முன் காளகஸ்தி கோவிலுக்கு ஜோடியாக வந்தனர். இருவரின் பெற்றோரும் உடன் வந்தார்கள். கோவிலில் அருகருகே அமர்ந்து பூஜை மற்றும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அப்போது தான் இவர்களின் காதல் விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது. சமந்தாவுக்கு தெலுங்கில் 5 படங்கள் கைவசம் உள்ளன. சித்தார்த் தமிழில் ஜிகர்தண்டா, காவிய தலைவன் படங்களில் நடித்து வருகிறார். இந் நிலையில் தான் தற்போது இருவரும் ரகசிய திருமணம் செய்து கொண்டதாக செய்தி பரவியுள்ளது. ஐதராபாத்தில் இந்த திருமணம் நடைபெற்றதாக கூறப்படுகிறது. மேலும் திருமணம் முடிந்ததும் இருவரும் கணவன், மனைவியாக போய் சித்தார்த்தின் நெருங்கிய நண்பர் ஒருவர் திருமணத்தில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தி விட்டு வந்துள்ளார்களாம்.

## இயக்குனரின் கோபத்துக்கு ஆளானர் சமந்தா!

தான் நடிக்கும் கதாபாத்திரங்களை உளறிவிடுவதால் இயக்குனரின் கோபத்துக்கு ஆளாகியுள்ளார் நடிகை சமந்தா. சித்தார்த்துடன் தெலுங்கில் நடித்து வந்தது வரை, தினமும் ஒரு அரை மணி நேரமாவது அவருடன் கடலை போடுவதை வாடிக்கையாக கொண்டிருந்தார் சமந்தா. தற்போது அவரும் அருகில் இல்லாததால் தினமும் தான் பேச நினைப்பதையெல்லாம் தனது டுவிட்டரில் அரங்கேற்றுகிறாராம். அதைப்படித்து விட்டு அவரது ரசிகர்களும், நண்பர்களும் கமெண்ட் கொடுத்து வருகிறார்களாம். ஆனால், சில சமயங்களில் தான் நடிக்கும் படங்களில், படப்பிடிப்புகளில் நடைபெறும் விசயங்களையும் டுவிட் செய்து விடும் சமந்தா, அந்த படங்களில் தான் நடிக்கிற வேடத்தைப் பற்றியும் பேச்சுவாக்கில் உளறுவதைப் போன்று கொட்டி விடுகிறாராம். இதனால் படம் முடிகிற வரைக்கும் படத்தின் கதையையும், நடிக்கிற கதாபாத்திரத்தையும் சீக்ரெட்டாக வைத்திருக்க வேண்டும் என்று சமந்தாவிடம் கண்டிசன் போட்டிருக்கும் இயக்குனர்கள், அவர் எல்லா ரகசியங்களையும் டுவிட்டரில் போட்டு உடைப்பதைப் பார்த்து டென்சன் ஆகிறார்களாம். அதில் சமீபத்தில் ஒரு இயக்குனர் சமந்தாவிடம் ரொம்பவே கோபித்துக்கொண்டாராம். இதனால் இனி சினிமாவை தவிர்த்து எனது பர்சனல் விடயங்களை மட்டுமே டுவிட் செய்வேன் என்று கூறி உள்ளாராம் சமந்தா.

## தனுஷ் தயாரிப்பில் நடிக்கிறார் சிம்பு

தனுஷ் தயாரிப்பில் சிம்பு நடிக்கப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நடிகர் தனுஷ் உண்டர்பார் பிலிம்ஸ் என்ற பெயரில் தயாரிப்பு நிறுவனம் தொடங்கி படங்களை தயாரித்து வருகிறார். இந் நிலையில் நடிகர் தனுசும், வெற்றிமாறனும் இணைந்து 'காக்கா முட்டை' என்ற படத்தை தயாரித்து வருகின்றனர். முற்றிலும் புதுமுகங்கள் நடிக்கும் இந்த படத்தை ஒளிப்பதிவாளர் மணிகண்டன் இயக்கி வருகிறார், ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். சேரியில் வாழும் குழந்தைகளின் இருப்பிடம் மற்றும் அவர்களது வாழ்க்கையை மையமாக வைத்து படம் தயாராகி வருகிறதாம். இந் நிலையில் இந்த படத்தில் சிறப்பு தோற்றத்தில் சிம்பு நடிக்கிறாராம். அவரே முன் வந்து இந்த படத்தில் நடிப்பதற்கு ஒப்புக்கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தனுஷ் தயாரிப்பில் சிம்பு நடிக்கவிருப்பது இவர்களது நட்பை மேலும் வலுப்படுத்தும் விதமாக உள்ளது என சினிமா வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறதாம்



## தமிழுக்கு வரும் சாகச மன்னன் ஜாக்கி சான்

ஜாக்கிசான் நடிப்பில் வெளியான 'கராத்தே கிட்' என்ற திரைப்படமானது தமிழில் ரீமேக் செய்யப்படுகிறது. ஜாக்கிசான் மற்றும் வில் ஸ்மித் மகன் ஜேடன் ஸ்மித் நடிப்பிலும் வெளியாகி வசூல் சாதனையும், பல விருதுகளையும் அள்ளிச் சென்ற திரைப்படம் 'த கராத்தே கிட்'. கதாநாயகன் 12 வயது சிறுவனாக இருந்தாலும் ஆக்ஷன் காட்சிகளுக்கு குறைவில்லாமல் விறுவிறுப்பாக செல்லும் திரைப்படமாகும். உலகமே கண்டு வியந்த இத் திரைப்படத்தை தற்போது ஸ்டண்ட் இயக்குனர் 'ஸ்டண்ட்' சில்வா தமிழில் ரீமேக் செய்கிறாராம். த கராத்தே கிட் திரைப்படத்தின் கதையை தமிழ் ரசிகர்களுக்கு ஏற்றார்போல் சில மாற்றங்களுடன் இயக்குகிறாராம். ஜேடன் ஸ்மித் கதாபாத்திரத்தில் தனது 12 வயது மகனையும், ஜாக்கிசான் கதாபாத்திரத்தில் தனது மனைவியையும் நடிக்கவைக்கிறாராம். ஸ்டண்ட் சில்வாவின் மனைவி ஸ்டண்ட் இயக்குனர் பீட்டர் ஹெயினின் தங்கை என்பது குறிப்பிடத்தக்கது. த கராத்தே கிட் திரைப்படத்தின் தரத்திற்கு நிகரானதாக தன் திரைப்படமும் இருக்கும் என்று உறுதியாக சொல்கிறார் ஸ்டண்ட் சில்வா.

## கலகலப்புக்கு தயாரான விஷாலின் மதகஜராஜா

சுந்தர்.சியின் மதகஜராஜா படமானது சென்சாருக்கு சென்று 'யு' சான்றிதழ் வாங்கியுள்ளது. தீயா வேலை செய்யணும் குமாரு படத்தைத் தொடர்ந்து சுந்தர்.சி இயக்கத்தில் அடுத்து வெளிவர இருக்கும் படம் மதகஜராஜா. இந்த படத்தில் விஸால், வரலட்சுமி சரத்குமார், அஞ்சலி ஆகியோர் நடிக்கின்றனர். விஜய் ஆன்டனி இசை அமைத்திருக்கிறார். ஜெமினி ஃபிலிம் சர்க்யூட் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்தின் வினியோக உரிமையை விஷாலின் சொந்த பட நிறுவனமான 'வஸ'ால் பிலிம் பேக்டரி' பெற்றுக் கொண்டுள்ளது. சுந்தர்.சி படம் என்றாலே அதில் கலகலப்புக்கும், காமடிக்கும் பஞ்சமிருக்காது. இந்த படமும் அப்படி அமைந்திருக்கிறதாம். சமீபத்தில் சென்சாருக்கு சென்ற இந்த படத்தை பார்த்த தணிக்கைக் குழுவினர் படத்துக்கு 'யு' சர்டிஃபிக்கெட் வழங்கியிருக்கிறார்கள். இந்த படம் வருகிற 6ம் திகதி வெளியாகவிருக்கிறது. பட்டத்து யானை படத்திற்குப் பிறகு விஷால் நடிப்பில் வெளிவரவிருக்கும் இப்படம் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது.

## 10 விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட விஜய்யின் துப்பாக்கி

விஜய்யின் துப்பாக்கி படமானது சிமா விருதுக்காக 10 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழா வரும் செப்டம்பர் மாதம் 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் துபாயில் நடைபெறவுள்ளது. இந்த விருது கடந்த ஆண்டு தான் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு நடக்கும் விழாவை ஆர்யா, ஸ்ரேயா, ராணா மற்றும் சோனு சூட் ஆகியோர் தொகுத்து வழங்குகிறார்கள். தென்னிந்திய சர்வதேச திரைப்பட விருதுக்கு விஜய்யின் துப்பாக்கி படம் சிறந்த நடிகர், நடிகை, இயக்குனர், நகைச்சுவை நடிகர் உள்பட 10 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் தனுஷ், ஸ்ருதி ஹாஸன் நடித்த 3 படம் சிறந்த நடிகர், நடிகை உள்பட 7 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கும்கி விக்ரம் பிரபு, லக்ஷ்மி மேனன் நடித்த கும்கி படம் சிறந்த படம், இயக்குனர், புதுமுக கதாநாயகன் உள்பட 7 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சுந்தரபாண்டியன் சசிகுமார், லக்ஷ்மி மேனன் நடித்த சுந்தரபாண்டியன் படம் சிறந்த படம், புதுமுக இயக்குனர், நகைச்சுவை நடிகர் உள்பட 5 பிரிவுகளில் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஓகே ஓகே உதயநிதி ஸ்டாலின் கதாநாயகன் அவதாரம் எடுத்த ஒரு கல் ஒரு கண்ணாடி படம் சிறந்த புதுமுக கதாநாயகன், சிறந்த நடிகை, சிறந்த நகைச்சுவை நடிகர் மற்றும் நடனம் ஆகிய பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓட்டுனர் இல்லாமல் ஓடும் அதிவேக ரோபோ காரை வடிவமைக்கிறது கூகுள்




ஓட்டுனர் இல்லாமல் ஓடும் அதிவேக ரோபோ காரை கூகுள் நிறுவனம் விரைவில் தயாரிக்க உள்ளது. தொழில்நுட்ப துறையில் முன்னணியில் இருக்கும் கூகுள் நிறுவனம், கடந்த 2010ம் ஆண்டு கார்களில் தானியங்கி தொழில்நுட்பத்தை உருவாக்கியது. இருப்பினும் எந்தவொரு நிறுவனமும் ஒப்பந்தம் செய்ய முன்வரவில்லை. இதனையடுத்து தானாகவே கார்களை உற்பத்தி செய்ய நினைத்த கூகுள், டிரைவர் இல்லாமல் இயங்கும் ரோபோ கார்களை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

இதற்காக காரில் கமெராக்கள், ரேடார்கள் மற்றும் கணனி தொழில்நுட்பங்களை கூகுளே வழங்கவுள்ளது. இந்த கார்கள் பயணிகளை ஏற்றிச் சென்று குறிப்பிட்ட இடத்தில் இறக்கிவிடும். இதற்கான பணிகள் முடிவடைந்து. இந்த ஆண்டு இறுதிக்குள் லண்டன் வீதிகளில் சோதனை ஓட்டம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த கார்களால் சாலை விபத்துகள் மிகவும் குறைவாக இருக்கும், சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படாது. போக்குவரத்து துறையையே இக்கார்கள் அடியோடு மாற்றிவிடும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வேகம் கூடிய Mac Pro கணிணிகளை அறிமுகப்படுத்தும் அப்பிள்

முதற்தர கணனி உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான அப்பிள் ஆனது Mac Pro எனும் வேகம் கூடிய கணிணிகளை இந்த வருடம் இடம்பெறவுள்ள Apple WWDC 2013 நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தவிருக்கின்றது. 12 Cores Processing வலுவினைக் கொண்டதும், பிரதான நினைவகமாக DDR3 RAM களைக் கொண்டதுமாக வடிவமைக்கப்பட்டுள்ள இவை 40GB/s எனும் வேகத்தில் தரவுப்பரிமாற்றம் செய்யக்கூடியவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவற்றில் காணப்படும் SATA வினை அடிப்படையாகக் கொண்ட SSD சேமிப்பு சாதனங்கள் சாதாரண அளவை விட 2.5 மடங்கு வேகம் கொண்டதாகவும், 7200-rpm கொண்ட சாதனத்தை விட 10 மடங்கு வேகத்தினைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பேஸ்புக் பயனர்களுக்காக Canon வடிவமைத்துள்ள அதிநவீன கமெரா

முதற்தர கமெராக்களை உற்பத்தி செய்யும் நிறுவனமான Canon ஆனது தற்போது பேஸ்புக் பயனர்களுக்காக அதிநவீன கமெரா ஒன்றினை வடிவமைத்துள்ளது. PowerShot N Facebook Edition Compact Camera என அழைக்கப்படும் இக் கமெராவில் பேஸ்புக் பொத்தான் ஒன்று தரப்பட்டுள்ளது. இதனை அழுத்துவதன் மூலம் புகைப்படத்தினை நேரடியாகவே பேஸ்புக் தளத்தில் தரவேற்றம் செய்துகொள்ள முடியும். இது தவிர 2.8 அங்குல LCD திரை, 12.1 மெகாபிக்சல்களை உடைய உயர் தரத்தினை உடைய CMOS சென்சார் ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. இதன் பெறுமதியானது 300 அமெரிக்க டொலர்களாகும்.

# விளையாட்டுப் பையன்

## அப்பிள் அறிமுகப்படுத்தவிருக்கும் புதிய iWatch



அப்பிள் நிறுவனமானது புதிய iWatch உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டுவருவது அறிந்த விடயமே. தற்போது குறித்த iWatch வடிவமைப்பு தொடர்பான தகவல்களை அப்பிள் நிறுவனம் வெளியிட்டுள்ளது. எதிர்வரும் 2014 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இச் சாதனம் அப்பிளின் முன்னைய ஸ்மார்ட் கைக்கடிகாரத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது.

மேலும் இதனை கையடக்க தொலைபேசிக்கு இணையாக பயன்படுத்தக்கூடியவாறு இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனிடையே அப்பிளுக்கு போட்டியாக விளங்கும் சம்சுங் நிறுவனம் இவ்வருட இறுதியில் தனது ஸ்மார்ட் கைக்கடிகாரத்தை அறிமுகம் செய்யவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## காதலியிடம் நடந்துகொள்வது எப்படி?

1. உங்கள் காதலி எது சொன்னாலும் அது தான் உண்மை, நீங்கள் தலையாட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.
2. காதலிக்கு அவ்வப்போது சின்ன அளவில் கிப்ட் வாங்கி கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும்.
3. அவள் மொபைல்க்கு நீங்கள் தான் RECHARGE செய்ய வேண்டும். மறந்தும் மிஸ்ட் கால் கொடுக்கக்கூடாது.
4. அவள் வைத்திருக்கும் நெட்வொர்க் நாளே நாலு டவர் உடையதாய் இருந்தாலும் அதற்கு மாறி விடுவது சாலச்சிறந்தது.
5. உம்மாடி, மிஸ் யூ டி, கிஸ் யூ டி என்று எதாவது சொல்லி கொஞ்சிக்கொண்டே இருக்க வேண்டும்.
6. காதலியிடம் பொய் சொல்லக்கூடாது. அவள் பொய் சொன்னாலும் அதை உண்மையாக கருத வேண்டும்.
7. நீங்கள் காதலிப்பது ஊருக்கே தெரிந்தாலும் அது தங்களுக்கு தெரியாதது போல சீன் போட வேண்டும்.
8. லாஸ்ட் பட் நாட் லீஸ்ட். உங்கள் காதலியை மதிக்க வேண்டும், அவளை திட்டக்கூடாது, அடிக்கக்கூடாது, ஏனென்றால் "இன்று உங்கள் காதலி நாளை வேறு ஒருவனின் மனைவி"

## ஒரு கொலையின் கதை

18 (மாயன்)



**"யாரவன்? தெரிந்துகொள்ளும் அடுத்த படலம் ஆரம்பமானது. அவன்.... ஒரு உயரங்குறைந்தவன்....தேர்ந்தெடுத்து தவறான பழக்கங்களைச் சரியாகக் கற்றுக் கொண்டிருந்தவன்..."**

அவன் பெயர்......... 'டொடி'.... அலிக அடிக்கடி டொடியைத் தொடர்பு கொண்டதால் டொடி அலிகவுடன் நெருக்கமானவன் என்ற முடிவிற்குப் புலனாய்வாளர்கள் வந்திருந்தனர்.

அவனைக் கண்டுகொள்வதற்கான அடுத்த கட்ட நடவடிக்கையை புலனாய்வாளர்கள் ஆரம்பித்தார்கள்.

பூகோள நிலை முறைமையின் உதவியுடன் அவனது வீட்டிற்கு அருகாமையில் புலனாய்வு அணியொன்று கணேவல பிரதேசத்தில் இறக்கப்பட்டது. இம்முறை எந்த நுட்பத்தைக் கொண்டு அவனைக் கண்டு கொள்வது? ஏலவே பயன்படுத்திய விலாசத்தை விசாரிக்கும் முறையையா?

பதில் இல்லை என்றே வந்தது. ஏனெனில் டொடி அடிக்கடி அலிகவுடன் தொடர்பைப் பேணிக்கொண்டிருப்பதால் சில வேளைகளில் சில நாட்களுக்கு முன்னர், அலிக தனது வீட்டிற்கு வருகை தந்த சில புதியவர்களைப் பற்றியும் அவர்களின் நடவடிக்கைகள் பற்றியும் தெரிவித்திருப்பின் அதே நுட்பத்தை டொடியின் மீதும் பிரயோகித்தால் அவர்கள் இருவரும் உசாரடைந்து விடுவர் என்பதால் புதிய நுட்பமொன்றைப் பிரயோகிக்க புலனாய்வாளர்கள் விரும்பினர். ஆனால் அப்பிரதேசத்தை வட்டமிட்ட அவர்களுக்கு டொடியைக் கண்டு கொள்வது ஒன்றும் மிகக் கடினமான காரியமாகத் தெரியவில்லை. டொடி அந்தப் பிரதேசத்தில் மிகப் பிரபல்யமான ஒருவனாக இருந்தான். அவனது வீட்டிலிருந்து முன்கடைக்கு வெண்சுருட்டைப் புகைப்பதற்காக அடிக்கடி வெளியில் வந்தான். வரும் போதெல்லாம் கைத்தொலைபேசியை இயங்கு நிலையிலேயே வைத்திருந்தான். இவை யாவும் அவனைத் தெரிந்து கொள்வதற்குப் போதுமானவையாக இருந்தன.

டொடியின் வீட்டிற்கு முன்னுள்ள கடையில் புலனாய்வாளர்கள் இருவர் வெண்சுருட்டைப் புகைக்கத் தொடங்கினர். அப்போது டொடியும் அந்தக் கடைக்கு வருகை தந்தான். மெல்லிய நட்புப் புன்னகையைப் படரவிட்ட அவர்கள் இருவரும் அதற்க்கு மேல் அவன் அங்கலாவண்யங்களைத் தமது குறிப்புக்குள் உள்ளடக்க முனைந்தனர்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல அவன் சராசரி உயரத்தையும் விடக் கொஞ்சம் குறைந்தவனாக இருந்தான். சுமார் ஐந்தடி இருக்கலாம். உடலின் உறுதித்தன்மை அவன் கடுமையாக வேலை செய்து உழைப்பவனோ ? என்ற சந்தேகத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. அவர்கள் மேலும் எதையோ அக்கடையிலிருந்து வாங்கிச் சாப்பிடவும், தேநீரைக் குடிப்பதற்காகவும் மேலும் நேரத்தைச் செலவிட்டனர். ஏனெனில் டொடியின் வீட்டில் இன்னும் யாராவது இருக்கின்றார்களா? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது.

சிறிது நேரத்திலேயே டொடி தனது வீட்டைப் பூட்டி விட்டு வெளியேறிப் போவதை அவர்கள் இருவரும் அவதானித்தார்கள். அதன் பின் அவர்கள் அங்கிருக்க வேண்டிய தேவைகளில்லை.

புலனாய்வு அலுவலர்கள் யாவரும் விறள் மிக்க உதவிக் காவல்துறை அத்தியட்சகரின் தலைமையில் கூடியிருந்தார்கள். அவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்டிருந்த கோவையில் இப்போது டொடியின் கணணி வரைகலைப் படமும் இணைக்கப் பட்டிருந்தது.

அவர்கள் தம்மிடம் கிடைத்த ஒரே கொலைத் தடயமான கைத்தொலைபேசி நிரப்பு அட்டையினைக் கொண்டு கொலைச் சந்தேக நபர்கள் இருவரையும் அணுகி விட்டதை புரிந்து கொண்டார்கள்.... இனி அடுத்தது என்ன?

இந்தக் கேள்விதான் அவர்களின் முன்னே எழுந்து நின்றது.

கண் கண்ட சாட்சிகள் எவையுமற்ற கொலையொன்றில் இருந்து கிடைத்த சிறிய துரும்புச் சீட்டின் முனைகளில் இருவர் தொக்கி நிற்கின்றார்கள். இப்போது கிடைக்க வேண்டிய பதில் இவர்களா?அல்லது இல்லையா...என்பது தான்... ஆனால் கேட்க வேண்டிய கேள்வி ஒன்றே தான்... இவர்கள் கொலைஞர்களாக இருப்பின் **ஏன்** இந்தக் கொலையை இவர்கள் செய்ய வேண்டும்?........

அக் கேள்விக்குச் சரியான பதில் கிடைக்குமானால்... அதற்கு முதல் பதிலான இவர்கள் தான் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுவிடும். அவ்வாறு உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் கணமேனும் தாமதிக்காமல் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட வேண்டும்.

இங்கு மூன்று முனைகளில் மூவர் இருப்பதைப் புலனாய்வாளர்கள் புரிந்து கொண்டனர். முதலாவது முனையில் கொல்லப்பட்ட கேதீஸ், இரண்டாவது முனையில் முதலாம் சந்தேகநபர் அலிக, மூன்றாவது முனையில் டொடி.....

இம் மூவருக்கும் இடையே தொடர்பொன்றினை ஏற்படுத்தப்போகும் அக் கொலைக்கான "ஏது" எதுவாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டால் மட்டுமே இம் மூன்று முனைகளையும் இணைத்து கொலைக்கான திரிகோணத்தை அவர்களால் உருவாக்க முடியும்.

அதனைக் கண்டுகொள்ள மேலும் சில காலங்கள் பொறுத்திருக்க வேண்டி யிருக்கும் என்பதைப் புலனாய்வாளர்கள் புரிந்து கொண்டனர். அதுவரை சந்தேகத்திற்கிடமான இருவரையும் எவ்வித சந்தேகமுமின்றிப் பின் தொடரவும், தகவல்களைத் திரட்டிக் கொள்ளவும் முடிவு அக் கூட்டத்தில் எட்டப்பட்டது. அக் கூட்டம் நிறைவுற்ற நாள் மே மாத முதற்கிழமை, 2012ம் ஆண்டு.

கொலை நடந்து சுமார் இருவாரங்களுக்குள் கொலைச் சந்தேக நபர்கள் புலனாய்வு வட்டத்திற்குள் புள்ளியிடப்பட்டிருந்தனர். இன்னும் வந்து சேரவேண்டிய தகவல் அவர்கள் இருவருக்குமிடையேயான பரஸ்பரத் தொடர்பும், அவர்கள் இருவருக்கும் பொது எதிரியாக ஏன்? கேதீஸ் உருவானான் என்பதும் தான்.

இரகசியப் புலனாய்வுக் குழுக்கள் இரண்டும் தகவல் திரட்டும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்க வெளிப்படையான புலனாய்வுக் குழு திருமலையில் மேலும் பல தேவையற்ற தகவல்களைத் திரட்டிக் கொண்டிருந்தது. அவர்களுக்கிடப்பட்ட கட்டளைகளும் அவ்வாறேயிருந்தன.

இறுதிவரை எவருக்கும் சந்தேகவட்டத்திற்குள் இருவர் விழுந்திருக்கின்றார்கள் என்ற தகவலைக் கசிய விடக் கூடாது என்பதில் புலனாய்வுத் துறையினர் மிகக் கடுமையான எச்சரிக்கையுடன் இருந்தார்கள்.

கொலைக்கான ஏதுவைத் திரட்டிக் கொள்ள அவர்களுக்கு உதவப் போகும் காரணிகளில் ஒன்றாக அவர்கள் குறித்துக் கொண்டது.... தற்போதும் பின் இரவு வேளைகளில் இயங்கிக் கொண்டிருக்கும் அலிக வின் கைத்தொலைபேசியே......... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தங்கம் வென்ற கிழக்கு மாகாண அணி

விளையாட்டுத்துறை அமைச்சின் 39 ஆவது தேசிய விளையாட்டு விழாப் போட்டிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று இடம்பெற்ற தேசிய கபடிப் போட்டியில் கிழக்கு மாகாண அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு தங்கப் பதக்கத்தினை தட்டிக் கொண்டுள்ளது.

கொழும்பு விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதி போட்டியிலேயே கிழக்கு மாகாண அணியானது வடமாகாண அணியினை எதிர்த்தாடி 12:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிழக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளது.



## பிரிட்டனில் கிரிக்கெட் அணியில் இடம்பிடித்த 06 வயது பாலகன்

பிரிட்டனில் 6 வயது சிறுவன் ஒருவன் உள்ளூர் கிரிக்கெட் அணியில் நிரந்தர உறுப்பினராக இடம்பிடித்து சாதனை படைத்துள்ளான். பிரிட்டனின் நியூபோர்ட்டை சேர்ந்த பார்சன்ஸ் (வயது 27) ஒரு கிரிக்கெட் வீரர். இவரது மகன் ஹாரிசன் (வயது 6), சிறு வயதில் இருந்தே தந்தையிடம் இருந்து கிரிக்கெட்டை கற்று வந்துள்ளான். தற்போது தந்தையை விடவும் சிறப்பாக விளையாடி அசத்தி வருகிறான். சமீபத்தில் உள்ளூர் போட்டி ஒன்றில் தந்தையும், மகனும் களமிறங்கினர். இதில் ஹாரிசன் 24 ஓட்டங்களும், அவரது தந்தை 15 ஓட்டங்களும் எடுத்தனர். இதனையடுத்து உள்ளூர் கிரிக்கெட் குழுவில் நிரந்தர உறுப்பினராகி உள்ளான்.

இவ் விடயம் குறித்து பார்சன்ஸ் கூறுகையில், நான் விளையாட்டாகத்தான் ஹாரிசனை கிரிக்கெட் போட்டிக்கு அழைத்து சென்றேன். ஆனால் அவனோ என்னை விட கூடுதலாக ஓட்டங்கள் எடுத்து அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டான். மிகவும் சிறியவனாக இருந்தாலும் அவனைவிட வயதும், அனுபவமும் அதிகமுள்ள பந்து வீச்சாளர்களின் பந்துகளை மிகவும் நேர்த்தியாக சந்திக்கிறான். இன்னும் திறமையாக விளையாடி இங்கிலாந்து கிரிக்கெட் அணியிலும் இடம்பிடிப்பான் என்ற நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்துள்ளார். ஹாரிசனின் தாய் பெகி பார்சன் கூறுகையில், ஹாரிசன் நடக்கத் தொடங்கும் முன்னரே கிரிக்கெட்டை ரசித்து பார்ப்பான் என்றும், அந்த அளவுக்கு விளையாட்டின் மேல் ஆர்வம் இருந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

## யங் ஒலிம்பிக்ஸ் கழகம் சம்பியன்

திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திய 2013 ஆம் ஆண்டுக்கான சுற்றுப்போட்டியில் யங் ஒலிம்பிக்ஸ் (Young Olympics) கழகம் சம்பியன் பட்டத்தை பெற்று கொண்டது. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த 25 ஆம் திகதி இப்போட்டி நடைபெற்றது. இதில் டைனமிக் (Dynamic) கழகத்தை எதிர்த்து யங் ஒலிம்பிக்ஸ் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங் ஒலிம்பிக்ஸ் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 306 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டைனமிக் கழகம் 9 விக்கட் இழப்பிற்கு 226 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுகொண்டது. இதில் யங் ஒலிம்பிக்ஸ் கழகம் 80 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனாகியது.

இச்சுற்றுப்போட்டியில் சிறந்த பந்து வீச்சாளரராக டைனமிக் கழகத்தைச் சேர்ந்த கு.தயாசேகரனும் சிறந்த துடுப்பாட்டக்காரராக சோடியாக் கழகத்தைச் சேர்ந்த லக்சிதவும் தெரிவாகினர். இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் யங் ஒலிம்பிக்ஸ் கழகத்தைச் சேர்ந்த அ.டிலானும் சுற்றுப்போட்டியின் தொடர் நாயகனான ஸ்பென்ஸ் கழகத்தைச் சேர்ந்த றிச்சர்ட் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் செ.பத்மசீலன் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



## ஏசியன் விளையாட்டுக்கழக அணி முதலாமிடம்

இருதயபுரம் எவகிறின் விளையாட்டுக் கழகத்தின் 13 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட அணிக்கு 9 பேர் கொண்ட கிரிக்கட் சுற்றுப் போட்டியில் ஆரையம்பதி ஏசியன் விளையாட்டுக்கழக அணி முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. இதேவேளை இப்போட்டியில், மட்டக்களப்பு கோல்டன் ஈகிள் விளையாட்டுக்கழக அணி இரண்டமிடத்தினையும் காந்திகிராமம் காந்தி ஸ்டார் விளையாட்டுக் கழகம் மூன்றாமிடத்தினையும் இருதயபுரம் எவகிறின் விளையாட்டுக் கழகம் நான்காமிடத்தினையும் பெற்றுகொண்டுள்ளன. கடந்த மூன்று தினங்களாக இருதயபுரம் எவகிறின் விளையாட்டுக்கழக மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன.

பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கலந்துகொண்டார்.

# இலங்கை கிரிக்கெட்டும் அதன் இன்றைய நிலையும்

- லியோ ஆனந்த் -

கனவான்களின் விளையாட்டு என அழைக்கப்படும் கிரிக்கெட் விளையாட்டானது இன்றைய கால கட்டத்தில் திடகாத்திரமான ஒரு நிலையை பிடிப்பது என்பதே ஒரு கனவாக செல்கின்றமை கவலைக்குரிய விடயம். 1996ஆம் ஆண்டு அர்ஜுண ரணதுங்க, பெனசீர் பூட்டோவிடம் இருந்து சர்வதேச கிரிக்கட் சம்மேளன (ICC) உலகக் கோப்பையை பெற்றுக் கொண்ட தருணம் சர்வதேச கிரிக்கட்டில் இலங்கை தன் உச்ச இடத்தை பிடித்தமை குறிப்பிடத்தக்கது. அதனை தொடர்ந்து வந்த காலங்களில் இலங்கை தனக்கென்று தனியொரு இடத்தை பெற்றுக்கொள்ள தடுமாறி வருகிறது. ஒவ்வொரு காலகட்டங்களிலும் இலங்கையை பாதிக்கும் முக்கிய காரணியாகக் காணப்படுவது அரசியல். இலங்கை கிரிக்கட்டும் அரசியலும் ஒரே போர்வையில் காணப்படுவது வளர்ச்சிக்கு குறுக்காகக் காணப்படும் மிகப் பெரிய தடைக்கல். இவ் அரசியலானது கிரிக்கட்டை குறிப்பாக நிர்வாகக்குழு, அணித்தேர்வு போன்ற தருணங்களில் பாதிக்கின்றது.

இந்நோய் இவ்வாறு பரவியிருந்தாலும் அரவிந்தடி சில்வா, அர்ஜுன ரணதுங்க, சனத் ஜெய சூரியா, ரொசான் மகநாம, முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ் போன்ற வீரர்கள் சர்வதேச கிறிக்கட்டுக்கே சவால்விடும் வகையில் தங்கள் திறமையை காட்டியது இலங்கைக் கிரிக்கட்டுக்கு கிடைத்த பெரிய வெற்றியாக கருதமுடியும்.

1996 உலகக் கோப்பை வெற்றி கண்ட இலங்கை அணிக்குத் தொடர்ந்து வந்த 1999, 2003 உலகக் கோப்பையில் கிடைத்தது வெறும் சோகம் மட்டுமே. அதனைத் தொடர்ந்து 2007ம் ஆண்டு மஹெல ஜெயவர்தன தலைமையில் ஒரு புதிய உத்வேகத்துடன் கரிபியன் மண்ணுக்கு சென்ற இலங்கைக்கு கிடைத்தது நல்லதொரு வெற்றி. அதாவது உலகக் கிண்ண கிரிக்கட் போட்டி வருணபகவானின் தடங்கலால் தடைப்பட்டுக் கொண்டிருந்த அவுஸ்ரேலியாவுக்கெதிரான இறுதிப் போட்டி பல அழுத்தங்களிற்கு பின்னர் நடைபெற்றது. நடுவர்களான அலிம் தார், சைமன் டௌபல் செய்த தவறிற்கு பலிக்கடா ஆனது இலங்கை அணி. இறுதிப் போட்டி நடந்த மறுநாளே தாங்கள் விட்ட தவறை நடுவர்கள் ஒப்புக்கொண்டமை பத்திரிக்கை ஊடாக வெளி உலகிற்கு தெரியவந்தது.

அதனைத்தொடர்ந்து வந்த காலங்களில் நல்ல நிலமையில் இருந்த இலங்கை அணியை குமார் சங்ககார 2009 ஆம் [illegible] கொண்டார். [illegible] தலைமையில் இலங்கையணி சந்தித்த முதலாவது போட்டியே T20 உலக கிண்ணம் அதிலும் வெற்றி. அத் தொடரிலும் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானிடம் இலங்கையணி தோற்றது. இரண்டாவது T20 உலக கிண்ணப் போட்டியில் இறுதிவரை சென்று தோற்றாலும் பாக்கிஸ்தானை இலங்கை குழு நிலை போட்டிகளின் போது தோற்கடித்தமை ஆறுதல் தரக்கூடிய விடயம். தொடர்ந்து வந்த காலம் இலங்கை கிரிக்கட்டுக்கு ஒரு பொற்காலமாகவே இருந்தது. அதே பலத்துடன் தெற்காசிய நாட்டு மண்ணில் நம்பிக்கையுடன் சங்ககார தலைமையில் 2011 உலககோப்பை தொடரை எதிர்கொண்டது. எல்லோரும் எதிர்பார்த்த வகையில் இலங்கை - இந்திய அணியில் இறுதிப் போட்டியில் களம் புகுந்தன. எனினும் திறமை மிக்க இந்திய அணி உலகக் கோப்பையை தாய் மண்ணில் வெற்றி கொண்டது. இத்தோல்வியுடன் குமார் சங்ககார தனது அணித்தலைவர் பதவியை இராஜினாமா செய்தமை இலங்கைக்கு விழுந்த பேரிடியாகவே இருந்தது. அதனை தொடர்ந்து வந்த காலத்தில் இருந்து இன்றுவரை மீளமுடியாமல் தடுமாறி வருகிறது.

குமார் சங்ககாரவிற்கு 2011 ஜூலை 06ம் திகதி அதியுயர் கௌரவம் லோர்ட்ஸில் கொடுக்கப்பட்டது. அதாவது கிரிக்கட் பற்றி உரையாற்ற வேண்டும் என்று அவ் உரையை சரியாக பயன்படுத்திய சங்கக்கார இலங்கைக் கிரிக்கெட் எதிர்நோக்கும் அரசியல் தலையீடுகள் பற்றி தெளிவாக விளக்கமளித்தார்.

அவ் உரையை எதிர்பார்க்காத அரசாங்கம் பொது இடங்களில் உரையாற்ற சங்ககாரவிற்கு தடைவிதித்தது. அத்தடையானது இப்பொழுதும் நீடிப்பது குறிப்பிடத்க்கது.

கடந்த ஓரிரு வருடங்களில் இலங்கை கிரிக்கட் அணியானது. மூத்தவீரர்களின் கையில் தங்கி இருக்கும் நிலை தொடர்ந்து வருகிறது. இன்றைய இலங்கை அணி மஹெல ஜயவர்தன, குமார் சங்ககார, திலகரத்ன டில்ஷான் ஆகிய மூத்த வீரர்களின் உதவியில் துடுப்பாட்டத்தில் முழுப்பலத்துடன் காணப்படுகிறது. இவர்கள் மூவரின் துடுப்பாட்டம் இல்லாதவிடத்து துடுப்பாட்டம் பாரிய பின்னடைவை எதிர்நோக்கும் என்பது யாவரும் அறிந்ததே.

மிகுதி அடுத்த வாரம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES

### கொழும்பில் புதிய பொழுது போக்குப் பூங்கா

அரசாங்கத்தினால் பொழுது போக்கு பூங்கா கொழும்பில் அமைப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.
இந் நிர்மானிப்பானது வெளிநாட்டு சுற்றுப்பிரயாணிகளுக்கு அவர்களுடைய ஓய்வு நேரத்தினை கழிப்பதற்கு பிரயோசனமானதாக இருக்கும்.
இந் நிர்மானிப்பில் குறைந்தது 2000 மோட்டார் வாகனங்கள், 10 பேருந்துகள், 500 மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோக்களை தரிக்க போதுமான தரிப்பிட வசதி உள்ளடக்கப் படவுள்ளது.
இத்திட்டமானது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் சிபாரிசு செய்யப்பட்டது. இப் பூங்காவினை அமைப்பதற்கு 3.5 ஏக்கர் நிலம் தேவைப்படும் என்றும் இதற்கான இட ஒதுக்கீடானது இலங்கை தொடர்பாடல் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிகின்றது. இத் திட்டமானது விவசாய பீட மொரட்டுவ பல்கலைக்கழக திட்ட ஆலோசனை பிரிவினால் முன்னெடுக்கப்படும். இப்புதிய திட்டத்தில் 350 மீற்றர் உயரமுடைய பலநோக்கு தேவையுடன் தொலைக்காட்சி, தொலைத்தொடர்பு கோபுரங்களும் உள்ளடக்கப்படும்.

### படைகளும் அரச ஊழியருக்கும் விசேட வீட்டுக்கடனுதவி

படைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள் போன்றவற்றில் பணிபுரியும் அரசின் ஊழியர்களுக்கு விஷேட வீட்டுக்கடன் திட்டமொன்றை ஆரம்பிக்க அரசு எண்ணியுள்ளது.

அதன்படி அரசின் திட்டமான நில்செவன வீடமைப்புத் திட்டத்தின் கீழ் எவ்வாறு மேற்கூறப்பட்ட ஊழியர்களுக்கு கடனை வழங்க வேண்டும் என்ற ஒழுங்குவிதிகளை உருவாக்கவென அமைப்பொன்றை உருவாக்க அமைச்சர்கள் விளைந்துள்ளனர். இக் குழுவில் நிதியமைச்சின் செயலாளர், வீடமைப்பு அமைச்சு, கட்டுமான மற்றும் எந்திரவியல் அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்வாங்கப்படுவர் எனத் தெரிகின்றது.

### கடும் நிதி நெருக்கடியில் அரசு

பாதீட்டில் கடும் நெருக்கடியைச் சந்தித்துள்ள இலங்கை அரசு அந் நெருக்கடியிலிருந்து தப்பிவருவதற்காக வரிகளை அதிகரிக்கவும், மானியங்களைக் குறைக்கவும் முடிவு செய்துள்ளதாகத் தெரிகின்றது. நிதி நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக பொதுச் செலவீனங்களைக் குறைக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. இத் திட்டங்களால் நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாது போனால் மேலும் கடன் வாங்குவதை அரசு கருத்தில் கொள்ளும். ஆனால் இவ்வாறு மேலும் அரசு கடன் வாங்குமானால் எதிர்காலத்தில் மேலும் பெருந்தொகை பாதீட்டில் துண்டு விழும் என அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

ஏற்றுமதி வருமானத்தில் கடும் வீழ்ச்சி காணப்படுகின்ற அதே வேளை இறக்குமதிச் செலவீனமானது அதிகரித்திருப்பதாலேயே அரசு இந்த நெருக்கடியை எதிர்கொள்கின்றது. அதன்படி இவ்வருடத்தின் முதல் அரையாண்டில் ஏற்றுமதி வருமானம் 3 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்து 509.4 பில்லியன் ரூபாய்களாக இருக்க, இறக்குமதிச் செலவீனம் 3.3 வீதத்தால் உயர்ந்து 861.6 பில்லியன் ரூபாய்களாக உள்ளதாகத் தெரிகின்றது. தற்போதைய நிலையில் அரச உத்தியோகத்தர்கள் கட்டுக்கடங்காமல் நியமிக்கப்பட்டிருப்பதனால் அச் செலவினைப் பொறுப்பதற்கே அரசு தடுமாறி வருவதாக பெயர் குறிப்பிட விரும்பாத அலுவலர் ஒருவர் தெரிவித்தார். இன்றைய திகதியில் சுமார் 1.4 மில்லியன் அரச அலுவலர்கள் சேவையிலுள்ளதாகவும் அதன்படி 4 குடும்பங்களுக்கு ஒரு அலுவலர் வீதம் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதனால் இலவச சேவைகளைப் பெருமளவில் குறைப்பதற்கும் அரசு யோசித்து வருவதாகவும் அதன் விளைவுகளை எண்ணி அரசு கலக்கமடைந் திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள வரி வீதங்களை சரியான காலத் தவணைகளுக்குள் மீளாய்வு செய்து அவ்வக் காலங்களிலேயே வரி வீத அதிகரிப்பைச் செய்யும் திட்டத்தையும் அரசு எண்ணியுள்ளது.

### சீனாவின் ரயில்கள் இந்தியத் தடங்களில்

வடமாகாணத்திற்கான தொடருந்துச் சேவைத் தடங்களை இந்திய அரசின் நிதியுதவியுடன் நிறுவி வரும் அரசு அத் தடங்களின் மீது பயணிப்பதற்காக சீனத் தொடருந்துகளைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் இருப்பதாகத் தெரிகின்றது.

கொழும்பிலிருந்து வடக்கின் காங்கேசன்துறை மற்றும் மன்னார் தீவுகளை நோக்கி புதிய தடங்களில் சுமார் 6 தொடருந்துச் சேவைகளை நடாத்த அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கான தொடருந்துகளை ஏற்கனவே சேவையிலுள்ள தொடருந்துகளிலிருந்து எடுப்பதாயின் கடும் நெருக்கடியைத் தொடருந்துத் திணைக்களம் எதிர்கொள்ளும் என அமைச்சர் குமார வெல்கம் தெரிவித்துள்ளார். அதனால் தொடருந்துத் தடங்களின் நிர்மானப்பணி முடிவடைய இருக்கும் இத் தருணத்தில் அத் தடங்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான தொடருந்துகளை சீனாவிலிருந்து கொள்வனவு செய்யும் முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இக் கொள்வனவை சீன எக்ஸிம் வங்கியின் கடனுதவியின் ஊடாக பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்த அவர் அக் கொள்வனவிற்கு சுமார் 9.92 பில்லியன் ரூபாய்களைச் செலவிட வேண்டியிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் சீனாவைத் தவிர எவரும் எமது தேவைக்கேற்ப 9 மாத காலப்பகுதிக்குள் தொடருந்தை உற்பத்தி செய்து தரக் கூடிய நிலையில் இல்லை என்றும் அவர் தெரிவித் திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

### சண்டே லீடர் ஊடகவியலாளர் தாக்கப்பட்டார்

ஆயுதம் தரித்த ஐவரடங்கிய குழுவொன்று சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளரான மந்தனா ஸ்மயிலின் வீடடினுள் நுழைந்து அச்சுறுத்தியுள்ளனர்.

பெற்றோருடனும் சிறுவயது மகளுடனும் தனித்திருந்த மந்தனாவின் கணவர் அக் கணம் வெளியில் சென்றிருந்த வேளையிலேயே இத் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. பெற்றோர் மற்றும் குழந்தையைக் கத்தி முனையில் அச்சுறுத்திய அவர்கள் தமக்குத் தேவையானவற்றைத் தேடி எடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டனர். அவ் வேளை வெளிச் சென்றிருந்த கணவர் திரும்பி வீட்டுக்கு அருகில் வந்த போது சந்தேகத்திற்கிடமான நடத்தைகளை அவதானித்து அவசர காவல்துறை இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொண்டுள்ளார். அதைத் தொடர்ந்து உரிய இடத்திற்கு வருகை தந்த காவலருக்கும் கொள்ளையருக்குமிடையே நடைபெற்ற சண்டையில் கொள்ளையன் ஒருவன் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமாகியுள்ளார்.
மேலும் 7 பேர் காயங்களிற்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிகின்றது.

### நிலக்கீழ் ஆய்வுக்கு 60 மில்லியன் அமெரிக்க டொலர்

இலங்கையில் இருக்கும் என நம்பப்படும் நிலத்தடி கனிய வளங்களை ஆய்வு செய்வதற்கு சுமார் 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என இலங்கை மதிப்பிட்டுள்ளது. இதற்கென விஷேடமாக விமானம் ஒன்று கொள்வனவு செய்யப்படுவதற்காக இத் தொகையினை செலவிடவுள்ளதாகவும் இப்பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு வங்கி ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ள முன்னெடுப்புக்கள் நடப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்செய்தியினை நிலத்தடி ஆய்வு மற்றும் கனியவள நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

### சிராணியிடம் இருந்து உள்ளக தகவல்களை எதிர் பார்க்கும் பொதுநலவாயம்

பணிநீக்கப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவிடம் இருந்து அவரது பணிநீக்கம் தொடர்பான ஆவணங்களையும், கருத்துக்களையும் பொதுநலவாய அமைச்சின் செயலாளர் நாயகம் சிராணி பண்டாரநாயக்கவிடம் கோரியுள்ளார்.

### இராணுவ படையணிகள் யாழ்ப்பாணத்தில் குறைக்கப்பட்டுள்ளது

இராணுவமானது தொடர்ச்சியாக இராணுவ படையணிகளை யாழ்ப்பாணத்தில் குறைத்து வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினரால் 46 வீடுகள் மற்றும் 55 ஏக்கர் நிலம் வள்ளிக்குளம் மற்றும் வடமராட்சி உரிமையாளர்களுக்கு கையளிக்கப்பட்டது.

சண்டே லீடருக்கு இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய கூறுகையில் யுத்தத்தின் பின் வடக்கில் இருந்து இராணுவ படைகளை குறைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதன் அடிப்படையில் 2007 இல் 45,000 ஆக இருந்த இராணுவ எண்ணிக்கை தற்போது 15,000 ஆக குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே வடக்கில் 18,000 ஏக்கர் நிலத்தில் அமர்த்தப்பட்ட இராணுவம் தற்போது 5500 ஏக்கர் நிலப்பரப்பிலேயே அமர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்தார்.

## The Sunday LEADER

### பராஸ் சவுக்கத்தலி சுட்டுக்காயப்படுத்தப்பட்டமை தொடர்பாக 5 பேர் கைது

"சண்டே லீடர்" பத்திரிகையின் புலனாய்வுத்துறை ஊடகவியலாளர் "பராஸ் சவுக்கத்தலி" மீது நடத்தப்பட்ட கொலைத் தாக்குதல் தொடர்பாகச் சந்தேக நபர்கள் 05 பேரைக் கொண்ட கும்பல் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மௌண்ட்லவணியா நீதிமன்றத்தினால் கடந்த 21ம் திகதி புதன்கிழமை விளக்க மறியலில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இக் கொலை முயற்சி தொடர்பாக ஐந்து காவல்துறை அணிகள் ஆழ்ந்த விசாரணைகளில் ஈடுபட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்தே இந்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும் இவ்விடயம் தொடர்பாக கசிந்த தகவல் யாதெனில் இக் கும்பல் சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணப்பகுதிகளில் தொடர் கொள்ளைகளில் ஈடுபட்ட கும்பலென்றே தெரியவருகின்றது. அதற்காகவே இவர்கள் கைதாகியுள்ளனர்.

### இந்திய மீனவர்களுக்கான அத்துமீறலை தடுக்க புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படும்

இந்திய மீனவர்கள் இலங்கை கடலில் அத்துமீறி மீன்பிடிப்பதற்கான புதிய சட்டம் ஒன்று விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது என அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்தார். அவர் கூறுகையில் இந்திய மீனவர்கள் இலங்கை கடலினுள் மீன்பிடிப்பதற்கான புதிய நடைமுறைகளை ஏற்படுத்தப் போவதாக கூறினார். இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக மீன்பிடி முறைகளை உபயோகிப்பதன் மூலம் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு கடல் மீன்களின் இனப்பெருக்கமும் இல்லாதொழிக்கப்படுகின்றது. இதனால் மீன் இனங்கள் அழிவடைகின்றன. அண்ணளவாக 1000 மீனவப் படகுகள் இலங்கை கடலில் காலை 2.00 மணி தொடக்கம் மாலை 4.00 வரை மீன் பிடித்தலில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டிய அவர் இதனைத் தடுப்பதற்கே புதிய சட்டங்களை உருவாக்குவதாக தெரிவித்தார்.

### இறந்து மீண்டும் உயிருடன்

பிலடெல்பியாவில் பெண் ஒருவர் இறந்து விட்டார் என அடையாளம் காட்டப்பட்டதை அடுத்து அவரின் குடும்பத்தாரினால் மரணச் சடங்கு நிறைவேற்றப்பட்டு இரண்டு கிழமைகளின் பின் மேற்படி பெண் உயிரோடு இருந்த சம்பவம் ஒன்று பலதெனியாவில் நடைபெற்றது. 50 வயதினை உடைய சரோலீன் ஜெக்சன் என்பவரே மனநல மருத்துவமனையில் கடந்த கிழமை கண்டுபிடிக்கப்பட்டார்.

இவருடைய உடல் ஜுலை 20ம் திகதி அன்று பிலடெல்பியா வீதியில் கண்டு பிடிக்கப்பட்டது. சரோலீன் ஜெக்சனின் மகன் ஒரு சமூக சேவையாளர் ஆவார். இவரே அச் சடலம் சரோலீன் ஜெக்சனின் உடையது என அடையாளம் காட்டினார் என சுகாதார அலுவலக பேச்சாளர் கூறினார். அதன் படி சடலம் மரணச் சடங்கின் பின புதைக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் சரோலீன் மன நல மருத்துவமனையொன்றில் உயிருடன் இருப்பது கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் புதைக்கப்பட்டவர் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. அதனை நிவர்த்திப்பதற்காக அவ்வுடல் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### போராளிகளுக்கு வாழ்வாதார கடன் உதவிகள்

போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் போராளிகள் மீளவும் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பலாம். இதற்கென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் 585 மில்லியன் தொகையை புனர்வாழ்வு அமைச்சிற்குக் கையளித்துள்ளார்.
கடன் வழங்கும் திட்டம் அருகில் உள்ள இலங்கை வங்கி கிளைகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் அக் கடனுக்கான விண்ணப்பங்கள் கிராம சேவையாளர், பிரதேச செயலாளர் ஊடாக கச்சேரிக்கு அனுப்பிவைக்கப்படவும் வேண்டும் எனத் தெரிவித்தார். விண்ணப்பத்தின் ஆகக் கூடிய கடன் வழங்கும் தொகை 250,000.00 ரூபாவாகவும் அத்துடன் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பயனாளிகளுக்கு தொழிற்பயிற்சிகளும் புனர்வாழ்வுத் திட்டத்தினூடாக வழங்கப்படும் எனவும் இவ் வாழ்வாதார [illegible]த்திற்கான விண்ணப்பங்கள் [illegible]மைப்பு அதிகார சபைக்கு அனுப்பப்படுவதன் மூலம் இவ்வருடமே

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

வாழ்வாதார கடன் வழங்கும் திட்டம் அமுலிற்கு வரும் என்றும் தெரிவித்தார்.

### வடக்கிற்கு ஒவ்வாத அரசியலினால் அழிவே மிஞ்சும்

வடக்கிற்கு ஒவ்வாத அரசியல் நடவடிக்கைகளினால் முழு நாடுமே நன்மை அடையப் போவதில்லை என பிரதி சபா நாயகர் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் என கேட்டுக் கொண்ட அவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை தவறான வழியில் பிரயோகிப்பார்களாயின் இலங்கையில் சனநாயக போக்கில் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார். இதனால் இறுதியில் வட மாகாணத்தில் உள்ளவர்களே கடும் தீமை அடைபவர்களாக இருப்பார்கள் என்றும் தெரிவித்தார். தமிழ் சமூகத்தின் அரசிற்கான எந்த ஒரு அடிப்படையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு கொண்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான

## பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 06

பகுதி *I*

1. உயிர் வாழும் சுவடுகள் என அழைக்கப்படுபவை எத்தகையவை?
   1. சுவட்டு சான்றுகளிற்கு மத்தியில் உருவான அங்கி
   2. இயக்கமில்லா நிலையில் உள்ள அங்கி
   3. பல மில்லியன் வருடங்களாக தொடர்ந்து மாறாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அங்கி
   4. பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து அழிந்த அங்கிகளின் பரம்பரை அலகுகள் அறியப்பட்டு அதே போன்ற அங்கிகள் குளோனின் முறையில் உருவாக்கப்பட்டு பெறப்பட்ட அங்கி

பகுதி *II*

01. கரைப்பான் எனப்படும் பதார்த்தம் ஒன்றும், கரையம் எனப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதார்த்தங்களும் சேர்ந்து ஒரு தன்மையான கலவையாக அமைந்திருக்கும் நிலை கரைசல் ஆகும்.

1. பளிங்காக்கல், மீள் பளிங்காக்கல் என்பவற்றால் கருதப்படுபவை யாவை?
2. $3.64g$ அப்பற்றைற்றினை $(Ca_3(PO_4)_2FCl)$ கரைத்து $5dm^3$ கரைசல் தயாரிக்கப்பட்டது. அக்கரைசலின் செறிவு யாது?
3. பின்வரும் கரைப்பானில் கரையக்கூடிய கரையங்களினைத் தருக.
   அ. அசற்றோன் ஆ. எதனோல்
   இ. மண்ணெண்ணெய் ஈ. வட்ட ஹெக்சேன்
   உ. தெரப்பந்தைன்
4. பின்வரும் சூத்திரங்களின் இரசாயனப் பெயர்களைத் தருக.
   அ. $HOCl$ ஆ. $Na_2S$
   இ. $Na_2SO_3$ ஈ. $Na_2SO_4$
   உ. $NaHSO_4$
5. அரச நீர் எவ்வாறு உருவாக்கப்படுகிறது?
6. உலோகப்போலியின் 3 இயல்புகளை தருக.
7. நீரேற்றப்பட்ட $Na_2CO_3$ இன் $(Na_2CO_3.10H_2O)$ $71.5g$ இனை வெப்பமேற்றிய போது பெறப்படும் நீரின் மூல் எண்ணிக்கை யாது?
8. $CaC_2$ இனை நீருடன் தாக்குவதன் மூலம் பெறப்படும் வாயுவின் பயன்கள் 3 தருக.
9. வீட்டில் பயன்படுத்தப்படும் காட்டிகள் 4 தருக.
10. நியமக்கரைசல் தயாரிக்கும் முறையைத் தருக.

02. இனப்பெருக்கம் என்பது உயிரினங்களின் அடிப்படை பண்புகளில் ஒன்றாகும். மனித முட்டை மற்றும் விந்துகளின் கலப்பே மனித இனப்பெருக்கத்தின் முதல் கட்டமாகும்.




1. $A, B, C, D$ எனும் எழுத்துக்கள் குறிக்கும் பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. விந்தினது அமைப்பை வரைக.
3. சுக்கில பாயிமம் என்பது எதனைக் குறிக்கும்?
4. ஆண் இனப்பெருக்கத் தொகுதியிலுள்ள சுரப்பிகளையும், அவற்றின் தொழில்களையும் தருக.
5. $1ml$ சுக்கிலப் பாயத்தில் காணப்படும் விந்துக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ எவ்வளவு?
   விந்துக்களின் எண்ணிக்கை எவ்வளவை விடக் குறைவடையும் போது குழந்தையொன்றைத் தோற்றுவிக்க முடியாது?
6. கருக்கட்டல் எப்பகுதியில் நடைபெறும்?
7. ஒரு சூலகத்தினால் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை சூல் விடுவிக்கப்படும்?
8. சூலிடல் என்றால் என்ன?
9. ஒவ்வாத இரட்டைக் குழந்தைகள் எவ்வாறு பிறக்கின்றன?
10. முதிர் மூலவுரு எப்பகுதியினூடாக எவ்வாறு தாயிடமிருந்து போசணையைப் பெற்றுக்கொள்ளும்?
11. முளையத்தைச் சூழக் காணப்படும் மென்சவ்வுகள் எவை?
12. "பிரசவ வலி" என்பதால் யாது விளங்குகின்றீர்?
13. முழுமையான கர்ப்பத்தடை என்பதை விளக்குக.
14. பெண் இனப்பெருக்கத் தொகுதியில் ஓமோன்களின் பங்குகளை விளக்குக.
15. ஆண்களின் மலடாக்கல் சத்திரசிகிச்சை எப்பகுதியில் நிகழ்த்தப்படுகிறது?

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்,
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புன்னாலைக்குளம்.

### பாடம் - கணிதம், 06

21. காரணி காண்க. $ax-ay-by+bx$
22. $2x+y=4$, $x+2y=3$ எனின், $(x-y)$ எவ்வளவு?
23. பொருள் ஒன்றை ரூபா 660 இற்கு விற்பதால் $10\%$ இலாபம் கிடைக்கிறது எனில், பொருளின் கொள்விலை யாது?
24. உருவில் தகவல்களுக்கு ஏற்ப $x$ இன் பெறுமானத்தைக் காண்க.




25. $a=4$, எனின், $2a^2-b$ இன் பெறுமானத்தைக் காண்க.
26. உருவில் $AB$ யின் நீளம் $6cm$, $\angle ABC$ எப்பொழுதும் செங்கோணமாக இருக்கக்கூடியவாறு புள்ளி $C$ அசைகின்றதாயின், $C$ யின் ஒழுக்கு யாது?




பகுதி *B*

1. ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் $\frac{1}{5}$ பங்கை மகளுக்கும், எஞ்சியுள்ள பணத்தின் $\frac{1}{4}$ பங்கு வீதம் இரு மகன்மாருக்கும் வழங்கினார்.
   அ. மகளுக்கு வழங்கிய பின் எஞ்சியுள்ள பணத்தின் பின்னம் என்ன?
   ஆ. எஞ்சிய பணத்தின் என்ன பின்னம் இரு மகன்மாருக்கும் வழங்கப்பட்டது?
   இ. எஞ்சிய பணத்தை மனைவிக்கு வழங்கினால் மனைவிக்கு வழங்கிய பணம் ரூபா 6400 எனின், அவரிடம் ஆரம்பத்தில் இருந்த பணம் எவ்வளவு?

02. ஆண்டின் தொடக்கத்தில் மாலா ரூபா 4000 தை இட்டு ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தார். அதற்கு 3 மாதங்களின் பின்னர் விமலாவும், அதிலிருந்து 3 மாதங்களின் பின்னர் சுதாவும் ரூபா 4000 வீதம் இட்டு வியாபாரத்தில் இணைந்தனர். ஆண்டின் இறுதியில் வியாபாரத்திலிருந்து ரூபா 36000 இலாபம் கிடைத்தது.
   அ. மூவருக்கும் இடையே இலாபம் பிரிக்கப்படவேண்டிய விகிதத்தைக் கண்டு அதனை மிக எளிய வடிவில் தருக.
   ஆ. இதற்கேற்ப மூவருக்கும் கிடைக்கும் இலாபத்தை தனித்தனியே காண்க.
   இ. கூடுதலாக இலாபம் பெறுபவர் யார்?
   ஈ. அவரது இலாபத்தை அவர் இட்ட பணத்தின் சதவீதமாக தருக.

03. ஓர் அந்தத்தில் அரைவட்ட வடிவிலான செவ்வக பூப்பாத்தியின் பரும்படிப் படம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன் நீளம் $21m$, அகலம் $14m$ ஆகும்.




*I* அ. அரைவட்டத்தின் ஆரை யாது?
   ஆ. அரைவட்டப்பகுதியின் பரப்பளவு யாது?
   இ. பூப்பாத்தியின் பரப்பளவு யாது?

*II* மறு அந்தத்தில் பூப்பாத்தியினுள் அரைவட்ட வடிவிலான தடாகம் அமைக்க வேண்டியுள்ளது.
   அ. தடாகத்தின் பரும்படி படத்தினை உருவில் குறித்துக் காட்டுக.
   ஆ. தடாகத்திற்கு ஒருத்தப்பட்ட பகுதி தவிர எஞ்சிய பூப்பாத்தியின் பரப்பளவு யாது?

04. ஆடை உற்பத்தி நிறுவனம் ஒன்று உற்பத்தி செய்த ஆடைகளை மொத்த வியாபார நிலையம் ஒன்றிற்கு 10 சட்டைகள் கொண்ட தொகுதி ஒன்றை $20\%$ இலாபம் கொடுத்தார். மொத்த வியாபாரி ஒரு சட்டையை $4\%$ இலாபம் வைத்து நுகர்வோரிற்கு கொடுத்தார்.

   அ. நுகர்வோர் ஒரு சட்டையை ரூபா 1872 இற்கு வாங்கினார். எனின், மொத்த வியாபாரி ஒரு சட்டையை வாங்கிய விலை யாது?
   ஆ. 10 சட்டை கொண்ட தொகுதியில் மொத்த வியாபாரி வாங்கிய விலை யாது?
   இ. மொத்த வியாபாரி ஒரு சட்டையை விற்கும் போது 5% கழிவு கொடுத்திருந்தால் நுகர்வோர் என்ன விலைக்கு சட்டையை வாங்கியிருப்பார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநீதம்பிள்ளை; உடைந்துபோன விம்பம்.

பல மாதங்களாக பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின், இலங்கைப் பயணம் முதற்கட்டத்தை நிறைவு செய்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வந்த நவநீதம்பிள்ளை, கொழும்பில் ஒரு சுற்றுச் சந்திப்புக்களை நடத்தி விட்டு, நேற்றுடன் வடபகுதிக்கான பயணத்தையும் முடித்துள்ளார்.

நேற்று முன்தினமிரவே திருகோணமலை வந்தடைந்த அவர், இன்று கிழக்கில் பயணங்களை மேற்கொண்ட பின்னர், கொழும்பு திரும்பி, அரசாங்கத் தரப்புடனும் எதிர்க்கட்சிகளுடனும் அடுத்த கட்டப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

நவநீதம்பிள்ளை இலங்கையில் கால் வைக்க முடியாது - தமது பிணங்களின் மீது தான் அது நடக்கும் என்று மிரட்டி வந்த சிங்கள அரசியல்வாதிகள் எவருமே, இப்போது வாய்திறக்காமல் மௌனமாக இருப்பதைக் காணமுடிகிறது. விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்ற அமைச்சர்களே கடந்த காலங்களில் நவநீதம்பிள்ளை இலங்கை வந்து நிலைமைகளைப் பார்ப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று எச்சரித்து வந்தனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், கடந்த நான்கு ஆண்டுகளில் அவர்கள் இதுபோன்ற எத்தனையோ மிரட்டல்களை விடுத்திருந்த போதிலும் நவநீதம்பிள்ளை கொழும்பில் கால் வைத்த போது எல்லோருமே பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டார்கள். நவநீதம்பிள்ளை கொழும்பு வந்ததும் பெரியளவில் அவருக்கு எதிரான போராட்டங்களை நடத்தப் போவதாக எச்சரித்த எவருமே இதுவரை அவ்வாறான போராட்டங்களை கொழும்பில் நடத்தவில்லை.

கடந்த திங்கட்கிழமை, ராவண பலய அமைப்பு மட்டும் ஒரு போராட்டத்தை கொழும்பிலுள்ள இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதியின் செயலகம் முன்பாக நடத்தியிருந்தது. அதில் கூட, வழக்கமாக சிங்களத் தேசியவாத அமைப்புகள் நடத்தும் போராட்டங்களில் பங்கேற்கும் அளவுக்கு பெருமளவிலானோர் பங்கேற்கவில்லை.

சுமார் 100இற்கும் குறைவானோரே அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை விட பலமடங்கு அதிகமான பொலிசாரே அங்கு பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டிருந்தனர். சிங்களத் தேசியவாதத் தலைவர்களும் அமைப்புகளும், நவநீதம்பிள்ளையின் வருகையை விரும்பாது போனாலும் இத்தகைய கட்டத்தில் சகித்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கு இரண்டு காரணங்கள்



இருப்பதாகத் தெரிகிறது. சர்வதேச அமைப்பான ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை கொடுத்த பொறுப்பை நிறைவேற்றவே நவநீதம்பிள்ளை இலங்கை வந்துள்ளார். அவரது பயணத்தைக் குழப்பும் வகையில் மேற்கொள்ளக் கூடிய எந்த நடவடிக்கையும் இலங்கைக்கு மேலும் சிக்கலையே கொண்டு வரும் என்ற யதார்த்தத்தை சிங்களத் தேசியவாத தலைமைகள் ஓரளவுக்குப் புரிந்து கொண்டுள்ளன என்பது முதல் காரணம்.

அதற்காக, நவநீதம்பிள்ளையின் வருகையை அவர்கள் ஏற்றுக் கொள்வதாகக் கருத முடியாது. நவநீதம்பிள்ளையின் பயணத்துக்கு அவர்கள் ஒத்துழைக்காது போனாலும், வேறுவழியின்றி அமைதியாக இருந்து கொள்கிறார்கள்.

அடுத்து, போருக்குப் பிந்திய மனித உரிமை மீறல்கள் தெற்கிலுள்ள மக்களுக்கும் பல உண்மைகளை புரிய வைத்துள்ளது. குறிப்பாக அண்மையில் வெலிவேரியவில் நடந்த தாக்குதல் சம்பவம், போரின் போது என்ன நடந்திருக்கும் என்று சிங்கள மக்களை சிறியளவிலேனும் யோசிக்க வைத்துள்ளது.

இதனால், நவநீதம்பிள்ளையின் வருகை இலங்கைக்குப் பாதகமானது என்ற கருத்து தெற்கில் வலுக் குறைந்துள்ளதாகத் தெரிகிறது. இந்த நிலைமைக்குக் காரணம், அரசாங்கமும் இராணுவமும் தான் என்பதில் சந்தேகமில்லை.

ஒருவகையில், மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இது கைகொடுக்கும் ஒன்றாகவும் கருதலாம். போர் முடிவுக்கு வந்த பின்னர், போர்க் குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தெற்கில் கடும் எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன.

போரில் வெற்றியை ஈட்டிக் கொடுத்த படையினரை, குற்றக் கூண்டில் நிறுத்த விடமாட்டோம் என்று அரசாங்கமே, குரல் எழுப்பி தெற்கிலுள்ள மக்களைத் தூண்டிவிட்டது. ஆனால், போரின் போது நடந்த மீறல்களுக்கு பொறுப்புக்கூறியே ஆக வேண்டிய சூழல் மெல்ல மெல்ல உருவாகி வருவதை அண்மைய நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

உலக நாடுகள் இதனை வலியுறுத்திய போதெல்லாம் அதற்கு எதிராக குரல் கொடுத்த அரசாங்கம், சர்வதேச அழுத்தங்களைத் தவிர்ப்பதற்காக மெல்ல மெல்ல தனது பிடியைத் தளர்த்த வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது, திருகோணமலை மாணவர்கள் கொலை தொடர்பான விசாரணை உள்ளிட்ட விடயங்களில் அரசாங்கம் தனது இறுக்கமான பிடியைத் தளர்த்தியுள்ளது.

இவை தொடர்பாக முற்றிலும் சுதந்திரமானதாகவோ, நடுநிலையானதாகவோ விசாரணைகளை மேற்கொள்ளத்தக்க பொறிமுறைகளை அரசாங்கம் உருவாக்காது விட்டாலும் ஓரளவுக்கேனும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய விசாரணைகளின் விளைவாக, படையினர் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டால் கூட, அதற்கு தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து எதிர்ப்புக் கிளம்பப் போவதில்லை என்பதை நவநீதம்பிள்ளையின் பயணம் பெரும்பாலும் சுமுகமாகவே இடம்பெறுவதைக் கொண்டு உணர முடிகிறது.

நவநீதம்பிள்ளையையும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையையும், இலங்கைத் தீவையே விழுங்கப் போகும் பெரிய பூதமாகக் காண்பித்து, தெற்கிலுள்ள மக்களை மிரட்டி வந்த அரசாங்கத்துக்கும் சரி, சிங்களத் தேசியவாத சக்திகளுக்கும் சரி, இனிமேல் அத்தகைய விம்பத்தை காட்ட முடியாது. மிரட்ட முடியாது.

அதுபோலவே, தமது பிணங்களில் மீது கால்வைத்து தான் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வரமுடியும் என்று மிரட்டியவர்களாலும் இனிமேல் அத்தகைய மிரட்டல்களை விடுக்க முடியாது.

**கேசஞ்சயன்**

நன்றி - தமிழ்மிரர்

# தாகங்கள் தீர்த்து மகுடம் சூடட்டும்




தனிநாயகம் அடிகளைச் சிறப்பித்து மலர்ந்த மகுடத்தின் 5 வது வெளியீட்டைப் பார்க்க முடிந்தது.

விபுலாநந்தரைப் பேசுமளவிற்கு தனிநாயகம் அடிகளை யாரும் கண்டுகொள்ளாதிருந்த நிலையின் வெளிப்பாடும் அரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு இவ்விதழை வெளியிட்ட ஆசிரியர் வி.மைக்கல் கொலின் தனது வெளியீட்டு ஆழத்தை பலப்படுத்தியிருப்பதும் இதழின் அட்டைப் படத்தை பார்க்கின்ற போது பாராட்டப்பட வேண்டியதாகும். கவிஞர் நிலாதமிழின்தாசனின் "அப்பனுக்குப் போட வொண்ணா அந்தப் பிடி மண்ணை" என்ற கவிதை நயக்கத்தக்கது.

சாநந்தனுடைய எழுத்துக்களைப் பார்த்திருக்கிறேன். யார் இந்த சாந்தன் என்ற கேள்வி எனக்குள் இதுவரை காலமும் இருந்து கொண்டே வந்தது. இன்று மகுடத்தில் ''எல்லா உணர்வுகளுக்கும் பெயர் உண்டா?'' என்ற அவரது நேர்காணலால் எனது கேள்விக்கு பதில் கிடைத்தது மாத்திரமல்ல, தான் அறியப்படாதிருப்பது பற்றி தனக்கும் நட்டமில்லை அறியாதவர்களுக்கும் நட்டமில்லை என்ற அவரது பதில் கூடப் பிடித்திருந்தது. இவருடைய பதிலை பலர் கர்வம் என நினைக்கக் கூடும். ஆனால் பற்று இல்லாத ஒரு படைப்பாளியாகவே இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறு விலகி நின்று பார்க்கும் போது இன்னும் பல ஆழமான படைப்புக்களை இவரால் வழங்க முடியும் என்பதும் தெரிகிறது. சாந்தனைத் தெரிந்தாலும் தெரியா விட்டாலும் யாருக்கும் நட்டமில்லை என்பதை ஒரு நயத்துடன் வெளிக்கொணர்ந்த ஆசிரியர் வி. மைக்கல் கொலினுக்கு எனது நன்றிகள்.

''மீன் மகளீர்'' எனும் கி. கலைமகளின் ஆய்வுப் பார்வையில் அமைந்த கட்டுரை எதையுமே சிந்திக்காமல் மட்டக்களப்பின் மணிக்கூட்டு வளைவுகளைச் சுற்றி வருகின்ற மக்களை வளைத்துப் பிடிக்கும் முயற்சியாகவுள்ளது. மீன்மகளுக்கு கலை மகளால் விடுதலை கிடைக்கட்டும் வாழ்த்துக்கள்.

பெண்ணை சரிநிகர் சமானமாக நின்று எழுதுகின்ற அ.ச.பாய்வாவின் "பெண்ணை எழுதுதல்" கட்டுரையில் "இருபத்து நான்கு மணி நேரமும் தன்னுடன் படுத்துக்கொள்ள ஆணுக்கொரு பெண் தேவை" என்பது தான் மொத்த மொழியின் சாராம்சம் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு அப்பால் பெண்கள் பற்றிய கருத்து வாதங்களுக்கு எவ்விதமான விளக்கங்களும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது வெளிப்படையாகின்றது. ஆனால் இவர் இங்கு பாவித்துள்ள படுத்துக்கொள்ள என்ற சொல்லாட்சியைப் படிப்பவர்கள் அ.ச.பாய்வா ''துாசணத்தால் இலக்கியத்தை மகிழ்விக்கின்றான்" எனச் சொல்லப் போகின்ற விமர்சனங்களுக்குள் சிக்கிக் கொள்ளாத படிக்கும், தெளிவாகவும் சாதுர்யமாகவும் இன்னும் பல சொல்லாட்சிகளை அறிமுகம் செய்து வெற்றியடைய வேண்டும்.

நாங்கள் எவ்வளவு தான் நாகரிகமானவர்களாக இருந்தாலும் அல்லது நாகரிகம் அடைந்தவர்களாக நம்மைக் காட்டிக் கொண்டாலும் அல்லது அப்படி நடித்துக் கொண்டிருந்தாலும், இறுதியல் இப்படியான ஒரு சொல்லை சொல்கின்ற போது ஆத்மா திருப்திபட்டுக் கொள்வதும் அது சம்பந்தப்பட்ட பிரச்சினையும் தீர்ந்து போகின்ற மாதிரியான நிலை ஏற்படுவதும் உண்டு. இது ஏன் என்ற கேள்வியை நாங்கள் சில பெண்களுடன் சேர்ந்து பொழுதுபோக்காக உரையாடிப் பார்த்திருக்கின்றோம்.

இவ்வாறான வார்த்தைகளை நமது தமிழில் சொல்வதனால் ஊத்தைப் பேச்சுக்களில் பாலியல் பலவீனத்திற்கு அப்பாற்பட்டு ஏதோ ஒன்று இருப்பதாகவே படுகிறது. இந்த வகையில் உடலால் தொட முடியாத எல்லைகளை மொழியால் அவள் தொடவும் வேண்டும் என்ற அ.ச.பாய்வாவின் தொடரின் பின்னணியை, முன்னணியில் நிற்கின்ற எந்த பெண்ணியவாதிகள் நிரூபித்துக் காட்டுவார்களோ தெரியவில்லை இதனால் அ.ச.பாய்வா அவர்களின் பெண்ணை எழுதுதல் என்ற சிறுபார்வை பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொள்கின்றது. இவ்வாறாக தொடர்ந்தும் பல தாகங்களை மகுடம் தீர்த்து வைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

(கௌரிஸ்)



வெளியீட்டு விழாவின் பிரதம அதிதிகள்



முதற் பிரதி பெறும் வர்த்தகர் சங்கத் தலைவர் – அருகில் ஆசிரியர் மைக்கல் கொலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெருமையடையாதீர்கள்

உங்களின் குறையை சுட்டுகின்ற போது கண்ணாடி பெருமையடிப்பதில்லை. அது தன் கடமையைச் செய்து விட்டு கண்ணியமாய் ஒதுங்கிக் கொள்கிறது. நீங்கள் உங்களின் சகோதரருக்கு கண்ணாடியாய் இருக்கிறீர்கள். கடமையை செய்துவிட்டு கண்ணியமாய் ஒதுங்கிக்கொள்ளுங்கள். பெருமை, கர்வம், ஆணவம் முதலியவற்றை முற்றிலுமாக தவிர்த்துக் கொள்ளுங்கள். பெருமை இறைவனுக்கு மட்டுமே உரியது என்பதை மனதில் வையுங்கள்.

" உன் முகத்தை மனிதர்களை விட்டு (பெருமையாக) திருப்பாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! கர்வம் கொண்டு ஆணவம் கொள்வோரை ஏக இறைவன் நேசிக்கவே மாட்டான். உன்னுடைய நடையில் நடுநிலையை மேற்கொள்! குரல்களில் வெறுக்கத்தக்கது கழுதையின் குரல்தான்" (அல் குர்ஆன் 31: 18 ,19) -----கர்வமுடையோராய், வீண்பெருமை உடையோராய் இருப்பவர்களை ஏக இறைவன் நேசிப்பதே இல்லை (அல்குர்ஆன் -4 : 36)

'' தன்னுடைய ஆடையை பெருமையுடன் (தரையில்) இழுத்துக்கொண்டு செல்கிறவரை அல்லாஹ் மறுமையில் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான் " என இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி) நூல்: ஸஹீஹ் அல் புகாரி, ஹதீஸ் எண்: 5783, உண்ணுங்கள், பருகுங்கள், உடுத்துங்கள், தானம் செய்யுங்கள்: வீண்விரயம் செய்யாதீர்கள் : தற்பெருமை கொள்ளாதீர்கள் " என இறைத்தூதர் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ''விரயம் அல்லது தற்பெருமை ஆகிய இரண்டும் உன்னை அண்டாதவரை நீ விரும்பியதை உண்ணலாம் : நீ விரும்பியதை உடுத்தலாம் : " என இப்னு அப்பாஸ் (ரலி) கூறினார்.

நூல்: ஸஹீஹ் அல் புகாரி

பெருமைக்காரனுக்கு நரகம்தான் கதி என்பதை அறிந்து கொள்ளுங்கள், பெருமைக்காரனை நரகம் தன்னுள் வைத்தக்கொள்ளவதை பெருமையாகக் கருதுகிறது. சுவர்க்கமும் நரகமும் வாக்கு வாதம் செய்து கொண்டன.

"பெருமை அடிப்பவர்களுக்காகவும் ஆக்கிரமக்காரர்களுக்காகவும் நான் சொந்தமாய் ஆக்கப்பட்டுள்ளேன்" என நரகம் சொன்னது.



"எனக்கு என்ன நேர்ந்ததோ! மக்களின் பலவீனர்களும் அவர்களின் என்னுள் நுழைகிறார்கள்" என சுவர்க்கம் கூறியது. " நீ என் அருள் உன் மூலமே என் அடியார்களில் நான் நாடிய சிலருக்கு அருள் புரிகிறேன்" என அல்லாஹ் சுவர்க்கத்திடம் கூறினான். " நீ வேதனை (க்காகத்) தான் உன் மூலமே என் அடியார்களில் நான் நாடிய சிலருக்கு வேதனை கொடுக்கிறேன்'' என அல்லாஹ் நரகத்திடம் கூறினான்.

அவ்விரண்டில் ஒவ்வொன்றும் வயிறு நிரம்பத் தரப்படும். ஆனால், நரகமோ இறைவன் தன் காலை அதன்மீது வைக்கும் வரை வயிறு நிரம்பாது. இறைவன் காலை வைக்கும் போது " போதும்! போதும்! என கூறும். அப்போது தான் அதற்கு வயிறு நிரம்பும். மேலும் அதில் ஒருபகுதி மற்றொரு பகுதியுடன் இணைக்கப்படும்.

''அல்லாஹ் தன் படைப்புகளில் யாவருக்கும் அநியாயம் செய்யமாட்டான். ஆனால் வல்லவனும், மாண்புடையோனுமான அல்லாஹ் சுவர்க்கத்திற்கு என்றே (புதிதாகச்) சிலரைப்படைப்பான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல்: ஸஹீஹில் புகாரி,
ஹதீஸ் எண்: 4850

பெருமைக்காரர்கள் இந்த உலகத்திலும் இறைவனால் தண்டிக்கப்பட்டாலும் இதற்கு ஓர் முன்னுதாரணமே இருக்கிறது. இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கடுமையான எச்சரிக்கையாய் இதைக் கூறினார்கள்.

'' ஒருமனிதன் தன் கீழாடையை தற்பெருமையினால் (தரையில்) இழுத்துக் கொண்டே நடந்த போது அவன் (பூமியில்) புதைந்து போகும்படி செய்யப்பட்டான். அவன் மறுமை நாள் வரை பூமிக்குள் அழுத்திச் சென்று கொண்டேயிருப்பான்." என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவித்தவர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி)
நூல் : ஸஹீஹ் அல் புகாரி
ஷதீஸ் எண்: 3485

பெருமை அணுவளவு ஒருவரின் இதயத்தில் குடி கொண்டாலும் அவருக்கு சுவர்க்கம் கிடைக்காது, என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

''தன் இதயத்தில் அணுவளவு பெருமையை வைத்திருப்பவர் சுவர்க்கம் புகமாட்டார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவித்தவர் : இப்னு மஸ்ஊத் (ரலி)
நூல்: முஸ்லிம் -91

பெருமை இறைவனின் ஆடை , அதை அணிந்து கொள்ள நினைக்காதீர்கள். அதை நீங்கள் அணிந்து கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் அழிந்து போவீர்கள் இப்லீஸ் இறைவனின் உவப்பை பெற்றான். உயர்வடைந்து வானவர்களுடன் இருந்தான்.இப்லீஸ் இறைவனை வணங்குவதில் குறையேதும் வைத்ததில்லை, ஆனால் அவன் பெருமைக்காரனாய் இருந்தான். அதன் காரணமாய் அவனை நிரந்தர நரகவாசியாய் இறைவன் ஆக்கிவிட்டான்.

வானவர்கள் அளவிற்கு உயர்ந்த இப்லீஸையே பெருமையடித்த ஒரே காரணத்திற்காக இறைவன் தூக்கி எறிந்து விட்டான். என்றால் நீங்கள் பெருமையடித்தால் உங்களின் நிலை என்ன ஆகும் என்பதை சற்று எண்ணிப் பாருங்கள்.

எனவே என் அன்பிற்குரிய இஸ்லாமிய சகோதர சகோதரிகளே நரகத்திற்கு கொண்டு செல்லும் தீய குணமான இந்த "பெருமை" எமது உள்ளத்துள் வராது தடுத்துக் கொள்வதுடன், சுவர்க்கத்திற்கு செல்லும் மனிதர்களாக எம்மை இறைவன் மாற்றியமைப்பானாக.

"வஸ்ஸலாம்"

தொகுப்பு:-ஆப்தீன் முஹம்மது அக்ரம்
பாலநகர்
மூதூர் - 02.

## உணரப் படாத தீமைகள்

### வட்டி

நபி (ஸல்) அவர்கள் வியாபாரத்தை ஆகுமாக்கியும் வட்டியை ஹராமாக்கியும் உள்ளார்கள். ஆனால் இன்று வட்டியையும் வியாபாரத்தைப் போன்று கருதுகின்றனர். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். " வட்டி கொடுப்பவன் வட்டி வாங்குபவன் அதற்கு சாட்சியாக இருப்பவன் அனைவரும் தண்டனையில் சமனாகும்" என்று. எங்கு வட்டியும் விபச்சாரமும் அதிகரித்து விடுமோ அங்கு அல்லாஹ்வின் தண்டனை இறங்கும். வட்டியை உண்டு வளர்ந்த எந்த உடம்பும் சுவனம் நுழையாது. நாம் வட்டியை விலக்கி வியர்வை சிந்தி உழைத்து வாழ்வோமாக! நபியவர்கள் கூறினார்கள். உழைத்து காய்ச்சி போன ஒரு மனிதனின் கையைபிடித்து நபி(ஸல்) அவர்கள் முத்தமிட்டார்கள். எனவே நாம் வட்டியை முற்றிலும் ஒழித்து உழைத்து வாழ்வதற்கு அல்லாஹ் அருள்புரிவானாக.

ஜாபிர் முஹம்மட் றாபி
ஆனைச்சேனை
பள்ளிவீதி
மூதூர் -02.

# இயற்கையல்லாத உணவு வகைகளும் பானங்களும் அவற்றின் மூலம் உடலில் சேரும் நச்சுகளும்

***இன்று அதிகமான உணவுகள் எவ்வகையானவையாக இருக்கின்றது?***

அன்றாட வாழ்க்கையில் தினமும் நாம் உண்ணக்கூடிய உணவுகளும் பருகக்கூடிய பாணங்களும் செயற்கையானவையாகவோ அல்லது குறிப்பிடத்தக்க ஒரு இயற்கையான உணவில் இருந்து வேறுபட்டதாகவோ காணப்படுகின்றன.

அனேகமானவர்கள் சந்தையில் கிடைக்கக்கூடிய பல்வேறுபட்ட உணவுகளையும் பாணங்களையும் விரும்பி நுகரக் கூடியவர்களாகவும் அவை பற்றி தவறான நம்பிக்கையை உடையவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

வெகுசன தொடர்பு சாதனங்களில் இவ்வகை உணவுகள் பற்றி கவர்ச்சியான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

***ஏன் அதிக இனிப்பு பாணங்களும், உணவுகளும் உண்பதற்காக பாவிக்கப்படுகின்றது?***

இந்த உணவுகள் பாணங்கள் இனிப்புக்கள் பற்றி விசேட கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. ஏனென்றால் சந்தையில் விற்பனைக்கு வரும் மேற்படி உணவு வகைகளிலும் பாணங்களிலும் அடங்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் மிக ஆபத்தானவை இது பற்றி தெரியாமலே இவ்வையான உணவுகளை மக்கள் விரும்பி எடுக்க காரணமாக இருக்கிறது.

பொதுவாக நாம் நுகரக்கூடிய நூடில்ஸ் வகைகள், சூப் கட்டிகள், சொஸேஜ், ஜேம், அச்சாறு, சட்னி, புடிங் வகைகள், சொக்லட் டொபி, ஜெலி வகைகள், ஐஸ்கிறீம், மென்பானங்கள். சோடியம் வகைகள், கோதுமை மாவினால் செய்யப்பட்ட பேக்கரி உணவு வகைகள் முறுக்கு உணவுகள், பொரியல் உணவுகள் வெவ்வேறு விதமான பிரைட்ரைஸ் வகைகள், சைனீஸ் என்று பெயர் வைக்கப்படும் உணவுகள் என்பன பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

***எவ்வாறான உணவுகள் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது?***

பக்கட்டுக்களிலோ அல்லது போத்தல்களிலோ அடைத்து சந்தையில் விற்பனை செய்யப்படும் உணவுகள் இன்னும் வெவ்வேறு வகையான உணவுகள் கெடாமல் பாதுகாக்கவும், சுவைகளை ஊட்டவும், நிறங்களை கொடுக்கவும் ஆபத்தான இரசாயனங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவைகள் உடல் நலத்துக்கு மிகவும் கெடுதி விளைவிக்கக் கூடியது. அவைகளை பின்வருமாறு சுருக்கமாக விபரிக்கலாம்.

***எவ்வகையான நோய்கள் உடனடியாக உருவாகின்றது?***

சுவையூட்டிகள் இயற்கையான வெவ்வேறு வகை பழ வர்க்கங்கள் போன்றவற்றின் சுவைக்கு நிகரான இரசாயன பகுப்புக்களாகவும் இவைகள் இருக்கலாம். இது (Flavours) என்று குறிப்பிடுவார்கள். வெறும் தண்ணீருக்கு அப்பில் சுவையூட்டியை கலந்தால் அது அப்பில் போன்ற சுவையை கொடுக்கும் இவ்வாறான சுவையூட்டிகள் உணவுச் சமிபாட்டை சிக்கல் செய்யவும், மூளைக்கலங்களை பாதிக்கவும் அதிக வியர்வையை உருவாக்கவும், இரத்தம் தொடர்பான கோலாறுகளை உருவாக்கவும் ஏதுவாகின்றது.

இனிப்பூட்டிகளாக உதாரணம் :- சக்கரின், தலைசுற்று, தலைவலி, புற்றுநோய்க் காரணி, நரம்புத் தளர்ச்சி போன்றவற்றை ஏற்படுத்தும் நாம் விரும்பிச் சாப்பிடும் ஐஸ்கிறீம் வகையில் இது காணப்படுகிறது.

நிறமூட்டிகள் :- பேக்கரி இனிப்புப் பண்டங்கள் வண்ண வண்ண கேக் வகைகள், பிஸ்கட் வகைகள் குழந்தைகளுக்கான இனிப்பு வகைகள், பூச்சி நருக்கு உணவுகள் போன்றவற்றில் இருந்து இந்த நிறமூட்டிகள் பரவலாக பயன்படுத்தப்படுகிறது. இவை சிறுநீரகங்களை பாதிக்கவும், ஈரல் தொடர்பான நோய்களை தோற்றுவிக்கவும் இரைப்பை புற்றுநோயை உருவாக்கவும் காரணமாகிறது.

உணவு கெடாமல் பாதுகாப்பவை :- இதனை Preservatives என்பார்கள். இவற்றினால் என்புகள் பலவீனம் ஏற்படுகிறது. புற்று நோயையும் உருவாக்கலாம்.

இவை தவிர்ந்த இன்னும் இன்னோரன்ன இரசாயனப் பொருட்கள் உணவுகளில் கலக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட உணவுப் பக்கட்டுக்களில் அவற்றில் அடங்கியுள்ள போசணை பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆனால் இது மாயை.

***வேறு எவ்வாறான உணவுகள் நோயப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவை?***

இயற்கை உணவு போல் அன்றி செயற்கை உணவுகளில் மிதமிஞ்சிய போசணை அகத்துறிஞ்சப்பட்டு ஆரோக்கிய கெடுதலை ஏற்படுத்தலாம். அவற்றில் அடங்கக் கூடிய கூடுதலான சக்கரை, உப்பு, கொழுப்பு, புரதம் என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டும். இதன் விளைவாகவே அதிக பருமன் அதிக கொலஸ்ரோல், அதி குருதி அழுக்கம் என்பன ஏற்பட்டு இதய நோய்களை ஏற்படுத்துகிறது. மேலும் உடலில் சேரும் இன்னோரன்ன இரசாயனங்களின் விளைவாக நீரிழிவு நோய்க்கான வாய்ப்பும் உறுதி செய்யப்படுகிறது. பாடசாலை செல்லும் மாணவர்கள் செயற்கை உணவுகளை அதிகமாக நுகர்வதன் விளைவாக பாடசாலை செல்லும் மாணவர்களிலேயே 18% (உலக சுகாதார நிறுவனம் WHO) நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

***உணவுகளில் அடங்கியுள்ள அதிக போஷாக்கு நோய் ஏற்பட இடமுண்டா?***

என்புகள் பாதிக்கப்பட்டு மூட்டுவருத்தங்களையும் சிறுநீரகக் கல், பித்தக்கல் என்பவற்றையும் உருவாக்கக் காரணமாகிறது. மேலும் இதே அமிலங்களினால் பற்களின் மினிறி சேதமுற்று பற்சிதைவு ஏற்படுகிறது. அதிக கல்சியம் காரணமாக குழந்தைகளின் பல்வரிசையும் பாதிக்கப்படலாம்.

இது தவிர நாம் சாப்பிடக்கூடிய தொதல், மஸ்கட் என்பவற்றின் மூலம் சிறிய அலுமினியம் துகள்கள் உடலை அடைகிறது. நாம் சமையலுக்கு பாவிக்கும் அலுமினியப் பாத்திரங்கள் கரைந்து உணவில் அலுமினியம் சேருகின்றது. இது சிறுநீரகங்களுக்கு ஆபத்தானது. மண் அல்லது சில்வர் பாத்திரங்களை சமையல் செய்ய பாவிப்பது சிறந்ததாக இருக்கும்.

**டாக்டர் கே.எல்.எம். நக்பர்**
**மருத்துவப் பொறுப்பதிகாரி**
**அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலை**
**நிந்தவூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது...

மாறி புலிகளால் கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என ஒலிக்கத் தொடங்கியது.

செயலகத்தில் கூட்டத்தினை முடித்துக்கொண்டு ஆணையர் கிழக்கின் ஆளுனரை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலின் போது கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீளகுடியேற்றம் மற்றும் போருக்குப் பின்னரான அமைதிச் சூழலை உருவாக்கும் அரசின் முயற்சிகள் தொடர்பாக விரிவாகப் பேசப்பட்டதாகத் தெரிகின்றது. அக்கலந்துரையாடலின் போது கிழக்கின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் தமக்குத் திருப்தியளிப்பதாக ஐ.நா ஆணையர் தமது கருத்தைத் தெரிவித்ததாக நம்பகமற்ற செய்தியொன்றும் தெரிவிக்கின்றது.

இக் கலந்துரையாடலையும் முடித்துக்கொண்டு ஆணையர் சுமார் மதியம் 3மணி 10 நிமிடங்களுக்கு கிளிவெட்டியிலுள்ள இடைத்தங்கல் முகாமிற்கு வருகை தந்துள்ளார்.



. அங்கு முகாமினுள் ஆணையாளரும் அவரது அலுவலக மெய்ப்பாதுகாவலர் நால்வர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் உட்பட ஐவர் மட்டுமே சென்று மக்களைச் சந்தித்தது பெரும் அதிர்ச்சியைப் பல தரப்பினருக்கும் ஏற்படுத்தியிருந்தது.

ஊடகவியலாளர் அடையாளங் களைத் தாங்கியிருந்தவர்களைக் கூட உட்செல்ல அனுமதிக்கவில்லை என்பதுடன் அரச அலுவலர்களோ, படையதிகாரிகளோ அவர்களுடன் செல்ல அனுமதிக்கப் படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்க பொது மக்களைச் சந்தித்துப் பேச்சிலீடுபட்ட ஆணையரிடம் முகாம் மக்கள் தமது மனக் கிலேசங்களைத் தெளிவாக வெளிக்காட்டியிருந்தனர். அம் மக்களது கோரிக்கைகளுள் முக்கியமாக அபிவிருத்தியின் பேரால் அபகரிக்கப்பட்டுள்ள தமது சொந்த நிலங்களில் உண்மையாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எடுக்கப்பட்டுள்ள நிலத்தினைத் தவிர்த்து ஏனைய நிலப்பகுதிகளைத் தமது பாவனைக்காக மீட்டுத்தர வேண்டும் என்னும் கோரிக்கை வலுப்பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. அவ்வாறான நிலப்பகுதிக்குள்ளேயே தமது பெரும்பாலான விவசாய நிலங்கள் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அடுத்து போர்க்காலப் பகுதியில் கடத்தப்பட்டுக் காணாமற் போனோரின் நிலைகளைக் கண்டறிய வேண்டும் என்ற கோரிக்கையும் மக்களால் விடப்பட்டிருந்தது. தமக்கான உலர் உணவு வினியோகத்தை மீள ஆரப்பிக்க வேண்டும் எனக் கோரிய மக்கள் அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுள் வீதிப் போக்குவரத்து மிகச் சீர்செய்யப்பட்டிருப்பதனைப் பாராட்டியுள்ளதாகவும் தெரிகின்றது.

அதனைத் தொடர்ந்து மக்கள் பலவகையான கோரிக்கை மனுக்களை ஆணையரிடம் கையளித்துள்ளனர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்துள்ள ஆணையர் உலர் உணவு வினியோகம் தொடர்பாக அரசுடன் பேசுவதாகவும், மீள்குடியேற்ற விடயத்தைத் தம்மால் முயன்ற அளவு விரைவுபடுத்துவதாகவும், தீர்வு முயற்சிகளுக்கான அடிப்படைத் தேவையாக மனித உரிமை இருப்பதைக் கோடிட்டுக் காட்டியதாகவும் அங்கிருந்தான செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் முகாம் ஆணையரின் வருகையை ஒட்டியே அரச அதிகாரிகளால் சீராக்கப்பட்டுத் துப்புரவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆராய...

அதைத் தொடர்ந்து மாகாணசபை 27ம் திகதி காலை கூடிய போது, அவையில் முன்னெடுக்கப்பட்டு விவாதிக்கப் படவேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. அப்போது மேற்படி தன்நபர் பிரேரணை தொடர்பாகக் கலந்துரையாடிய கட்சித் தலைவர்கள் இவ்விடயம் தொடாபாக விவாதிப்பதற்கு முன்னர் உண்மை நிலையைக் கண்டறியும் குழுவொன்றை (Facts Finding group) உருவாக்கும் முடிவை எடுத்துள்ளனர்.

அக்குழுவின் முன்மொழி வுகளுக்கு ஏற்ப அடுத்த மாகாண சபை அமர்வில் இப் பிரேரணை தொடர்பாக விவாதிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய உண்மை நிலையறியும் குழுவில் கிழக்கு மாகாணத்தின் முதலமைசர், எதிர்க்கட்சித் தலைவர், கல்வி அமைச்சர், மாகாண சபை உறுப்பினர் ஜெயந்த விஜயசேர உட்பட ஐவரைக் கொண்ட குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

## நவியும் ஹக்கீமும்..

படப்பிடிப்பாளர்களும் அமைச்சுக்கு சென்றிருந்தனர்.

ஆணையாளருக்கும் அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு ஆரம்பமாகிய போது, சந்திப்பு நடைபெற்ற அறையில் மாத்திரமின்றி வெளியிலும் இருப்பதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் ஊடகவியலாளர்களுக்கு தடைவிதித்தனர்.

ஊடகவியலாளர்களை ஒரு அறையில் வைத்து மூட பாதுகாப்பு அதிகாரிகள் முயற்சித்த போதிலும் ஊடகவியலாளர்கள் அதனை மறுத்தனர். பேச்சுவார்த்தை நடைபெற்ற அறைக்கு அனுமதிக்கப்படாமை குறித்து ஊடகவியலாளர்கள் எந்த அதிருப்தியையும் கொண்டிருக்கவில்லை என்றாலும் அறைக்கு வெளியில் இருக்க அனுமதிக்கப்படாமையானது ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் முயற்சி என ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இந்தியத் தமிழர்கள்..

மூலமே இந்தச் சந்தேகம் எழுந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனத்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள 2012ஆம் ஆண்டு அறிக்கையின் படி கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவின் சனத்தொகை 64,451. இதில் முஸ்லிம்கள் 58,447 பேர் எனவும் தமிழர் 2,522 பேர் எனவும் இந்தியத் தமிழர் 3,445 பேர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல சிங்களவர் 19 பேர் இருப்பதாகவும் இலங்கைச் செட்டிகள் 2 பேர் இருப்பதாகவும் எந்த இனம் என அடையாளம் காண முடியாதோர் 13 பேர் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உண்மையில் இந்தியத் தமிழர் எவரும் கிண்ணியாவில் இல்லை. எனினும் 3,445 பேர் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே சிங்களவர் 19 பேரும் இல்லை. செட்டிமார் என யாரும் இல்லை. எந்த இனம் என அடையாளம் காண முடியாதோரும் இல்லை. கிண்ணியாவில் நிரந்தரமாக வசிக்கின்ற, கிண்ணியாவைப் பற்றி நன்கு தெரிந்தோர் அனைவரும் இதனை ஏற்றுக் கொள்வர். இப்படியான நிலையில் சனத்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களம் ஏன் பிழையான தகவலை வெளியிட வேண்டும்.

இங்கு இந்தியத் தமிழர், செட்டிமார், இனம் அடையாளம் காண முடியாதோர் எனக் குறிப்பிடப் பட்டிருப்பதெல்லாம் முஸ்லிம்கள் தாம் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு முஸ்லிம்களின் எண்ணிக்கையை வேறு இனமாகப் பிரித்துக் காட்டுவதன் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்டுவதே அரசின் நோக்கமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

## தங்கையின்...

மரணச் சான்றிதழில் அவரது பெயருக்குப் பதிலாக அவரது தங்கையின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தமை பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது.

போரில் கணவனை இழந்த யமுனாராணி தனது ஒரேயொரு குழந்தையைக் காப்பதற்காக சவூதிக்குப் பயணமாகியிருந்தார். அவ்வாறு பயணமாகும் போது தங்கையின் பெயரிலேயே அவர் பயணமாகியிருந்ததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

## புலமைப் பரிசில் பரீட்சையாளர்களைத் தூக்கி வந்தது காவல்துறை

கல்குடா நாமகள் வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற விருப்பின்றி வீடுகளில் மறைந்திருந்த ஏழு சிறுவர்களைக் காவல்துறையினர் அள்ளி வந்து பரீட்சை நியைத்தில் ஒப்படைத்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

மாணவர்கள் பரீட்சைக்குச் சமூகமளிக்கவில்லை என்ற தகவலைப் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் அங்கு காவல் கடமையிலிருந்த காவல் துறையினருக்குத் தெரியப் படுத்தியிருந்தார்.

இத் தகவல் உடனடியாகவே பொதுப் பாதுகாப்புக் குழுக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து அக்குழுக்களும் காவல்துறையினரும் இணைந்து விசேட படையணியொன்றை உருவாக்கி ஒளிந்திருந்த மாணவர்களை கண்டு பிடித்து பரீட்சை நிலையத்திற்கு அள்ளிச் சென்று ஒப்படைத்துள்ளனர்.

இந் நடவடிக்கையின் போது தனது தம்பியைக் கவனிக்கும் பொறுப்பிலிருந்த பெண் குழந்தையொன்றைத் தவிர ஏனைய அனைவரும் அள்ளிச் செல்லப்பட்டுள்ளனர்.

## கித்துள் மற்றும் உறுகாமம் குளங்கள் இணைப்பு

சித்தாண்டி மற்றும் கிரான் வரையிலான பல கிராமங்களுக்கு நன்மை பயக்கும் விதமாக கித்துள் மற்றும் உறுகாமம் குளங்கள் இணைக்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக மீள்குடியேற்றப்பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். இவ்விணைப்பால் மேற்கூறப்பட்ட கிராமங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு தடுக்கப்படுவதுடன் மேலும் பல ஏக்கர்கள் விவசாயம் செய்ய முடியும் என அவர் தெரிவித்தார்.

இத் திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவு 2,500 மில்லியன் ரூபாய்களாகும். இவ்விணைப்பின் பயனாக தற்போது செய்கை பண்ணப்படும் நிலங்களை விட மேலும் சுமார் பதினைந்தாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ண முடியும் என தெரிகின்றது.

## பேஸ்புக் வழியாகப் பாலின்ப அழைப்பு – காவல்துறை விசாரணைக்குக் கோரிக்கை

பேஸ்புக் வழியாக பாலின்பத்தைத் தன்னுடன் பகிர வருமாறு பெண்ணொருவர் அழைப்பு விட்டதைத் தொடர்ந்து இவ்விடயத்தைக் காவல்துறை விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது.




மட்டக்களப்பில் திடீரெனப் பெண்ணொருவரின் படத்துடன் இவ்வழைப்பு வெளியாக அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. கடந்த 28ம் திகதி குறித்த பெண்ணின் படத்துடன் இவ் அழைப்பு வெளியானது. அவ்வழைப்புத் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொது அமைப்புக்கள் பல காவல்துறையிடம் மனுச் செய்துள்ளன.

## வடக்கையும் கிழக்கையும் மீள இணைக்கச் சதி

கிழக்கு மாகாணத்தை மீண்டும் வடக்கு மாகாணத்துடன் இணைத்து வெளிநாடுகளின் தேவைக்கேற்ப நம்மை ஆட்டிப் படைப்பதற்கு சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்தார்.

அதேவேளை எமது சிறியதொரு நாட்டுக்கு மாகாண சபை முறைமை தேவைதானா என்று நாம் சிந்திக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் ஏற்பாட்டில் தமிழ் மொழி [illegible] உள்ளூராட்சி டிப்ளோமா பாடநெறியை நிறைவு செய்த ஊழியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.


அமைச்சர் அதாவுல்லா

உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி ஐ.ஏ.ஹமீட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கித் தனது உரையை ஆற்றினார்.

(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் இஸ்மாயில் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகிற்கு எடுத்துக் காட்டாகும் வடக்கின் வெற்றி

### கதிர்காமத்தம்பி பிரகாஸ்

தமிழ் தேசியத்துக்கு நடைபெறவிருக்கும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஒட்டுமொத்த தமிழர்களும் காட்டும் ஆதரவு முழு உலகுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமையவேண்டும். போராட்ட காலங்களில் உயிரிழந்த போராளிகளினதும், பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் இறப்புக்களின் பின்னால் பல வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன இதற்கு நாம் அனைவரும் தலைசாய்ந்து எதிர்வரும் வடமாகாண சபை தேர்தலில் எவ்வாறு ஒட்டுமொத்த தமிழ் மக்களை தேசியத்துக்காக வாக்களிக்க வைக்கவேண்டும் என அம்பாறை மாவட்ட தமிழரசுக்கட்சி இளைஞர் அணித் தலைவரும், நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மூன்றாம் நிலை பெற்ற கதிர்காமத் தம்பி பிரகாஸ் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட முக்கிய உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் கட்சியின் உறுப்பினர் அமிர்தலிங்கம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (23) பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏத்தத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் இஸ்மாயில்)

## உருவாகியது றிசானா நபீக் பௌண்டேசன்

சவூதி அரேபியாவில் மரண தண்டனைக்கு உள்ளான றிஸானா நபீக்கின் நினைவாக அமைக்கப்படவுள்ள றிஸானா நபீக் பவுண்டேஸனஸ் அமைப்பின் அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் 2013.09.01ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று மூதூரில் இடம்பெறவுள்ளது.

எஸ்.எப்.எம். அமைப்பின் தலைமை நிறைவேற்று அதிகாரி முஹம்மது மஹ்ரூப் தலைமையில் மூதூர் அந்-நஹார் மகளிர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ள இவ்வைபவத்தில் றிஸானா நபீக்கின் பெற்றார் மற்றும் உறவினர்களோடு முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது றிஸானா நபீக் பவுண்டேஸனும் அதற்கான உத்தியோகபூர்வ இணையத்தளமொன்றும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதேவேளை, பணிப் பெண்களாக வெளிநாடு சென்று பாதிப்பிற்குள்ளானவர்களின் பிள்ளைகள் மூவருக்கு அவர்களின் கல்வியைத் தொடர்வதற்கு புலமைப்பரிசில் மூன்றும் வழங்கப்படவுள்ளன. பெண்கள் பணிப் பெண்களாக வெளிநாடு செல்வதற்கான காரணத்தை இல்லாமற் செய்வதற்கான முன்மாதிரியான திட்டங்களை செயற்படுத்துவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு இவ்வமைப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதென்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## முத்திரை வரியை வேகமாகப் பெற முயற்சி

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களிற்கான முத்திரை வரியினை துரிதமாக பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் குறித்த மாகாண மட்ட குழுக்கூட்டம் திருகோணமலையிலுள்ள முதலமைச்சர் செயலகத்தில் புதன்கிழமை (28) மாலை நடைபெற்றது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ்வருடம் டிசெம்பர் மாதத்திற்கு முன்னதாக 2011ஆம் ஆண்டுவரை நிலுவையாக உள்ள முத்திரை வரிகளை வழங்க முடியும் என இறைவரி திணைக்கள அதிகாரிகாளினால் இங்கு தெரிவிக்கப்பட்டது.

காணிப் பதிவுகளின் போது நிகழும் பெறுமதி மோசடியால் முத்திரை வரியிழப்பை எதிர்கொள்வதாக இங்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை நிவர்த்திக்க தேவையான வழிவகைகளை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி மன்றத்தினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அத்தோடு மாநகர சபையின் சீரான செயற்பாட்டிற்கு முத்திரை வரி வருமானம் பாரிய பங்களிப்பினை செய்வதனால் அவற்றை விரைவாக வழங்குமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

## கிழக்கு மாகாண சபையில் சலசலப்பு

கடந்த 27ம் திகதி கூடிய கிழக்கு மாகாண சபையில் அங்கத்தவர் களல்லாத அரச உயர் அதிகாரிகளும் அவையில் இருந்ததால் சலசலப்பு உருவாகியிருந்தது.

27ம் திகதி காலை 9.00ற்கு ஆரம்பமான கிழக்கு மாகாண சபை அமர்வுகளைப் பாாவையிட வட மாகாண சபையின் உயர்தர அலுவலர்கள் வருகை தந்திருந்தனர். அவர்கள் பார்வையாளர் கலறியில் அமராமல் அவையினுள் அமர்ந் திருந்தனர்.

இதனை ஆளும் தரப்பு கண்டிக்க முனையவே எதிர்த்தரப்பு அக்கண்டனத்தை எதிர்க்கத் தொடங்கியது. அதனால் அமளி துமளிப்பட்ட மாகாண சபையிலிருந்து வட பார்வையாளர்கள், பார்வையாளர் இருப்பிடத்திற்கு மாறிய பின்னரே சபை மீண்டும் தொடங்கியது.

## பிள்ளை வருகையால்

## பிச்சைப் பணம்

கடந்த 2006 ம் ஆண்டில் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்படாத கிளிவெட்டி முகாம் மக்களுக்கு திடீரென சமுர்த்திப் பண உதவி 25.08.2013ல் வழங்கப்பட்டுள்ளது. குடும்பமொன்றின் அங்கத்தவர் தொகைக்கு ஏற்ப சமுர்த்தி உதவி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு அங்கத்தவருக்கு ரூபா 350 வீதம் ஆகக் கூடியது ரூபா 1500 வரை குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதுடன் இவ் உதவி தொடர்ந்து வழங்கப்படும் எனவும் உறுதிமொழிகள் உதிர்க்கப்பட்டதாக அங்கிருக்கும் எம் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## தலைவரின் வாழ்க்கை படமாகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாழ்க்கையை விபரிக்கும் திரைப்படத்தை உருவாக்க இருப்பதாக இந்தியத் திரைப்பட இயக்குநர் வ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

சந்தனக்காடு தொலைக்காட்சி தொடரின் மூலம் அறியப்பட்டு மகிழ்ச்சி திரைப்படத்தில் நாயகனாக நடித்தவர் வ.கௌதமன். இவர் இயக்கப் போகும் புதிய திரைப்படம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பற்றியதாம்.

இவ்விடயம் தொடர்பாக இயக்குநர் வ.கௌதமன் கூறுகையில், “பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை விபரிக்கும் திரைப்படமாக இப்படம் இருக்கும்.



அவரின் சிறு வயது முதல் நந்திக்கடல் யுத்தம் வரையில் அவர் நடாத்திய யுத்தங்களை உள்ளடக்கிய அனைத்தையும் திரைப்படமாக்க திட்டம் இட்டுள்ளோம்.

அதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் யாவும் நிறைவடைந்துள்ளன. இந்த திரைப்படத்துக்கான பெயர் பின்னர் அறிவிக்கப்படும்” என்றார்.

## கல்முனையுடன் கைகோர்க்குமா?

## “ஸ்தான்புல்”

கல்முனை நகரை ஸ்தான்புல் நகருடன் நட்பு ரீதியாக இணைக்கும் முயற்சிகள் தொடர்பான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகளை கல்முனை நகர மேயர் வைத்தியர் மிரா சாஹிப் மேற்கொண்டுள்ளார்.

கடந்த 28ம் திகதி துருக்கியத் தூதுவருடன் சந்திப்பொன்றை ஏற்படுத்திய நகரமேயர் மேற்படி விடயத்தைப் பற்றிப் பேசியுள்ளார்.

அக்கலந்துரையாடலில் கல்முனை நகரின் தேவைகளைப் பட்டியலிட்டு அவற்றை நிறைவேற்ற எவ்வாறு துருக்கி உதவிசெய்ய முடியும் என்பது பற்றியும் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

INSTITUTE OF BANKERS OF SRILANKA.(IBSL)
2013 உயர்தர பரீட்சை எழுதிய
மாணவர்களுக்கான IBSL முழு நேர
வகுப்புகள் செப்ரம்பரில் ஆரம்பம்
CBF மற்றும் DBF
வேல் வர்த்தகக் கல்லூரி
IBSL 159A, கடல்முக வீதி, திருகோணமலை
0262227622/077023201

aat SRI LANKA கணக்காளராக ஆசையா?
உயர் தரத்துடன் நீங்களும் கணக்காளராகலாம்......
2013 உயர்தர பரீட்சை எழுதிய
மாணவர்களுக்கான aat வகுப்புகள்
செப்ரெம்பர் முதல் ஆரம்பம்.
முழு நேர பகுதி நேர வகுப்புக்கள்
வேல் வர்த்தக கல்லூரி,
159A, கடல்முக வீதி,
திருகோணமலை.
0262227622/077023201



படர்க்கை
திருகோணமலையிலிருந்து வெளிவர இருக்கும்
கலை, இலக்கிய, கல்விப் பண்பாட்டுச் சஞ்சிகை
தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, அல்லது நேரிலோ
தங்கள் ஆக்கங்களை சமர்ப்பிக்கலாம்.
159A, 2ம் மாடி, கடல்முக வீதி, திருகோணமலை.
தொடர்புகளுக்கு : 0777555738 0754252042 padarkkai@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org